# இளந்தளிர்

## அருளானந்தம் அறிவுப்பெட்டக
## சிறப்பிதழ் 09



25-07-2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA

# மரங்கள் வளர்ப்போம்

கோவிலாக்கண்டி மேற்கு
தச்சன் தோப்பு
திரு. க. கந்தையா
திருமதி. க. கனகம்மா
நினைவு நிதியம்

தரிசாய் விடப்பட்ட பூமியெங்கும்
தயவாய் நாமிகு மரம் வளர்ப்போம்
எரியாய் கொழுத்தும் கதிரவனை
ஏனிந்தக் கொடுமை யென்றிடுவோர்
அறியாய்த் தனத்தில் பேசுகின்றார்
ஆருமிங்கே மரம்நட முனையார்
நெறிபல பேசும்மேன் மக்களும்
நேசத்தோ டொருமரம் வளர்த்தால்

வரட்சி நீங்கும் வளம்பலவும்
வாய்ப்பாய் வந்தெமைச் சேர்ந்திடுமே
திரட்சி கொண்டு மேகமிங்கு
தீராமழை நீர்கொண்டு தரும்
வீட்டி லுள்ளோர் மரம் வளர்த்தால்
வீணாய்க் கிடக்கும் நிலமனைத்தும்
விளைநிலமாகிப் பெருகி பசிப்பிணி
விலக்கிடுமே யதனால் மரம் வளர்ப்போமே.

9793(P)



16 SEP 2020
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளந்தளிர் ~ 9




**25-07-2020**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாண்புடையோர்களை மனதிலிருத்தி.........





25-07-2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LET'S

# BE ALERT

## விழிப்புணர்வுடன் இருப்போம்

**25.07.2020**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூல் | :- | இளந்தளிர் - 09 |
| வெளியீடு | :- | கந்தையா கனகம்மா நிதியம் |
| இதழாசிரியர்கள் | :- | செல்வி - லதா. கோபாலசிங்கம்<br>செல்வன் - வன்னியசிங்கம். கபிலன் |
| ஒப்பு நோக்குனர்கள் | :- | திரு. க. மயில்வாகனம்<br>திருமதி. தயாமதி குகறாசா<br>திருமதி. மதுமதி தீபன் திலீசன் |
| பக்கங்கள் | :- | vii + 113 |
| வடிவமைப்பு &<br>அச்சுப்பதிப்பு | :- | சுப்பிரமணியம் பிறிண்டிங் வேக்ஸ்<br>319/1, K.K.S வீதி,<br>யாழ்ப்பாணம். |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தளிரின் உள்ளே.........


இறைவணக்கம் vi
நிதிய கீதம் viii
நூல் ஆசிரியர் எண்ணங்கள்..... 1
காப்பாளர் அறிக்கை 3
அருளானந்தம் அறிவுப் பெட்டகம் 9
நூலகர் ஒரு சகாப்தம் 11
காந்தலட்சுமி அருளானந்தம் - சில நினைவுகள் 13
வேறொன்றுமில்லை நேரம் வந்திட்டுது, பிரிஞ்சு போயிட்டுதடி. 17
இறப்புனக்கில்லை 20
உணர்வுப் பகிர்வுகள் 21
உன்வாழ்க்கை படத்திற்கு நீயே இயக்குனர் 31
வெற்றியின் இரகசியம் 32
வட மாகாணக் கல்வி எதிர்நோக்கும் பிரச்சினைகள் ....... 34
படிப்பும் முடிப்பும் 40
அறம் சொன்ன தாத்தா 48
அட்டைப்படநாயகன் 49
சாந்தியைத் தேடுவோம் 52
நினைவுப்பகிர்வுகள் 56
வளமுடன் வாழ்வோம் 65
இயற்கையைப் பேணுவோம் 69
ஆராய்ந்தெழு 75
அருங்காட்சியகம் - ஒரு பார்வை 76
கற்றுக்கொள்வோம் 82
உளவியல் ஓர் அறிமுகம் 87
வாசிப்பு மனிதனைப் பூரணமாக்குகிறது 90
காடழிப்பதால் ஏற்படும் தீமை 92
ஆழ்கடலின் அதிசயங்கள் 93
ஆறுமுகநாவலர் 94
செழிப்புறு தாய் மண் 95
மாணவர்களின் தோழர்கள் 96
மனித உரிமையைப்பேணுவோம் 98
சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாப்போம் 100
நாம் சென்ற கல்வி சுற்றுலா 102
பரிசில் நாள் 2020 104




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டத்தில் நஞ்சடக்கிக் கொண்டானை

அரியானை அடியார் உளம்குடி கொண்டானை
அருமறையின் நாயகனை அம்பிகை பாலகனைப்
பெரியானைப் பீடுடைய வேலன்பிராய் அமர்ந்து
பேறெவர்க்கும் தந்து மிகக் காப்பானைத்
தெரியானைத் தேர்ந்தெடுத்துத் தொழுவார் தம்மைத்
தேனைநிகர் வாழ்வுதந்து காப்பானைக்
கரியானைத் தோலுரித்து அணிந்த மரந்த
பெற்றியனைத் தின முருகித் தொழுவோம்யாமே

அண்டமெங்கும் நிறைந்து நிற்கும் பெரியானை
அணுவிலு முள்ளுறையும் பெற்றியனைக்
கண்டவரும் விண்டவரும் தொழு தேற்றக்
காடுறைந்தும் கலகநாசம் செய்து காப்பானைக்
கண்டத்திலே நஞ்சடக்கிக் கொண்டவன் மகன்
காலமெல்லாம் காத்தருளும் வீர புத்திரனை
ஆண்டாண்டாய் வேலன்பராயுறை வித்தகனை
அனுதினமும் மனமுருகித் தொழுவோம் யாமே

வெற்றிபல தந்தருளும் வித்தகனை விறல்
வேங்கை யுரித்த ணிந்தவனின் புத்திரனைச்
சுற்றிநின்ற தேவரெலாம் கலங்கி நிற்கச்
சூழுடைய தக்கன் யாகம் கலைத்தவனை
முற்றிய ருகுவந்து வணங்கி நிற்கும்
மேதகு ஆச்சாரிமார் துயரறுக்க வந்தவனை
உற்றிருந்து கொண்டு அருள் புரிபவனை
ஊர்மக்கள் ஒன்றாகித் தொழுவோம் யாமே

அன்றாலின் கீழிந்து அருள் புரிந்தானை
அருகிருக்கும் மக்களையும் காத்தான் தன்னை
நன்றாவின் கன்றாய் நாம்பின் அலைந்தவேளை
நயங்கள் பலதந்து உயர்த்தி வைத்தானை
மன்றேறி வாதங்கள் புரிந்த போதும்
மாநிலத்தை வளமாக்கிக் காத்தான் தக்கனை
வென்றான பின்வந்து எம்மூர் உற்றானை
அன்றலர்ந்த மலர்தூவிப் பணிவோம்யாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காற்றையும் படைத்தாய், கடலையும் படைத்தாய்

நயங்கள்பல கேட்டாலும் தருவாய் தாயே
நாயகியே நீவந்தாய் எம்மூர் சிறக்க
பயங்களெமைச் சூழ்ந்த போதும் துணிவு
பாலித்து இடர்களி னைத்தீர்த்து வைத்தாய்
புயங்கள் வீங்கப் பொருதும் போதும்
பூதலத்தை வென்றுதர வருவாய் நீயே
மயங்கேன் இம்மாய வாழ்வில் நின்று
மாரியாய் நீவந்தாய் தொழுவோம் யாமே

சரணடைந்தேன் இன்று சாகசக்காரி உனை
சாக்காட்டைத் தருவாய் விரைவில் வந்து
அரணாக நின்றெம்மைக் காத்தாய் தாயே
அரனோடு நான்சேர வழிகாட் டின்று
காரணமாய் காரியங்கள் நிகழ்ந்த போதும்
காமாட்சி நின்னருளால் யாவும் நன்றே
தருணமிது வந்திங்கு தங்கிவிடு, தாரணியே
துட்டரிடை விலக்கிவிடு தொழுவோம் யாமே

காற்றையும் கடலையும் படைத்துத் தினமும்
கற்றுக் கொள்வோரை ஏற்றி வைத்தாய்
ஆற்றையும் அசையும் கோள்களையும் படைத்து
அவற்றிடையே விசையாகி இயக்கி நின்றாய்
போற்றுதர்க்காய் சிலையாய் நீயிங்கு அமர்ந்தாய்
பொங்கலிட்டுப் பூவும் வைத்து வணங்க
ஏற்றருள வேண்டுமம்மா எமதூரில் வந்து
எமைக் காத்தாய் தொழுவோம் யாமே

மறையோதும் மாந்தருடன் மற்றையோரும் காணா
மாற்றுக் கருத்துடையோரும் தொழுதெழவே
குறையேதும் இல்லாமல் மக்கள் வாழ
கூத்தாடியுடனே கூடிக் கூத்திடும் தாயே
முறையொன்று வகுத்துவிடு மக்கள் இங்கு
முயன்று வெல்ல மும்மலப் பிணிச்
சிறையெலாம் தகர்த்துவிடு முடமாகிப் போனேனை
சீரமைத்துத் தந்துவிடு தொழுவோம் யாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதிய கீதம்

அறமது துளிர்த்து அருள்மிகு பூத்து
அவனியில் இன்பம் குலவிடவே
நறுஞ்சுவைத் தமிழொடு நாடிய பயன்தரு
நெறிமிகு சைவம் துலங்கிடவே
வீறொடு வேலன் பிராய்வந் துறைந்திடு
வீரபத்திரன் விழியது நோக்க
திறன்தரு கலைகளும் கல்வியும் ஓங்கியே
வாழிய, வாழிய, வாழியவே.

அன்னை தந்தையை அகமதி லிருத்தி
அனுதினம் அவர்களின் பாதம் போற்றும்
தன்னிக ரில்லா வாழ்வினைத் தந்த
தலைவனை என்றும் மனதினில் போற்று
கன்னல் மொழிபேசிக் கருணையைக் காட்டு
கடமையை என்றும் கண்ணெனப் போற்று
துன்பம் விலக்கிநீ துணிவுடன் வாழ்ந்து
வாழிய. வாழிய, வாழி பல்லாண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னை சாந்தகுமாரி அம்மா நினைவாக நாவற்குழி மகா வித்தியாலயத்தில் அமைத்த மண்டபம்





அமரர் அருளானந்தம் நினைவாக நாவற்குழி பிரதேச சபை பொது நூலகத்தில் அமைத்த அறிவுப்பெட்டகம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்வும் வளமும்

### மகுட வாசகம்

கற்பதால் உயர்வோம், காலத்தை வெல்வோம்.

### குறிக்கோள்

சைவசமயத்தோர் மத்தியில் சமய உண்மை
நெறிகளை ஊட்டி மதத்தைப் பல்வேறு வகையிலும்
மறுசீரமைத்தல்.

### செயற்பாடு

கிராம மக்களிடையே சமயம் பற்றிய
தெளிவை ஏற்படுத்தும் வகையில்
பாடசாலை மாணவர்களைப் பயிற்றுவித்தல்

### இலச்சினை விளக்கம்

உலக இயக்கமே கருவிகளின் உதவியினால்த்தான் இலகுவாக நடைபெறுகின்றது என்பதைக் குறிக்கும் வகையில், விரிந்த புத்தகமும் அதனிடையே யாவுக்கும் அடிப்படையும் ஆரம்பகால தொழில்நுட்ப கருவிகளும் அமைவதால் புத்தகங்களை விரித்து அறிவாயுதத்தைக் கூர்மையாக்கி கருவிகளின் உதவியுடன் புதிய உலகைச் சமைப்போம்.

✠✠✠✠✠✠



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் ஆசிரியர் எண்ணங்கள்.....

இளந்தளிர் புதுக் குருத்தொன்றை விட்டுச் சிறக்கின்றது. அதன் பளபளப்பும் அழகும் எல்லோருக்கும் மகிழ்வுதரும். பயனும் தரும். இப்பிரதேச மாணவர்களுக்கு எழுத வாய்ப்பளிக்க மலர்ந்த இளந்தளிர், ஆர்வத்துடன் மாணவர்கள் தேடி அறிந்து தம் சொந்த நடையில் எழுதுவது கண்டு மகிழ்கின்றது. எங்காவது தேடி எவரிடமாவதறிந்து மெய்ப்பொருளுணர்ந்து எழுத வைக்கவே நாமும் விரும்புகிறோம். சொல்ல நினைப்பவற்றைச் சொல்லுவதற்கும் எழுத நினைப்பவற்றைச் சுவைபட எழுதுவதற்கும் துணிவும், தன்நம்பிக்கையும் வேண்டும். இத்துணிவையும் நம்பிக்கையையும் வளர்த்துவிடுவதே எம்நோக்கம். சொல்ல எழுத நினைப்பவற்றைச் சொல்பவனும் எழுதுபவனும் எதோ ஒருவிதத்தில் அவற்றுக்குக் கட்டுப்படுகிறான். அல்லது அவை இவனைக் கட்டுப்படுத்துகின்றன. இது அவனது ஆளுமை சுயகட்டுப்பாடு தலைமை தாங்கும் இயல்பை வளர்த்துவிடவே முன்மாதிரியான நன் நடத்தையுள்ள, ஒழுக்கம் மிகுந்த மாணவனாக மாறிவிடுகின்றான். இந்த மாற்றத்தையும் வளர்ச்சியையுமே நாம் எதிர்பார்க்கிறோம். மாற்றம் நிகழ்ந்து வருவதுகண்டு இறுமாப்பெய்துகிறோம். அதனால் அவனைத்தொடர்ந்தும் எழுதத்தூண்டுகிறோம். எழுதுவதற்காக வாசிக்கிறான். பின்னர் ஆழ யோசிக்கிறான் சீர்தூக்கிப் பார்க்கின்றான். தெளிவும் பெறுகிறான். நல்லவை எவை செய்யக்கூடியவை எவை என்பதைத் தீர்மானிக்கிறான் சுயதீர்மானம் எடுக்கும் இயல்பே ஒவ்வொரு மாணவர்களினதும் வெற்றியாகும். அவற்றை வளர்த்துவிடவே நாம் முயல்கிறோம் ஆதலால் இளந்தளிர் தொடர்ந்தும் வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளந்தளிர் 9 எம்மை நல்வழிப்படுத்தி ஊக்குவித்து இல்லாமல் போய்விட்ட அன்னை சாந்தகுமாரியின் புகைப்படங்களையும் அன்னை ஸ்ரீகாந்தலட்சுமி அருளானந்தம் அம்மாவின் புகைப்படங்களையும், அமரராகிவிட்ட அன்புத்தம்பி கந்தையா அருளானந்தம் அவர்களின் புகைப்படங்களையும் இவர்கள் எம்மீது கொண்டுள்ள அபிமானத்தையும் மனப்பதிவுகளையும் தாங்கி வருகின்றது. அவர்களின் வாழ்க்கை வரலாறும், அவர்கள் தங்கள் தங்கள் மனங்களில் ஏற்படுத்திய பதிவுகளையும் பிள்ளைகளும், அன்புடையவர்களும் எழுதியுள்ளனர். மாணவர்களின் ஆக்கங்களும் வெளிவருகின்றன. வழமையான ஆவணப்பதிவுகளும், சாதனை புரிந்த மாணவர்களின், கௌரவிக்கப்பட்ட மாணவர்களின் புகைப்படங்களும், சிறுகதைகளும், கவிதைகளும், துணுக்குகளும் இடம்பெறுகின்றன.

விழிப்போம், வேகமாக எழுவோம். இப்பிரதேசத்தை வளர்த்தெடுப்போம். வழமைபோல இச்சஞ்சிகையை வெளியிடவும் தயாரிக்கவும் அனுமதி வழங்கிய நிதியக் காப்பாளர் எம்நன்றிக்குரியவர். எம்மை எழுதவும், நூல்வெளியிடவும் தூண்டிக்கொண்டேயிருக்கிறார் ஆக்கங்கள் தந்து உதவிய அனைவருக்கும் நன்றி.

வழமைபோலவும், ஏனைய இளந்தளிர்களைப்போலவே இம்மலரையும் அழகுற அச்சுப்பதித்துத் தந்த சுப்பிரமணிய அச்சகத்தாருக்கும், ஊழியர்களுக்கும் நன்றிகள்.

செல்வி. லதா கோபாலசிங்கம்
செல்வன் கபிலன் வன்னியசிங்கம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காப்பாளர் அறிக்கை

காலைச் சூரியன் எழுதல்கண்டு கடும்துயில் நீங்கி எழுந்து, சோம்பல் அகற்றிக்கருமங்கள் ஆற்ற உலகம் தயார்ப்படுவதுபோல் மாணவர்களைத் தட்டி எழுப்பி, கற்கத்தூண்டி, சீர்தூக்கி அறியும் திறமையுள்ளவர்களாக ஆக்குவதன் மூலமே இப்பிரதேசம் முன்னர் இருந்தவாறு ஒழுக்கம் நிறைந்த, அன்புடைய, அயலவனை நேசிக்கின்ற சமூகமாக மாற்ற நாம் எடுத்துவருகின்ற முயற்சிகள் தொடர்ந்து கொண்டேயிருக்கும். ஈரேழு உலகிற்கும் தனித்தனி சூரியன் அவைகளுக்கான கோள்கள், எல்லாவற்றையும் ஈர்த்துப் பிணைத்து வைக்கும் சக்திதான் எம்மை இயக்குகின்றது. நாம் இயங்குகின்றோம் ஆற்றோடு செல்வது எளிது, எதிர்நீச்சலடிப்பதற்குப் பொறுமையும், துணிவும், விடாமுயற்சியும் வேண்டும். இறைவன் அதற்கான சக்தியை எமக்குத் தந்துள்ளான் எதிர்நீச்சலடிக்கின்றோம். கண்மூடிப்பின்பற்றும் எல்லா வழக்கங்களிலும் தெளிவு உண்டாக்க முயல்கின்றோம். முடியும் எனவும் நம்புகின்றோம். மாணவர்கள் வாசித்தறிந்து சீர்தூ க்கித் தெளிந்து முடிவெடுக்கவும், வாசித்தவற்றைக் கூற மேடையும் எழுத இளந்தளிரும் தருகின்றோம். மாணவன் எழுந்தால்தான் மாநிலம் சிறப்புறும். இவற்றுக்கான களங்கள் ஒவ்வொருவகையிலும் அமைத்துத் தந்து அவனைச் செம்மைப்படுத்தி அவன் பெற்ற கீர்த்திகளையும் பெருமைகளையும் தட்டிக்கொடுத்துக் கௌரவிக்கும் இவ்வினிய நிகழ்விலே இந்தக் காலைப்பொழுதிலே இங்கு ஒன்று கூடியிருக்கின்றோம். பல்வேறு வேலை நெருக்கடிகளுக்குள்ளும் இடையே நேரம் ஒதுக்கி இங்கு நேரத்துக்கு வந்து கலந்து சிறப்பிக்கின்ற உங்கள் அனைவரையும் வாழ்த்தி வணங்கி வரவேற்று மகிழ்வடைகின்றோம்.

எமது இன்றைய விருந்தினர்கள் அனைவரும் எமது பிரதேசத்துக்கு மிகச்சிறந்த சேவை வழங்கிய, ஓய்வுநிலைக்கல்விப் பணிப்பாளர்கள். திருமதி வசந்தாதேவி மேகலிங்கம் அவர்களோ, பணிப்பாளர் பதவியைப் புறக்கணித்து அதிபராகச் சேவையாற்றியவர். திரு. பிள்ளையினார் முத்துலிங்கம் ஐயா இப்பிரதேசத்தவர். இடப்பெயர்வு காலங்களில்கூட தம்மாலான சேவைகள் அனைத்தையும் எமது மாணவசமூக மேம்பாட்டுக்காக வழங்கியவர். திரு. சுப்பிரமணியம் கிருஷ்ணகுமார் ஐயாவும் திருமதி. வேதநாயகம் அம்மாவும் தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளராக இணைந்த பின்னர் எமக்கு அறிமுகமானவர்கள். எமது பிரதேசப் பாடசாலைகளுக்கு ஆளணி, பௌதீக வளங்களை வழங்குவதில் அதிக கவனமெடுத்தவர்கள் அவர்கள் வழங்கிய அர்பணிப்பான சேவைகளில் எமது பிரதேசம் கல்வி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைபண்பாடு என்பவற்றில் சிறந்து ஒழுகுகின்றது. இவர்கள் ஓய்வு காலத்திலும் ஓய்ந்துவிடாமல் தமிழின மாணவர்களின் கல்வி ஒழுக்கம் உடல் உள மேம்பாடுகளில் அக்கறையுடன் செயற்படுபவர்கள் இந்த அணியை இங்கே இன்று கூட்டிணைத்துள்ளோம். இந்தக் கூட்டிணைவு ஒரு நல்ல ஆரம்பமாக இருந்து எமது பிரதேசத்தின் வளர்ச்சிக்கு உதவவேண்டும் என விரும்புகிறோம். இத்தகைமையாளர்கள் என்றும் சுகமாகவும், ஆரோக்கியத்துடனும், சந்தோஷமாகவும் வாழ இறையருளைப் பிரார்த்தித்து, உரியநேரத்தில் சமூகம்தந்து சிறப்பித்தமையைப் பாராட்டிப் பணிந்து வணங்கி வரவேற்கிறோம். ஸ்ரீமுருகன் சனசமூகநிலையத் தலைவர் திரு. இராசையா இதயகுமார் இந்நிகழ்வைத் தலைமை வகித்து நடத்தித் தந்துகொண்டிருக்கிறார். இவர் இளவயதிலிருந்தே சமூக சேவைகளில் ஈடுபாடும் அக்கறையும் கொண்டு உழைத்து வருபவர். நல்ஆரோக்கியத்துடன் வாழ்ந்து மேலும் மேலும் சேவைகள் புரிய இறைவன் அருளவேண்டுகின்றோம்.

அறம் செய்வதை அம்பலத்தில் கூறுவது அறமல்ல, அழகுமல்ல. ஆயினும் வரலாற்றுப் பதிவுகள் இல்லாமல் அல்லது முறையாகப் பேணிப்பாதுகாக்காமல் விட்டதால் நாம்தமிழர் இழந்தவை அதிகம். கலாசாரம், மொழி, பண்பாடு, வாழ்வு முறை அனைத்தையும் இழந்து நிற்கிறோம். ஆதலால் எமது வரலாறுகளைத் திரித்துக் கூறுபவர்கள் எம்மை அடிமைகொள்ள முனைகின்றனர். ஆயினும் உண்மை உறங்காது ஒருநாள் வெளியாகும். பொறுமை பொங்கியெழுந்து எரிமலையாய் சீறும். அவ்வேளையில் இப்போது நாம் எழுதிப்பேணுபவை ஆவணங்களாகும் என்ற தளராத நம்பிக்கையுடன் எழுதுகின்றோம். வாசித்துப் பாதுகாத்து வையுங்கள்.

தனது பிள்ளைகள் மட்டுமல்ல, இப்பிரதேசத்து மாணவர்கள் அனைவருமே கற்றுயர வேண்டுமெனவும், அதற்காக உங்களாலியன்ற உதவிகளைச் செய்ய வேண்டும் என்ற பெருவிருப்பை கொண்டுடிருந்த எம் அன்னையின் நல் எண்ணத்தை நாம் இயன்ற அளவு செய்து கொண்டிருக்கிறோம். இறைவன் எமக்கு வலிமையும் துணிவும் முடிவெடுக்கும் ஆற்றலும் தந்து கொண்டேயிருக்கிறார். அந்தவகையில் (25-07-2020) இன்று நாம் பிரதேசபை நூலகத்திடம் கையளிக்கும் **அருளானந்தம் அறிவுப்பெட்டகம்** என்ற புத்தக அலுமாரியும் 700க்கு மேற்பட்ட புத்தகங்களும் மாணவர்களை வாசிக்கத்தூண்டி சிறந்த அறிவு பெறவேண்டும் என விரும்பியே கையளிக்கிறோம். அதிலும் குறிப்பாகக் தேர்ந்தெடுத்த புத்தகங்கள் யாவும் சிறுவர்களும் பெரியவர்களுக்குமானவை என்பதுடன் யாவும் ஈழத்து இலக்கியவாதிகள் எழுதியவை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவைகளுள் நாவற்குழி பிரதேச எழுத்தாளர்களினதும் இப்பிரதேசத்தைச் சேர்ந்தவர்களினது நூல்களையும் வாங்கிப் பாதுகாத்துள்ளோம். அவுஸ்ரேலியாவிலுள்ள அம்பிகைபாகன், நாவற்குழி குமாரசாமி, சோபனா, மயூரதன், சு.வேலுப்பிள்ளை, நாவற்குழியூர் நடராசன், சிவராசா போன்றோரின் நூல்கள் கிடைக்கப்பெற்றன. இவர்களைப் போல நீங்களும் எழுதமுடியும். நீங்கள் ஒவ்வொருவரும் ஆற்றல் மிகுந்தவர்கள். எழுதி நிலைக்கக் கூடிய பலர் உங்களுக்குள்ளும் இருக்கிறார்கள். முயன்றால் முடியாததொன்றும் இல்லை. முயல வேண்டும். நெடுங்காலமாகவே திருவள்ளுவர், விவேகானந்தர், பாரதியார், அப்துல்கலாம், தங்கம்மா அப்பாக்குட்டி போன்றவர்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கப் போகின்றோமா? இவர்களைப் போல எம் வாழ்வை நிலையானதாக்கப் போகின்றோமா? தேடிச் சோறு நிதம் தின்று

பல சின்னஞ்சிறு கதைகள்பேசி - மனம்
வாடித் துன்பமிகு உழன்று - பிறர்
வாடப் பல செயல்கள் செய்து
கொடுங்கூற்றுக் கிரையாகி மாயும்
வேடிக்கை மனிதரைப்போல விழப்போகிறோமா?

வாழ்வை வீணடிக்கப் போகிறோமா? அல்லது படித்து, வாசித்து, சீர்தூக்கி உணர்ந்து எழுதிச் சரிதம் படைக்கப்போகின்றோமா என்று எண்ணிப்பார்த்து எங்கள் பிறப்பை பெறுமதியானதாக்குவோம். அதற்காகவே இந்த அறிவுப்பெட்டகத்தைத் தருகிறோம். பயன்படுத்தி வாழ்வைச் செம்மைப்படுத்துவோம்.

21-01-2019 அன்று அறநெறி மாணவர்களை இசையாசிரியை திருமதி கலைவாணி அண்ணாமலையின் உதவியுடன் நாவற்குழி திருவாசக அரண்மனைக்கு கூட்டிச் சென்று திருவாசகம் ஓதச் செய்தோம். தொடர்ந்து ஒவ்வொரு ஞாயிறும் கூட்டிச் செல்ல விருப்புற்றிருந்தபோதும். மாணவர் ஒழுங்கான வரவில்லாதமைகண்டு இடைநிறுத்தவேண்டியதாயிற்று. பேராதனைப் பல்கலைக்கழக மாணவி தாரங்கனி கோணலிங்கம் திருக்குறள்பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடினார். அன்று தைப்பூச தினமாதலால் காலமாகிவிட்ட வைத்தியர் **யோகானந்தராசாவின்** நெறிப்படுத்தலில் முன் ஆரம்பபாடசாலை ஆசிரியர் செல்வி திவ்யா அவர்கள் உதவியுடன் இலவச முன்பள்ளி ஆரம்பித்தோம்.

பிரதேசசபை, வீதி அபிவிருத்தி அதிகாரசபையினரின் அனுமதியுடன் கந்தையா கனகம்மா நினைவாலயச் சூழலில் வீதி ஓரங்களில் அறநெறி வகுப்பு மாணவரின் உதவியுடன் மரக்கன்றுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டி வளர்த்தோம். நீர்வார்த்து வளர்ப்பதை ஒரு அறப்பணியாகக் கருதி மாணவர்கள் மிகுந்த ஈடுபாட்டுடன் வளர்த்தார்கள். அந்த மரக்கன்றுகளைப் பெயர்த்து எறிந்த கொடூரம் இக்கிராமத்தில் நடந்துள்ளது. இக்கிராமம் முன்னேற நீண்ட பயணம் செல்லவேண்டியுள்ளது. செல்வோம். சோர்வடையோம்.

பிரதேச அறநெறிப் பாடசாலைகளுக்குச் சென்று தியானம் சம்பந்தமான கலந்துரையாடலும் பயிற்சிநெறியும் 12-02-2019 இப்பிரதேச சபை உறுப்பினர் திரு. த.தங்கவேல் அவர்கள் தலைமையில் வழங்கினோம் பயனுள்ளதாக இருந்தது மக்கள் ஆர்வத்துடன் கலந்தனர்.

எமது வெளியீடாக "மெய்ப்பொருள்காண்பதறிவு" என்ற சிறுகதைகள் தொகுப்பு 150மேற்பட்ட வாசகர்கள் கலந்து சிறப்பிக்க 10-03-2019 இல் வெளியிட்டு வைத்தோம். திரு. ந. விஜயசுந்தரம் வலம்புரி ஆசிரியர் ஆய்வுரை செய்தார். விற்பனையில் சேர்ந்த பணம் நிதியக்கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளது.

கைதடி நாவற்குழி தெற்கு அ.த.க.பாடசாலை அதிபர் திரு. சி.சோமசுந்தரம் ஐயாவின் வேண்டுகோளுக்கிணங்கி 22-03-2019 அன்று தானியங்கி மணி (Automatic Bell) சாதனம் பாடசாலைக்கு பொருத்திக்கொடுத்துள்ளோம்.

19-04-2019 அன்று அறிநெறி மாணவர்களுக்கான வருடாந்தக் கைவிஷேசம் வழங்கினோம். கலந்துகொண்ட பொதுமக்களுக்கும் மாணவர்களுக்கும் தொன்மையான முறைமைகள் பற்றியும் எடுத்துக் கூறினோம்.

பொதுத்தேர்வுகளில் சித்தியெய்திய மாணவர்களுக்கான வருடாந்த பரிசளிப்பு விழா 25-05-2019 அன்று நடைபெற்றது. 5ம் ஆண்டு மாணவர் 28 பேரும் க.பொ.த சாதாரண தரத்தேர்வில் சித்தியெய்திய 34 மாணவர்களுக்கும், சித்தியெய்திய 23 க.பொ.த உயர்தர மாணவர்களும் கௌரவிக்கப்பட்டு உதவிகள் வழங்கியதுடன் இப்பிரதேச கல்வி வளர்ச்சிக்காக சேவைகள் செய்த **திரு வே. இராமர்** அவர்களுக்கு **வித்தியரத்னா விருதும்**, சிறந்த சமூக சேவையாளருக்கான விருதினைத் **திரு. த. தர்மகுலசிங்கம்** அவர்களுக்கும் வழங்கிக் கௌரவித்தோம் வழமைபோலவே இப்பிரதேச முதியவர்கள் இருவர் திருமதி. பொன்னம்மா சோமசுந்தரம், திரு. விசுவர் கதிரவேலு ஆகியோர் கௌரவிக்கப்பெற்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பிலிருந்து படித்துயர்ந்த கைதடி சித்த வைத்திய பல்கலைக்கழகத்தில் வைத்தியப் பிரிவில் கல்வி பயிலும் இறுதியாண்டு மாணவர்கள் இருவர் எமது செயற்பாடுகளைக் கண்டு எம்முடன் இணைந்து யோகசனபயிற்சியும் கணினிக்கல்வியையும் இலவசமாக கற்றுத்தர முன்வந்து *02-10-2019* இலிருந்து செயற்படுவதுகண்டு, இப்பிரதேச எம்மிடம் உதவிகள் பெற்று கற்ற யாழ் பல்கலையில் விஞ்ஞானப்பிரிவிலும் கலைப்பிரிவிலும் கணிதப்பிரிவிலும் கல்விகற்கும் மாணவர்களும் க.பொ.த (உயர்தரம்) படித்துவிட்டு பல்கலை அனுமதிக்காக காத்திருக்கும் மாணவர்களும், இப்பிரதேசத்தில் பிரத்தியேக கணித வகுப்புகள் எடுத்துவரும் ஆசிரியரும் இணைந்து தரம் 9-10 இல் படிக்கும் மாணவர்களைத் தேர்ந்தெடுத்து 2022 க.பொ.த (சாதாரண) தேர்வுக்கான தயார்ப்படுத்தல்கள் வகுப்புகள் விடுமுறை தினங்களில் தனியார் கல்வி நிறுவனங்களுக்கு இடைஞ்சல் ஏற்படாதவாறு நடாத்திவருகின்றோம்

எம்முடன் இணைந்துள்ள க.பொ.த உயர்தர மாணவர்களுடன், பல்கலைக்கழக மாணவர்களையும் இணைத்து 18 மாணவர்கள் யாழ் பல்கலைக்கழக நூலகர் திருவாட்டி காந்தலட்சுமி அம்மா சேகரித்து வைத்திருக்கும் தொன்மைச் சான்றுகளைப்பார்வையிட்டு பின் மதிய போசனமும் பெற்று பயன்பெற்று வந்தோம். 10-11-2019இல் நடந்த இக்கலந்துரையாடலில் பல்கலைக்கழக வைத்தியமாணவர்கள் இருவரும், ஓய்நிலை அதிபர் ஸ்ரீபதி ஐயாவும் கலந்து மிகவும் ஆக்கபூர்வமான ஆலோசனைகளும் வழங்கினார்.

நாவற்குழி மகாவித்தியாலய வளாகத்துள் நாம் அமைத்துள்ள **சாந்தகுமாரி பிரார்த்தனை மண்டபத்தை** *19-12-2019* அன்று திறந்து வைத்து பாடசாலைச் சமூகத்திடம் கையளித்தோம். தொடர்ந்து எம்முடன் இணைந்துள்ள இப்பிரதேச மாணவர்கள் தயாரித்தளித்த "காத்தவராயன் சிந்து நடைக் கூத்தும்" இடம்பெற்றுப் பெரும் வரவேற்பைப்பெற்றது. எமது பாரம்பரிய கலைகளைப் பேணும் இவ்வாறான எல்லா முயற்சிகளுக்கும் இசையாசிரியை கலைவாணி அண்ணாமலை உதவிவருகின்றார். பின்னணி இசை, நெறியாள்கை ஆலோசனைகளும் மேற்பார்வைகளும் செய்த நீர்வேலி வடக்கு திரு. டேவீந்திராஜா அவர்களுக்கு எமது நன்றிகள்.

இப்பிரதேசத்துச் சிரேஷ்ட பிரஜைகளுள் 86 முதியவர்களைத் தேர்ந்தெடுத்து மகிழ்வித்து மாலை அணிந்து கௌரவித்து உபசரித்து பெறுமதியான பரிசில்களுடன் பொற்கிளிகளும் வழங்கினோம் விருந்தினர்களாகக் கலந்து சிறப்பித்ததுடன் மூத்தோரை இனங்கண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ந்தெடுத்துத் தந்த சிறப்பான பணியையும் இப்பிரதேச சனசமூக நிலையங்கள் செய்திருந்தன. அவர்களை மிக நன்றியுடன் பாராட்டுகிறோம்.

ஆண்டு ஒன்றில் ஒவ்வொரு வருடமும் இணையும் மாணவர்களுக்கு புத்தகப்பை, தொப்பி, கற்றல் உபகரணங்களுடன் **நல்வழி நூலும்** ஆண்டு 6ல் கற்கும் மாணவர்களுக்கு **உயிரெழுத்து அகராதியுடன் சீருடைத்துணிகளும்** வழங்கும் நிகழ்வு இவ வருடம் 01-03-2020இல் நடைபெற்றது 86 முதலாம் ஆண்டு மாணவர்களும் 67 ஆண்டு ஆறு மாணவர்களும் கௌரவிக்கப்பட்ட இந்நிகழ்வுக்குப் பிரதேசப் பாடசாலைகளின் அதிபர்கள் விருந்தினராகக் கலந்து சிறப்பித்தனர். சீருடை வழங்குவதில் எம்முடன் இணைந்து கொண்ட பொன்னப்பா வீதி வண்ணார்பண்ணை **திரு. பா.கணநாதன்** அவர்கள் இணைந்து கொண்டார். இவ் அறக்கொடைக்கு உதவிய அவர்களுக்கு எமது நன்றிகள். இறைவன் இவர்போன்றவர்களுக்குச் சுகமும், நல்லாரோக்கியமும் நீண்ட ஆயுளும் தரவேண்டிப் பிரார்த்திக்கிறோம்.

அடைய முடியாதவைகளே இலக்குகளாக நிர்ணயிக்கப்படுவது தான் இயல்பு. இலக்குகள் வெல்லப்படும்போது அங்கு தரித்து நிற்பது முயற்சியே அல்ல. சோம்பேறித்தனம். மேலும் மேலும் வளரவேண்டும். விரிவடையவேண்டும். நாம் எமது இலக்குகளைப் படிப்படியாக அடைந்து வரும் வேளையில், இலக்குகளையும் விரிவுபடுத்த முனைகின்றோம். அறத்தையும், கல்வியையும், நல்லொழுக்கத்தையும் ஒற்றுமையையும் வலியுறுத்திச் செயல்ப்பட்டுவந்த நாம் இப்பிரதேச மக்களின் மன அமைதியையும், ஆன்மீக ஒருமைப்பாட்டையும், கண்மூடி வழக்கங்களையும் அப்படியே பின்பற்றாமல், அறிந்து, விளங்கிப் பின்பற்றவும் வழிவகைகள் செய்யத் திட்டமிட்டிருந்த வேளையில் உளவள மேம்பாட்டுக் கழகத்தினருடன் இறைவன் தொடர்புகளை ஏற்படுத்தித் தந்துள்ளார். அவனின்றி ஓரணுவும் அசையமுடியாதெனவும், எல்லாக்காரியங்களும் எப்போவோ தீர்மானிக்கப்பட்டனதெனவும், இப்போது நிறைவேறுகின்றதெனவும் நம்பும் எமக்கு இவர்களின் நட்புக்கிடைத்தமை நல்லாரோக்கியம் நிறைந்த நல்ல ஆரம்பமெனக் கொள்கிறோம். இப்பிரதேசத்துக்கு அவர்களின் வருகை ஆண்டவன் தந்தவை. இறுகப் பற்றிக்கொண்டு இசைந்தொழுகுவோம். இப்பிரதேசம் விடிய ஆரம்பித்துள்ளது. மலர்வுடன் நாமும் செயற்படுவோம்.

**நன்றி**

**வணக்கம்**

**கற்பதால் உயர்வோம். காலத்தைவெல்வோம்.**

16 SEP 2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருளாந்தம் அறிவுப் பெட்டகம்

நூலகங்கள் தனியார் நூலகங்கள், கிராமியநூலகங்கள் சனசமூக நூலகங்கள், பிரதேசசபை நூலகங்கள், பாடசாலை நூலகங்கள், பல்கலைக்கழக நூலகங்கள், பொது நூலகங்கள் என வகுக்கப்பட்டிருந்தாலும் வளர்ச்சியடைந்த போதிலும் அடிப்படையில் இவையாவும் மக்களின் அறிவைப் பல்துறையிலும் விருத்தியடையச் செய்வதையே நோக்கமாகக் கொண்டவையாகும். ஒரு இனத்தின் அல்லது இனக்குழுமத்தின் வரலாற்றை, இருப்பு இறைமையை அழித்துவிட முயலும் போது அறிவுக் கருவூலகங்களாகிய நூல் நிலையங்களையும் தொன்மைமிகு கலைவடிவங்களையும் அழித்து விடுவதேயாகும். நாடுகளிடையே வல்லாதிக்கம் செய்யும் போதும், இனங்களுக்கிடையே மேலாதிக்கம் செலுத்த நினைக்கும் சந்தர்ப்பங்களிலும் ஆதிக்கத்துக்குள் கொண்டு வர நினைக்கும் நாட்டின் மக்களை அறிவிலிகளாகவும் வரலாறற்றவர்களாகவும் இருப்பதாரங்களையும் அறிவுக் களஞ்சியங்களையும் அழித்துவிடுவதே முதற்படியாகும்.

அவ்வேளைகளில் பிரபல்யமாயிருக்கும் களஞ்சியங்களே அழிவுக்குள்ளாகும். தனியாரிடமும் உள்ளவற்றையும் சிறு நூல்கங்களையும் தேடி அழித்து விடுவதென்பது முடியாத காரியமாகும். வரலாறுகளைத் திரித்து எழுதவோ, திருப்பி எழுதவோ முனையும் வேளைகளில் யாரிடமாவது இருந்து ஆவணப்பதிவுகள் வெளிவந்து உண்மை நிலைமையை உணர்த்தும் என்று திடமான நம்பிக்கையில் எமது இருப்புச்சான்றுகளைச் சேகரித்துப் பாதுகாக்க முயல்வோம் என்ற எண்ணத்தில் அமரர்.க. அருளானந்தம் அவர்களின் கருத்துருவாக்கப்படி, மாணவர்களை வாசிக்கத் தூண்டும் முயற்சியாக அவர் நினைவாக இந்த அறிவுப் பெட்டகத்தை நாவற்குழி பிரதேச சபைப் பொதுநூலகத்திடம் இன்று கையளிக்கின்றோம். தேர்ந்தெடுத்த நூல்கள்யாவும் திரிவு படுத்தப்படாத வரலாற்றைக் கொண்டவை வன்முறையையும் வல்லுறவுகளையும் தூண்டிவிடாதவை, இயற்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோடிசைந்து நின்று எங்கள் கலைகலாசாரம் பிரச்சினைகளைப் பதிவு செய்யும் ஈழத்து எழுத்தாளர்களுடயவை.

எங்களுக்கான தமிழில் எங்களுடைய பிரச்சினைகளை எங்களை வளப்படுத்துவதற்காக - நெறிப்படுத்துவதற்காக எழுதப்பட்ட எங்களது எழுத்தாளர்களின் படைப்புகள். வரையறை வகுத்துக்கொண்டு இவற்றை வாங்குவதற்காக முயன்றபோது, ஏளனங்கள், அவமரியாதைகள் அலைச்சல்களுக்கு உள்ளானபோதும் நாம் எமது இலக்கிலிருந்து விலகவில்லை. கண்டது கற்றால் பண்டிதனாவான் என்ற முதுமொழியைப் பிழையாக விளங்கிக்கொண்டு கண்டதையும் பாலுணர்வைத் தூண்டும் நூல்களையும் கற்பனையில் கூட நடக்கமுடியாத கதைகளையும் கற்று அவற்றின் வழிசென்று வீணாகிப் போய்விடக்கூடாது. கண்டு, தேர்ந்து இது படிக்கக்கூடியதோ என்று அறிந்து படிக்கவேண்டுமென்பதே அதன் உண்மையான அர்த்தமாகும். அவ்வகையான நூல்களுடன் அருளாந்தம் அறிவுப் பெட்டகம் அவருடைய பிறந்த நாளாகிய இன்று இப்பிரதே மாணவர்களுக்காக பிரதேசசபையிடம் வழங்குகின்றோம்.

கவிஞர்கள், எழுத்தாளர்கள், நாடக ஆசிரியர்கள், கூத்து அண்ணாவிமார் போன்று பலகலைஞர்களும் அறிஞர்களும் புத்திஜீவிகளும் வாழ்ந்த இந்தப் பிரதேசம் எழ வேண்டும் என்பதற்காகவே தனது வீட்டில் தனது செலவில் ஆரம்பப்பாடசாலையை நடாத்தியவரின் ஆத்ம ஈடேற்றத்துக்காக நிறுவப்படும் இப்பணியை மாணவர்களும், கற்றவர்களும் நல்ல முறையில் பேணிப் பயன்பெறவேண்டும் என்பது எமது விருப்பம்.

நல்லன எண்ணுவோம் நல்லனவே நிகழும்.

**அருளானந்தம் அறிவுப் பெட்டக**
**அமைப்பக் குழுவினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலகர் ஒரு சகாப்தம்

ஆனிமாதம் 13ம் திகதியென ஞாபகம் தொலைபேசி அழைப்பொன்று வந்தது, எங்கேயோ கேட்ட அன்பான குரல். மட்டுப்பிடிக்கமுடியவில்லை. யாரெனக் கேட்கவும் துணிவில்லை. எனது தயக்கத்தைப் புரிந்து கொண்டு நான் பிரதம நூலகர் யாழ். பல்கலைக்கழகம் என்றார். அம்மா, காந்தலட்சுமி அம்மாதானே என்றேன். நாவற்குழி மகா வித்தியாலய மாணவ தலைவர்கள் சின்னம் சூட்டு விழாவில் சந்தித்துக் கொண்டபின்னர் தொடர்பிலில்லை. ஞாபகத்தில் கொண்டிருக்கிறீர்கள். சந்தோசம் என்றார். மறக்கக்கூடிய கருத்துக்களா அன்று மேடையில் கூறினீர்கள் என்றேன். அதெல்லாம் சரிதான் 15ம் திகதி திங்கட்கிழமை என்னை நூலகத்தில் சந்திக்கமுடியுமா என்றார். சந்தோஷத்துடன் வருகிறேன். எனக்கூறிச் சந்திக்கச் சென்றேன். 30 நிமிடங்கள் பேசலாம் என்றார். எனக்கு மிகவும் பிடித்திருந்தது. (நேரத்தைக் கணிப்பில் கொள்வதை) கதைத்தோம். நேரம் போனதே தெரியவில்லை ஒரே கருத்துடையவர்கள் பேசிக்கொண்டு சென்றால், நேரம் செல்வது தெரியாது. இறுதியில் எங்களைப்போலவே வறிய மாணவர்களுக்குத் தானும் கற்க உதவிபுரிவதாகவும், தனது நம்பிக்கையைப் பயன்படுத்திச் சிலர் மோசடி செய்துவிட்டார்கள் என்றும் கூறி, எங்களுடைய பணிகளில் தானும் பங்களிப்பு செய்ய முடிவு செய்துள்ளதாகவும் கேட்டார்.

எம்முடன் இணைந்திருந்தவர்களில் மூவர், மூன்று பிள்ளைகளுக்கு உதவித்தொகை (3000/=) வழங்கியவர்கள் விலகிய நிலை எமக்கு. கடவுள் காட்டியவழி அல்லது கடவுள் அனுப்பிய உதவியாக நினைத்து ஏற்றுக்கொண்டேன். அப்போதுகூட அவர்கள் நடாத்தும் அறக்கட்டளை நிதியத்தினை எமது மாணவர்கள் உதவி கேட்பதுபோல அவர் தயாரித்து வைத்திருந்த படிவங்களில், மாணவர்களின் தேவைகளை அதிபர் உறுதிப்படுத்திய படிவங்களையும் கொடுக்க ஒத்துக்கொண்டோம். அதன்படி 3 மாதங்களுக்கு, 5 மாணவர்க்கான 15000/= அன்பளித்தார்.

இடையில் ஒரு தடவை எமது வெளியீடுகளான இளந்தளிர் சஞ்சிகைகளைத் தொடராக (8வெளியீடுகள் வந்துள்ளன) எனது சிறுகதைத் தொகுதியையும் மெய்ப்பொருள் காண்பது அறிவு யா. பல்கலைக்கழக நூலகத்துக்கு அன்பளிப்புக்காக எடுத்து சென்ற வேளையும் சந்தித்துக் கதைத்தோம் அவ்வேளையில் எம்முடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்து, விரும்பி, உதவிய அம்மா அவர்கள் நினைவுகளுடன்.....










Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைந்து உதவிபெறும் மாணவர்களை அழைத்து அவர்சேகரித்து பராமரிக்கும் தமிழரின் தொன்மைப் பொருட்களைக் காண்பிக்கவும். மதிய போசனத்திற்காகவும் அழைத்தார் அதன்படி நவம்பர் 10 திகதி ஞாயிற்றுக்கிழமை வருவதாக இணங்கிக் கொண்டு, மாணவர்களையும் கூட்டிச் சென்று மதிய உணவு எடுத்தபின்னர் தொல்பொருட்களைப் பார்வையிட்டோம். பருத்தித்துறையிலிருந்து ஸ்ரீபதி ஓய்வுநிலை அதிபரும் கலந்து கொண்டார். இவ்வளவு தொன்மையான பொருட்களையும் எமது இருப்பின் சான்றுகளையும் தனியொரு ஆளாகச்சேர்த்துப் பராமரித்து வருகிறாரே என்று பிரமித்ததுடன் மாணவர் சிலர் அநேக பொருட்களை முன்னர் கண்டிருக்கவேயில்லை. தொன்மைகளும் இருப்பாதாரங்களும் அறியாத தெரிந்திராத இனம் அழிந்துவிடும் என்பதை அறிந்து இவர் சேகரித்துப் பாதுகாத்து வருவது எங்களுடன் வந்த பல்கலையில் பயிலும் மாணவர்களுக்கே வியப்பாக இருந்தது.

உலகிலுள்ள கிறிஸ்தவர்கள் ஒன்றுகூடி நத்தார் பண்டிகை கொண்டாடிய நாளில் 2004ம் ஆண்டு மார்கழி 25ம் திகதி ஒரு பேரழிவு வந்தது. ஆழிப்பேரலை எழுந்து ஒன்றரை லட்சம் மக்களைக் காவு கொண்டது. 2019ம் ஆண்டு பிற்பகலில் தொலைபேசி அம்மாவின் மரணச்செய்தியைக் காவி வந்தது. இதுவும் ஒரு பேரழிவு. அரிய கருத்துக்கள், சிந்தனைகளுக்கேற்பட்ட அழிவு. ஆணித்தரமாக எழுந்து நின்று சிந்தனைத் தெளிவுடன் கருமமாற்றியவரின் பேரழிவு. 24ம் திகதியே மார்புவலியென்று வைத்தியசாலையில் சேர்த்துக் கொள்ளப்பட்டவரின் மகத்தான இழப்பு 26ம் திகதி எங்களுடன் இணைந்துள்ள பல்கலைக்கழக மாணவர்களும் உதவிபெறும் மாணவர்களும் சென்று இறுதி அஞ்சலி செலுத்திவிட்டு வந்தோம்.

அவருடைய உடல்தகனம் செய்யப்பட்டதே தவிர, அவரது அளவிடமுடியாத சிந்தனைகளும், உன்னத நோக்கங்களும் இடைவிடா உழைப்பும் ஒரு போதும் அழியாது. அவரிடம் கற்ற பழகிய நண்பர்களும் அவரது உரைகளைக் கேட்டறிந்தவர்களுடாகவும் அவரது ஆக்கபூர்வமான கருத்துக்கள் இன்னும் வேகமாக வளர்ந்து கொண்டேயிருக்கும். சமுதாய மறுமலர்வு விரைவில் கிட்டும் இறைவன் அருளுண்டு. அன்புத் தாயின் ஆத்மா சாந்திக்காக இளந்தளிரும் அஞ்சலிக்கின்றது. அம்மா உங்கள் கருத்துக்களை இன்னும் வேகமாக முன்னெடுப்போம்.

*10-04-2020* **க. மயில்வாகனம்**

**கந்தையா கனகம்மா நிதியம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY

# முன்னாள் யாழ் பல்கலைக்கழக நூலகர் அமரர் ஸ்ரீகாந்தலஷ்மி அருளானந்தம் சில நினைவுகள்




யாழ்ப்பாணப் பிரதேசத்தில் வாழ்ந்து மண்ணுக்குப் பெருமை சேர்த்து மறைந்த ஆளுமைகளுள் நூலகவியல் துறை சார்ந்து அவரது தகவற் திறன் மற்றும் மொழியாற்றலினாலும் ஈழச்சமுகத்தின் மீதான அக்கறையினாலும் என்றும் நினைவுகூரத்தக்கவராக விளங்குபவர் அமரர். ஸ்ரீகாந்தலக்ஷ்மி அருளானந்தம் அவர்கள்.

இணுவிலில் 08.04.1961ல் பிறந்த இவர் தனது ஆரம்ப கல்வியை இணுவில் மத்திய கல்லூரியிலும் உயர்கல்வியை இணுவில் இராமநாதன் கல்லூரியிலும் கற்றார். பொருளியலில் சிறப்பு இளமாணிப்பட்டத்தை யாழ் பல்கலைக்கழகத்தில் 1984ல் பெற்றுக் கொண்டார். 1986ல் நூலக தகவல் விஞ்ஞான துறையில் இளமாணிப் பட்டத்தினை (BLIS) மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் பெற்றார். 1989ல் பெங்களுரில் உள்ள ஆவணவாக்கல் ஆய்வு மற்றும் பயிற்சி மையத்தில் ஆவணவாக்கல் மற்றும் தகவல் அறிவியலில் Associateship in Documentation and Information Science எனும் முதுமாணிப்பட்டத்தினைப் பெற்றிருந்தார்.

இவர் தனது தேசிய சமூகப் பங்களிப்புக்களால் நூலகவியல் துறையை வளப்படுத்திய பெருமைக்குரியவர். வாசிப்பை ஊக்குவிக்கும் பொருட்டு 2005இல் "நூலக விழிப்புணர்வு நிறுவக"த்தை உருவாக்கி மாணவர்களுக்கான கண்காட்சிகள் மற்றும் நூலகர்களுக்கான பயிற்சிப்பட்டறைகள் பலவற்றை நடத்தினார். "கருத்தூண்" எனும் மாதிரி நூலகத்தையும் "அறிதூண்டல் மையத்தை"யும் தனது வசிப்பிடத்தில் ஆரம்பித்து மாணவர்களுக்கான சான்றாதாரக்கல்வியை ஊக்குவித்தார். யாழ்ப்பாணப் பொது நூலகம், இணுவில் அறிவாலயம், கொழும்பு தமிழ்ச்சங்கம், நூலக நிறுவனம் ஆகியவற்றின் ஆலோசகராகவும் பணியாற்றியிருந்தார். 2016-2017 காலப்பகுதியில், அனைத்து பல்கலைக்கழக நூலக சங்கத்தின் தலைவராக இருந்ததுடன், சர்வதேச ஆய்வு மாநாடொன்றை 2016ல் யாழ் மண்ணில் நடத்திய பெருமைக்குரியவர். இலங்கை நூலகச்சங்கதத்தின் தலைவராகவும் 2017-2018 காலப்பகுதியில் பணியாற்றியிருந்தார். மேலும், இலங்கை தேசிய நூலகம், கொழும்புப் பல்கலைக்கழக நூலக விஞ்ஞானத்திற்கான தேசிய




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவனம் போன்றவற்றின் இயக்குனர் சபையின் உறுப்பினராகவும் பங்களித்திருந்தார். இலங்கை நூலகச்சங்கத்தினால் நடாத்தப்படும் Diploma in Library and Information Science (DIPLIS) கற்கைநெறியின் சிங்கள மற்றும் தமிழ் மொழியில் முதலிடம் பெறும் மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டமொன்றினை (சொந்த நிதியில்) 2018ம் ஆண்டில் அறிமுகப்படுத்தியிருந்தார்.

இவர் நூலகவியல் துறை சார்ந்தும், வேறு பல துறைகள் சார்ந்தும் பல்வேறு கற்கைநெறிகளில் விரிவுரையாளராக கடமையாற்றியிருந்தார். குறிப்பாக, இலங்கை நூலகச் சங்கத்தின் DIPLIS கற்கைநெறியிலும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உயர் பட்டப்படிப்புகள் பீடத்தினால் நடாத்தப்படும் நூலகவியல் பட்டப்பின்தகைமைக் கல்வி நெறியிலும், அபிவிருத்திக்கல்வி, குடித்தொகைக்கல்வி போன்ற முதுமாணி கற்கைநெறிகளிலும், களனிப் பல்கலைக்கழகத்தின் நூலகவியல் பட்டப்படிப்பு கற்கைநெறியிலும் விரிவுரையாளராக கடமையாற்றி கல்விவளர்ச்சியில் பங்களித்திருந்தார். ஆய்வு மற்றும் அறிவுப் பரவலாக்கம் தொடர்பில் சுமார் 15க்கும் மேற்பட்ட நூல் களை எழுதியுள்ளார். ஆய்வுக்கட்டுரைகள், மாநாட்டுக்கட்டுரைகள், பத்திரிகைகளுக்கான கட்டுரைகள், பெண்களுக்கான விழிப்புணர்வுக் கட்டுரைகள், சிறுவர் உளவியல் சார்ந்த கட்டுரைகள் என பல துறைகளிலும் தன் கருத்துக்களைப் பகிர்ந்துள்ளார். அத்துடன், “ஈழத்தமிழர் வாழ்வியல்” “கருத்தூண்” ஆகிய ஆவணவாக்க இணையத்தளங்களையும் பேணி வந்துள்ளார்.

நூலகப்பணியைப் புனிதப்பணியாக ஏற்று நூலகவியல் துறை சார்ந்து யாழ் பல்கலைக்கழக நூலகத்திலும் அதற்கு அப்பாலும் அவரது பணிகள் என்றும் நினைவுகூரத்தக்கன. அர்ப்பணிப்புடனான இவரது பணிகளை இளந்தளிர் வழியே நினைவுகூர்வதில் மனநிறைவடைகிறோம்.

கலாநிதி. (திருமதி.) கல்பனா சந்திரசேகர்
நூலகர் (பதிற்கடமை),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
*18.06.2020*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறக்கமுடியாதநினைவுகளில்.....

## நூலகர் அமரர் ஸ்ரீகாந்தலட்சுமி அருளாந்தம் அவர்கள்

"தோன்றிற் புகழோடுதோன்றுக அஃதிலார் தோன்றலில் தோன்றாமை நன்று" என்கின்றது பொதுமறை. இவ்வாறு புகழோடுதோன்றி புகழோடு வாழ்ந்து மறைந்தாலும் யாழ் பொது நூலகத்தில் அனைவரிடமும் வாழ்ந்துகொண்டிருப்பவர் அமரர் ஸ்ரீகாந்தலட்சுமி அருளானந்தம் அவர்கள்.

அவரது அழகான தோற்றம், அன்பானபார்வை, நிதானமானதீர்மானம், திடமானகொள்கை, தெளிவான சொல்லாடல், திறமையான வழிநடத்தல், நிறைவான கற்பித்தல், அவரின் பன்முக ஆளுமைகள் எனசொல்லிக் கொண்டேபோகலாம். நூலகத் துறையில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திப் பல ஆக்கபூர்வமான செயற்பாடுகளைச் செய்துள்ளார். கிராமப்புற நூலகங்களின் அபிவிருத்தியில் பெரும் பங்களிப்பாற்றியுள்ளார். பின்தங்கியுள்ள மக்களுக்கு வாசிப்பைத் தூண்டும் விதமாக பல்வேறு செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளார். பாடசாலை மட்டங்களிலுமும் பொது நூலகங் களிலும் பலகண்காட்சிகளை நடாத்தியதுடன் பலபோட்டிகளையும் நடாத்தினார்.

மற்றும் நூலக விழிப்புணர்வு நிறுவகத்தை உருவாக்கிஅதன் ஸ்தாபகராக இருந்து பல சேவைகளை அந்நிறுவனத்தினூடாகச் செய்தார். அந்நிறுவனமானது. இலாபநோக்கமற்ற நிறுவனமாகும். அந்நிறுவனத்தின் அனுசரணையுடன் வடமாகாணத்திலுள்ள பொதுநூலகங்களிற்குப் புத்தகங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டதோடு நூலகர்களிற்கான பயிற்சிப்பட்டறைகளையும் ஒழுங்குபடுத்தி நடாத்தியுள்ளார். நூல கத்துறை சார்ந்த பல நூல்களைவெளியிட்டுள்ளார்.

அவரதுமறைவு நூலகத்துறையினருக்கு பேரிழப்பாகும். பொதுநோக்கும் மாணவர்கல்வியும் அவற்றிகான ஊக்குவிப்பு உதவிகளாலும் எங்கும் என்றும் நிறைந்திருக்கும் இவரது பணிகளைத் தச்சன்தோப்பு கந்தையா கனகம்மா நிதியம் வெளியிட்டுவரும் இளந்தளிரூடாக நினைவுகூர்வதில் மனம் நிறைவடைகின்றோம்.

**திருமதி. ச. சுகந்தினி**

பொதுநூலகர்

பொதுநூலகம், யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சில் கனக்கும் நினைவுகள்

அது மாணவர் முதல்வர் சின்னம்சூட்டும் ஒழுக்காற்று நிகழ்வு. நிகழ்வின் தரத்திற்குப் மிகப் பொருத்தமான அதிதி வேண்டும்.

ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்

என்ற வள்ளுவரின் வாக்குக்கு ஏற்ப பொருத்தமான விருந்தினரை முன்மொழிந்தார் முரளி ஆசிரியர். அவர் வேறுயாருமல்ல. விலைமதிக்க முடியாத பொக்கிஷம் திருவாட்டி காந்தலட்சுமி அருளானந்தம் அவர்களே. யாழ்ப்பாண பல்கலைக்கழக பிரதம நூலகர் அவர்கள், ஒழுக்க சீலராகவும் அறிவுப் பெட்டகமாகவும் திகழ்ந்தவர். அவர் நிகழ்வில் ஆற்றிய உரையின் மூலம் சுய ஒழுக்கத்திலும் பொது ஒழுக்கத்திலும் இறுக்கமான கடப்பாட்டைக்கொண்டிருந்தார்.என்பதைப் பாடசாலைச் சமூகம் உணர்ந்து கொண்டது. சமூகச் சிற்பியாகிய இவர் ஆற்றிய பணிகள் நிறைவானது என்றென்றும் அழியாதது. இதுவே போதும் ஊழிக்காலம் வரை போதும் என இறைவன் நினைத்து விட்டானோ என்னவோ சுகமான வெகுமதி அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. எமது சமூகத்துக்கோ தாங்கொணா இழப்பு. பெரியோர் என்றும் பெரியோரே. சிரம் தாழ்த்தி வணங்குகிறோம்.

**திருமதி. வசந்தாதேவி மேகலிங்கம்**
ஒய்வுநிலை அதிபர்
யா/நாவற்குழி மகாவித்தியாலயம்

ஆழமான எதிர்கால நல்நோக்கத்திற்காகத் தம்மை ஒப்புக்கொடுத்து, தாம் செய்யும் செயல் ஒவ்வொன்றையும் வேள்வியாகக் கருதி அர்ப்பணிப்புடன் செயற்படும் எவருக்கும் களைப்போ வெறுப்போ ஏற்படாது தடைகள் வர வரத் தாண்டும் இயல்பும் திறனும் வளருமே தவிரச் சோர்வடைவதில்லை. அவர் கொண்டிருக்கும் மகத்தான இலட்சியம் இடைவிடாது தொடர்ந்து இயங்குவதற்கு அவரைத் தூண்டிக்கொண்டேயிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறொன்றுமில்லை நேரம் வந்திட்டுது, பிரிஞ்சு போயிட்டுதடி.

ஆச்சர்யத்தொழில் மிகப்புனிதமானது, தொன்மையானது, நுட்பமானது, ஒரு கலை ஒருகணக்கு ஆக்கபூர்வமானது. காலங்காலமாகப் பேணிப் பாதுகாக்கப்பட்டுப் பயிலப்பட்டு வந்த இந்தக்கலை, அண்மையில் ஏற்பட்ட அதிவிரைவான விஞ்ஞான வளர்ச்சியால் பின்தள்ளப்பட்டுவிட்டது. இருப்பதைக் கொண்டு முன்நோக்கிச் செல்வதுதான் வளர்ச்சி. இருப்பவற்றை அழித்து விட்டு முன்னேறுவது வளர்ச்சியே அல்ல. மனோதிடமும், நுண் அறிவும், கணக்கும் என்னால் முடியும் என்ற ஆற்றலையும் வளர்த்து வந்த இக்கலையானது துளையிடுவதும் ஆணி இறுக்குவதும் என்ற அளவில்தான் இன்று பேணப்படுகிறது. இந்திரனுக்குப் புட்பக விமானம் செய்துதந்த இனம் இன்று ஐந்துக்கும் பத்துக்கும் விலைபோகின்றது. புட்பகவிமானம் ஒரு பொறிமுறை. ஒழுங்காகச் செய்தால் எழும்பிப்பறக்கும். கடலுள் செல்லும் கப்பல், தோணி நீருக்குள்தான் பயணிக்கும். பாரம் ஏற்றி இறக்கும். ஆனால் மூழ்காது. தண்ணீர் உள்ளேயும் வராது. ஒரு பொறிமுறை. ஒருகணக்கு. இக்கணக்குகளைச் சும்மா கணக்குவிட்டுத் திரிபவரிடம் மண்டியிட வைத்ததாலேயே இந்த இழி நிலை வந்தது.

ஆச்சார்யக் கலையிலுள்ள அறிவும் நுட்பமும், கணக்கும், சாய்வுகள், நிறுத்தல்கள், பொருத்துகளைத் தான் கற்றதுடன் அதனைத் தன் நுண்ணறிவால் விருத்தி செய்து எல்லோருக்கும் கற்றுத்தந்து. ஊக்கப்படுத்தியவர்தான் **அமரர் கந்தையா அருளானந்தம்** அவர்கள். குருவானவர் தான் கற்றவற்றைப் பிறருக்குக் கற்றுத்தர வேண்டும். கற்றுத் தராமையும் கற்க விருப்பமின்மையும் காசுக்காகப் பறந்ததாலுமே இக்கலை அழிந்தது. தனது சிறுபராயத்திலேயே இக்கலையை அத்தானாகிய **அமரர் கந்தையா சோமசுந்தரம்** அவர்களிடமிருந்து கற்றுத் தன்நுண் அறிவாற்றலால், இவற்றை நவீன மயப்படுத்தி வெற்றிகரமாகப் பலகட்டிடங்களுக்கான கூரைவேலையிலுள்ள ஊசிக்கால் வேலையில், வரைபடங்களுடன் வரும் தொழில் நுட்பவியலாளர்களையே வியப்புக்குண்டாக்கியவர். இவர் பொருத்திய ஊசிக்கால்களும் பல்வாய்ப்பொருத்துக்களும் இவரது தனி முத்திரை. கற்க விரும்பி வருபவர்களுக்குக் கற்றுத்தந்தமையும், சேதாரமற்ற வகையில் நிர்வகித்ததும் இவரது தனி ஆற்றல், இன்றும் இவ்வகை மூட்டுக்கள் பொருத்துக்கள் சிலரால் முடியுது என்றால் அவர் இவரது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவராகத்தான் இருந்திருப்பர். கிளியண்ணை என்று இவரைச் சுற்றி வேலை செய்பவர்கள் அனைவரையும் இடைவிடாது வேலை செய்ய வைக்கும் வகையில் ஓடி, ஓடி வரைத்துப் பங்கிட்டுக் கணக்குப் போட்டுக் காட்டிக் கொடுப்பார்.

இவ்வாறான சிறப்புக்களை வளர்த்துக் கொண்ட இவர் 1949ம் ஆண்டு ஆடி மாதம் 25ம் திகதி வேலன்பராய் **திரு.திருமதி கந்தையா கனகம்மா** இணையருக்கு நான்காவது பிள்ளையாகப் பிறந்தார். இவருக்கு முன் ஒரு பெண்ணும் இரு ஆண்களும் பிறக்க அவர்களுள் மூத்த ஆண்குழந்தை இறந்துவிட இவருக்குப் பின்னே பிறந்த மூன்று ஆண் சகோதரர்களுடனும் ஒரு தங்கையுடனும் பாசத்துடனும் பாதுகாத்தும், நெறிவழிநின்று பொருளீட்டிப் பெருமைசேர்த்தும் வாழ்ந்துவரும் நாட்களில் பல சமூகப் பணிகளிலும் கலைப்பணிகளிலும் ஈடுபட்டார்.

முன்னைய காலங்களிலெல்லாம் எமது ஸ்ரீ சரஸ்வதி சனசமூகநிலையம், சிவராத்திரிவிழா விடிய விடிய நடாத்தும். ஊரவருடன் உறவினர்களும் அயலூரவரும் ஒன்று கூடும் பெருவிழாவாக இருக்கும். இவருடைய உடலமைப்புக்கும், ஆளுமை வளத்தையும் கண்டு அரசர் பாத்திரத்தில்தான் நடிப்பார். **"பூங்குழலி பூரிக்கிறது என்உள்ளம்"** என்று கூறியவாறு பாண்டிய மன்னனாக இவர் மேடைக்கு வந்தால் கொண்டாடும் ரசிகர் கூட்டம். அப்படியொரு பாத்திரஅமைப்புப் பொருத்தம். பலசமூக நாடகங்களிலும், பொது சேவைகளிலும் ஊர்க்காவல் தொண்டர் படையிலும். சேர்ந்தியங்கினார். தொழில் வளம்பெருகக்கண்ட பலரும் பெண்தர முன்வந்த போதும் தச்சன்தோப்பிலிருந்து **தவமணி** என்பவரைத் தேர்ந்தெடுத்து 1976ம் ஆண்டு மணம் முடித்து பிள்ளைகளுடன் வாழுங்கால் இவர் விரும்பியவாறு **இராசமலர்** என்பவரையும் 1981ம் ஆண்டில் மணம் முடித்துப் பிள்ளைகளுடன் சீருடனும் சிறப்புடனும் வாழ்ந்த காலத்தில் நாட்டில் ஏற்பட்ட குழப்பநிலையால் இந்திய இராணுவம் 1987ல் தவறான தகவல் அடிப்படையில் கைது செய்து தடுத்துவைத்தும் சித்திரவதைப் படுத்தியதாலும் குற்றமொன்றும் செய்யாதபோதும் அதர்மம் ஓங்கியிருந்த நாட்களில் இனியும் இந்த நாட்டில் வசிக்க முடியாதென்று சுவிற்சலாந்து நாட்டுக்கு அகதியாகச் சென்று உணவுச்சாலை ஒன்றில் இணைந்து 25 வருடங்களாகத் தொடர்ந்து பணியாற்றி ஓய்வூதியமும் பெற்றுக் கொண்டிருந்தார். 2007ம் ஆண்டு இவருக்கு ஏற்பட் இரத்தாசிய அடைப்புக்குப் பெரும் அறுவைச்சிகிச்சையையும் அந்த நிறுவனமே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பேற்றுச் செய்தவேளையில், கூடவே யாருமற்ற நிலையில் **சத்தியராஜ்** என்ற இவரது நண்பர் ஒருவர் சுவிஸில் குடும்பத்தோடு வாழ்ந்து வருபவர் இவருக்கான பணிவிடைகள் யாவும் செய்து மீண்டும் எங்கள் சகோதரனை எங்களிடம் தந்தார். அவருக்கு எமது நன்றி எப்போதும் இருக்கும். இப்படியான உற்றவிடத்து உயர் வழங்கும் நண்பர்கள் பலரும், பற்றலர் பணத்துக்கான நட்பு வைத்திருப்பவரும் இவருக்கு ஏராளமாக உண்டு. உச்சமாக இந்தியன் இராணுவ காலத்தில் இவரைத் தனிப்பகைக்காக தான்சேர்ந்திருந்த கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து சுட்டுவிடத் தேடித்திரிந்த நாவற்குழி நண்பர் ஒருவரை பின்நாளில் அவரை வேற்று இயக்கத்தார்சுடத் தேடியவேளையில் கூட்டிச்சென்று பாதுகாத்து சுவிற்சலாந்துக்கு அனுப்பியவர் என்றால் இவரைப்பற்றி அதிகம் கூறவேண்டியதில்லை.

தச்சன்தோப்பில் வாழ்ந்த நாட்களில் அங்கோர் வாசிகசாலை இல்லையே என்றெண்ணி, கைவிடப்பட்டுக் குழியாயிருந்த காணியை மேடாக்கி ஸ்ரீ முருகன் சனசமூகநிலையத்தை அமைத்தார். வேலைத்தளத்தை கைதடிக்கு மாற்றியவேளை, தச்சன்தோப்பு வேலைச் சாலை இடத்தை ஆரம்ப மாணவர்களுக்கான இலவச பாடசாலையை ஆரம்பித்து தன்கணக்கில் ஆசிரியருக்குச் சம்பளம் கொடுத்து நடாத்திக் கல்வி கற்கத் தூண்டினார். இன்னமும் சொல்வதானால் அக்கால முருகையன் கோவில் நிர்வாகத்துடன் இணைந்து பெரும் பங்காற்றினர். அவ்வாறே கைதடி சிவன்கோயில், வாசகசாலை என்பவற்றுடனும் இணைந்து உதவிகள் செய்தார். படிக்கவென எவர் கேட்டாலும், பணஉதவி, தங்கிட வசதி உணவு உடை போன்றனவும் செய்வார். செய்தவை சொல்லக்கூடாதென அடிக்கடி கூறும் இவரின் ஆவணப் பதிவேட்டிலாவது இவைபேசட்டும். அவர் சென்ற இடமெல்லாம் சிறப்புற்றன. சிரிப்பும் மகிழ்வும்தான். கொண்டாட்டமும் குதூகலத்தையும் விரும்பும் இவர் யாரைக்கண்டாலும் மனக்கணக்குக் கேட்பார். அவ்வாறான குழந்தை உள்ளம் கொண்ட இவர் 22-04-2020 கனடாவில் காலமாகியதறிந்து வேலன்பராய் கிராமமே கதறியது. ஊருலகிலிருந்து தொலைபேசிகள் அழுதன. எங்களுக்கு ஆறுதல் கூறின. இந்தச் சிறிய கிராமத்தில் பிறந்தவர் சிகரம் போல் எல்லோர்க்கும் தெரிகிறார். எல்லார் மனதிலும் நிலைத்திருக்கிறார். அறமும் தர்மமும் நிலைத்திருக்கும். அவரின் ஆன்மா சாந்தி பெறும்

**- அண்ணன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## அமரருடனான அழியா நினைவுகள்











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறப்புனக்கில்லை

எந்தையாய் தாயாய் எமக்காகவே வந்தாய்
சிந்தையில் உறுதியொடு உழைத்தேநீ நின்று
முந்தைய மிடியகற்றி நிமிர்ந்திடவே வைத்தாய்
கந்தையா கனகம்மா பெற்றாலும் ஊருக்கும்

நன்றொன்றே என்றுமுன் சிந்தைநாடு போற்ற
என்றென்றும் வாழ்ந்தாய் பகையையும் நேசிக்கும்
பண்பொன்று எமக்குள்ளும் வளர்த்தாய் உம்போல்
என்றென்றும் பணிசெய்ய நாமுமிங்கு முனைவோம்

சில்லென்று பூத்தென்றும் சிரித்து மகிழ்ந்திருப்பாய்
நில்லென்று மறித்தாலும் தொடர்ந்தே செய்திடுவாய்
சொல்லொன்று செயலிலொன்று வேறுபாடு உனக்கில்லை
தில்கொண்டு எத்துணையும் முன்நின்றே செய்வாய்

விடண்ணை என்பாய் விடமாட்டேன், கோபம்
கேடண்ணை என்றிடுவாய், கொள்கையின் உறுதிகண்டு
நாடண்ணை என்றுரைத்தாய் நல்லது செய்யென்பாய்
சுடவுன்னை வந்தவனைச் சுவிஸ்க்கு எடுத்துவிட்டாய்

கிளியண்ணை என்பவரின் கபடங்கள் தெரிந்திருந்தும்
வழியில்லையென வந்தோர்க்கு வாழவழி அமைத்திடுவாய்
பழியொன்று மில்லையிங்கு பாசத்தில் வாழ்ந்திருந்தாய்
மொழியொன்று தெரியுதில்லை இதற்கும் மேலெழுதுதற்கு

உலகங்கள் எல்லாமின்று நீயொரு பேசுபொருள்
கலகங்கள் தீர்த்ததனால் நீயிங்கு நீதிபதி
தலங்கள் பலசீரமைத்த நீயோர் கர்மயோகி
காலங்கள் கடந்தாலும் நீயிங்கு நிறைந்திருப்பாய்

இறப்பொன்றும் இவ்வுலகில் புதிதே யல்ல
சிறப்பென்று வாழ்ந்தனவும் நிலையற்றுப் புதிய
பிறப்பொன்றுக் காயிடம் தந்து தம்மைத்
துறப்பதுதான் வாழ்வாயினும் நீயென்றும் நிறைந்திருப்பாய்.

- அண்ணை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறு

தம்பிநீ வந்தாய் இவ்வுலகில் உன்னை
நம்பியென்றும் வந்தார் வாழ்ந்தாருன் செயலில்
நம்பிவந் தார்முக மலர்ந்தாருன் தயவில்
நெம்பியுய ர்த்திவைத் தாயுன் அருகில்
வம்பிருந்து பேசுவோர் வாதிடுவோர் தெருவில்
கம்புகொண் டுநீவரவே மாறிடுவார் உருவில்
நம்பிநின்ற மக்களின்று மருளுகிறர் மனதில்
தம்பிநீ மறைந்தாலுமிவ் வுலகிலென்றும் வாழ்வாய்

சின்னண்ணா நீசென்ற ஊரெல்லாம் இன்புறவே
சீரானஅறி வுடனேமாந் தரங்கு எழவே
பொன்னண்ணா எம்செல்வர் பொருதிடா திணைந்தே
பொறுமை யுடன்கற்று அவருயர வேண்டி
கண்ணண்ணா நீயமைத்த வாசகசாலை இன்று
கனபேரைக் கரையேற்றி வைத்தல்லோ இருக்கு
மண்ணண்ணா சிலர்போட்டு மறைத்தாலு முண்மை
மறுபடியும் எழுமிங்கு எப்போதும் வாழ்வாய்

பூட்டாச்சி பள்ளிக்கு அன்றுகாணி தந்தார்
பிள்ளைகள் கற்றுயர வேண்டியங்கு நின்றார்
காட்டாட்சி நடக்கின்ற காலத்தில் நீயும்
கல்விக்காய் பள்ளியொன்று உன்வீட்டில் தந்தாய்
போட்டாச்சு பூட்டின்று காலத்தின் கோலம்
புதுநிலவே நீயெழுந்த வழியினிலே இன்று
கூட்டாட்சி நடத்திவரப் பிள்ளைகளும் கற்கக்
கட்டியமும் தந்தாய் கனவானே வாழ்வாய்

எப்போதும் பிறர்க்காக வாழ்ந்தவெம் குலவிளக்கே
ஏனின்று எமைப் பிரிந்து சென்றாயோ வெங்கோ
இமைப்போதும் எண்ணவில்லைக் கலங்கரை விளக்கின்று
இல்லாது போகும் வழிகாட்ட வென்று
தானெப்போதும் துயரனைத்தும் நெஞ்சில் சுமந்தபடி
தாதாதி யாருக்காய் வாழ்ந்து வந்த
காப்பொன்று உடைந்ததுவோ கனதுயரம் தந்ததுவோ
காய்ப்பவை விழுமுலகில் நீயென்றும் வாழ்வாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாமே தமக்கெனவே வேண்டுமிக் காலத்தே
ஏகாந்தம் இன்பமல்ல, சேர்ந்து வாழ்தல்
பொல்லாப் பொருள்சேர்ப்பார் பொய்கூறி வந்தாலும்
போதாதென்போர்க்கு இன்னுந்தந்து சென்றவனே
கல்லாய் மனிதராய்ப் பேயாய் ஏழ்பிறப்பு
காசினியில் எடுத்தோர், நரிகளாய் காண்கையில் நீ
சொல்வாய் "விடண்ணை" என்றுரைத்துச் சென்றவனே
இல்லாத மாந்தரிடை என்றும் நீ வாழ்வாய்

# சின்னண்ணை

அன்புள்ள சின்னண்ணனுக்கு பிரியமுடன் ஒரு கடிதம் எழுதுகிறேன். சிறுவயதிலிருந்தே எங்கள் குடும்ப உயர்வுக்காய் உழைத்தாய். அதற்காக நீ இரத்தம் சிந்தியதும் என் நினைவில் நிற்கிறது. எனக்காகப் பெரியவர் சிறியவர் என்று பேதமில்லாமல் எல்லோரிடமும் ஏச்சுக் கேட்போதிலும் "எதையும் தாங்குவேன் அன்புக்காக நான் இதையும் தாங்குவேன் தங்கைக்காக" என்று பாட்டுப்பாடி மகிழ்வாய். வயலை நிரப்பி, வாயைக்கட்டி, வயிற்றைக்கட்டி, சீட்டைக்கட்டி, வீட்டைக்கட்டி தங்கைக்குக் கொடுத்தோம் என்றீர்கள். இந்த "கட்டி" என்ற சொல்லுக்குள் கனக்க இருக்கு. இது எங்களது "வசந்தமாளிகை" எல்லோரும் வரவேண்டும் தங்கவேண்டும் என்றுதான் விருப்பம் கொண்டிருந்தீர்கள். இங்கேதான் திருமணங்கள் நடந்தன. குழந்தைகள் பிறந்தன. ஒரு கூட்டுக்குள் வாழவேண்டும் என நினைத்தீர்கள் திக்கொண்டுக்குப் பறந்தனர். நீயும் பறந்தாயே. கிளியென்று பெயர் பெற்றமையால் பறந்தனையோ.

வீரபத்திரர் கோவில் திருவிழா வருகிறது எப்படியெல்லாம் செய்யவேண்டுமென முதலிலேயே திட்டமிட்டியே அண்ணா. பூசைகள் நடக்கின்றன என் ஆசை அண்ணா நீயில்லையே, அண்ணனுக்கு நல்ல தம்பியாகி தம்பிமாருக்கெல்லாம் நல் அண்ணனாகி தங்கை எனக்கொரு அப்பாவுமாகி, அம்மாவாகி அவர்கள் பிள்ளைகளுக்கெல்லாம் வழிகாட்டிய குருவாகத், தோழமை கொள்ள வந்தவர்க்கெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்றவிடத்து உயிர்வழங்கியும் அத்தானுக்கும் நற்குருவாக ஆகி நின்றாயே அண்ணா என்றும் எங்களுடன் நினைவாய் நிழலாய் வாழ்வீர்கள்.

ஏதெது நடந்தாலும் முன்நின்று செய்து வைப்பாய் அவ்வாறே எங்கள் பெரிய அண்ணியின் மரணநிகழ்விலும், உன் வருத்தங்களை மறைத்துக் கொண்டு வந்து கலந்து எங்களை ஆறுதல் படுத்தினாய். சிலவேளைகளில் எம் சோகம் "கண்டு நரிவந்து போனதோ" எனநகைப்பாய். எங்களை மகிழ்விப்பாய். எங்கள் மகிழ்விற்காய், உயர்வுக்காய் துன்பங்களை உள்ளே சுமந்தபடி "மலர்களைப்போல் தங்கைதூங்குகிறாள் அண்ணன் வாழவைப்பான் என அமைதிகொண்டாள்" எனப்பாடி மகிழ்விப்பீர்கள். வாழவைத்த தெய்வம் இன்று வானுலகேகியதேன்.

எண்பத்தைந்து வயதுவரை வாழ்ந்திருப்பேன் என்பாயே மகிழ்ந்திருந்தோமே, உன்னைப் பார்த்திருக்கலாமென்று. மண் விழுந்ததே அவ்வெண்ணத்தில். அண்ணா நேரங்காலம் பார்க்காது நினைத்த போதெல்லாம் தொடர்புகொள்வீர்கள். நினைத்தவையாவும் செய்து முடித்தனை. நினைவுகள் யாவும் நல்லனவாக இருந்தன. நினைத்தபோது நினைத்தவை அனைத்தும் செய்து முடிப்பது உனது வழமை. ஆனால் யாரும் நினைத்திருக்காத செயலை ஏனின்று செய்து முடித்தனை. உயிர் பிரியும் நேரத்திலும் உறவுகளைத்தான் நினைவில் கொண்டிருப்பீர்கள் அண்ணா. எல்லாவற்றிலும் எங்களுடன் பங்குகொண்ட உன்னுடன் காலம் வரும்போது வந்திணைவோம். அதுவரை எங்களுடன், இனிய நினைவுகளாக செயல்களொவ் வொன்றின் நிழல்களாக நிறைந்திருப்பீர்கள். கூற்றுவன் கொடியவன், ஆயினும் எங்கள் நினைவுகளை அவனால் பிரிக்க முடியாது. நீ காட்டிய வழியில் என்றும் உன் மகிழ்விற்காய் வாழ்வோம். அண்ணா.

**என்றும் உன்பாசமுள்ள**
**தங்கை (மங்கை)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம் அப்பா

"தெய்வங்கள் எல்லாம் தோற்றே போகும் தந்தையின் அன்பின் முன்னே, தாலாட்டுப் பாடும். தாயின் அன்பும் தந்தை அன்பின் பின்னே" என்ற பாடல்வரிகளுக்கமைய என் அருமை அப்பாவின் அன்பும் மிகச் சிறந்த செல்வமாகும். சிறந்த தகப்பன் தான் வாழ்க்கையில் சந்தித்த கஷ்டங்களையும், அவமரியாதைகளையும், தடுமாற்றங்களையும் தன்பிள்ளைகள் சந்திக்கக்கூடாது என்று நினைப்பார் என் அப்பாவும் அப்படியே! அவர் இளவயதில் பட்ட கஷ்டங்களைச் சொல்லிச் சொல்லி எம்மை வளர்த்தெடுத்தார். நான் கேட்டவற்றைவிட அதிகமாகவே என் தேவைகளைப் பூர்த்தி செய்தார். எனது கல்வியிலும், உயர்கல்வியிலும் "நான் எப்போதும் உங்களுக்காகவே" என்று மனதிடத்தையும் தைரியத்தையும் வளர்த்து ஊக்குவித்தார்.

நீங்காத நினைவுகளைவிட்டுச் சென்ற அப்பா... நீங்கள் இல்லாத உலகத்தில் எல்லாமே குறைதானப்பா... கடவுள் உங்கள் உடலை மட்டும்தான் எங்களிடமிருந்து பிரித்துவிட்டார். ஆனால் உயிராய் என்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள். உங்களுக்கும் எனக்கும், எனக்கும் உங்களுக்கும் இடையே இருந்த உறவு நண்பர்களுக்கும் மேலானது. நீங்கள் என்னிடம் எதையும் மறைத்ததில்லை. நானும் உங்களுக்கு எப்போதுமே உண்மையாகவே நடந்துகொண்டேன்.

வேலை நிமித்தமாக, நீங்கள் எமைப்பிரிந்து சுவிஸில் வாழ்ந்திருந்தபோதும், யாழ்ப்பாணத்தில் பெரியப்பா வீட்டில் நின்ற போதும் கூட நாள் தவறாது தொலைபேசியில் கதைக்காமலிருந்ததில்லை. இப்போது கூட என்நினைவில் உங்கள் முகம்தான் தெரிகிறது. அன்புக்கு அடையாளமாக வாழ்ந்தீர்கள் அப்பா. எதிரிக்குக்கூட அன்புகாட்ட எங்கிருந்து அப்பா கற்றுக்கொண்டீர்கள்? கடவுளிடம் வரமாக உங்களையே கேட்பேன். இப்பிறப்பில் என்னிடம் வருவீர்களா? என் அன்பு அப்பாவே

**மகள்**
**திருமதி. யுஜிதா ஜனர்த்தனன்**
கனடா



PUBLIC LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பா

இந்த உலகிற்கு எம்மைத்தந்த தந்தையே எங்கள் வாழ்க்கையின் வழிகாட்டியே அன்பு வரலாற்றின் முதல்வரியே எங்கள் வாழ்வுக்கும் வளத்துக்குமான மூச்சுக்காற்றே ஒரு நல்ல தந்தையாயிருந்து எங்களை வளர்த்தீர்கள் வாழ்வளித்தீர்கள். நீங்கள் இல்லையென்பதை மனம் ஏற்க மறுக்கிறது. நாங்கள் இங்கிருந்து வாட எங்கள் நினைவுகளுடன் நீங்கள் இறைவனடியில் இருக்க என்றாகிவிட்டதே அப்பா

பிரிவைத் தாங்கமுடியாத மகள்

**திருமதி தர்சினி இன்பகுமார்** (பிரான்ஸ்)

# தாத்தா

எப்போதும் எங்களுடன் இருப்பீர்கள், தாத்தா. என்ன கேட்டாலும் வாங்கித்தருவீர்கள் தாத்தா. எப்போதும் நினைத்து வாழ்கிறோம் தாத்தா. நீங்கள் தொலைவில் வசித்தாலும் எங்களுடன் பேசத்துடிப்பீர்களே. இப்போது யாருடன் பேசுவது தாத்தா. எங்களை ஆசையோடு அள்ளி அணைத்தும், ஆசைப்படாதவற்றைக்கூட வாங்கித்தருவீர்களே தாத்தா. நாங்கள் ஆசையோடு அழைக்க நீங்களில்லாமல் போய் விட்டீர்களே தாத்தா. அந்த நாட்களை, எண்ணியபடி உங்கள் புகைப்படத்துக்கு மலர்தூவி அஞ்சலிக்கின்றோம்

பேரக்குழந்தைகள்

**சௌமியா, இனோஷா, மதுலோயன்** (பிரான்ஸ்)

# அண்ணா அண்ணா

அண்ணா, சின்னண்ணா எப்படி அழைத்தாலும் வருகிறீர்கள் இல்லையே. நாங்கள் குடும்பத்தில் இளைஞர்களாக ஒன்றாயிருந்து வாழ்ந்ததை எண்ணிப்பார்க்கிறேன். ஏணியாயிருந்து எங்களை எல்லாம் மேலேற்றிவிட்டு இன்று மீளா உறக்கத்திலிருப்பதை மனம் ஏற்றுக்கொள்ள மறுக்கிறதே. அண்ணா. பல வருடங்களாகத் தொழில் நிமித்தமாகப் பிரிந்து வேறுவேறு நாட்டில் வாழ்ந்துவிட்டு இப்போதுதான் இங்கே வந்தீர்கள். இனியாவது அன்புகாட்டி ஒன்றாய் இருந்து பழையவற்றை நினைத்துக்கொண்டு இளைப்பாறலாம் என்று நினைத்திருந்தேன் அண்ணா நீங்கள் மட்டும் பூரண ஓய்வு எடுத்துக் கொண்டதேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்கு அடுத்துப் பிறந்தவன் என்பதால் எவ்வளவு சண்டை யிட்டிருப்போம், எவ்வளவு அன்புகாட்டியிருப்போம். மனம்விட்டுப் பேசி மகிழ்ந்திருக்கலாம் என்று நினைக்க.... தாங்கமுடியவில்லையே அண்ணா மரணத்தை வெல்ல வழியேது? உங்கள் ஆத்மா சாந்தியடைய உங்கள் வழியில் உங்கள் பணிகளைச் சுமந்து நடப்போம்.

சாந்தி சாந்தி சாந்தி

**தம்பி க. தங்கராசா (கனடா)**

## பெரியப்பா

பெரியப்பா நீங்கள்மிகவும் அன்பானவர். நாங்கள் எது கேட்டாலும் முடியாது என்று கூறவே மாட்டீர்கள். நீங்கள் மிகவும் பொறுமையானவர். உங்கள் சிரிப்பு, எங்கள் மனதிருக்கும் கவலை போக்கும். எங்கள் வளர்ச்சியில் பங்கு கொண்டு நல் ஆலோசனைகள் தருவீர்கள். நீங்கள் எங்களுக்குப் பெரியப்பாமட்டுமல்ல, நல்ல நண்பனும் குழந்தைகள் எங்களுடன் குழந்தையாகி, விடுகதைகள் கேட்டு விடைகூறாமல் யாம் நிற்க, நீங்களும் மகிழ்ந்து எங்களையும் மகிழச் செய்வீர்கள். சுவிஸிலிருந்து தொலைபேசி வழியாக வந்து சேரும் அன்புக் கட்டளைகள் எங்கள் வாழ்க்கையைச் செப்பனிட்டது. அன்பான அரவணைப்பு எங்களுக்கு இல்லாமல் போய்விட்டதே. எங்களுடன் என்றும் இனிய நினைவுகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள்.

**பிரசாந்த் பிரதிஷ்டா, பிரவீணா, பிரதீபா**

## சித்தப்பா

சித்தப்பா நீங்கள்பெட்டி பெட்டியாகக்கொண்டுவரும் சுவிஸ் சொக்கலேற்றுக்கள், இளமைக் காலத்தில் இலங்கையில் நின்ற நாட்களில் கொண்டு வந்த பலா, மா பழவகைகள் யாவற்றிலும் நீங்கள் காட்டும் அன்புதான் இனிமையானது. பிள்ளைகள் அப்படித்தானே இருப்பார்கள் என எங்களுக்காகப்பரிந்து அப்பாவிடம் கண்டனத்துக்குள்ளான நாட்கள் எத்தனை? உங்களுக்குகோபமே வராதா சித்தப்பா? விடண்ணை என்று கூறி அப்பாவிடம் பேச்சுவாங்கிய நாட்கள் எத்தனை? எனினும் கோபப்பட்டாலும் உங்களுக்கிடையேயிருந்த அன்பும் பாசமும் நாங்கள் நன்றாகவே தெரிந்து வைத்திருக்கிறோம். உங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இராமாயணத்துப் பரதன்" என்று கூறி அப்பா அழுவதை அம்மா காட்டித்தர மருகி நிற்போம். உங்கள் உறவுகளில் நீங்கள் காட்டிய பாசமும் அன்பும் அக்கறையும் பார்த்துப் பார்த்து நாம் வளர்ந்தோம். அன்புகாட்டிய அம்மாவும் நீங்களும் ஒரு வருட இடைவெளிக்குள் எமைப்பிரிந்து போனது அடிக்குமேல் அடிசித்தப்பா. ஒவ்வொரு கணமும் உங்களையும் உங்கள் மனக்கணக்குகளையும் எண்ணி எண்ணி எங்கள் பிள்ளைகளும் அங்கலாய்க்கின்றனர். பிறப்பவர் இறப்பதுதான் உண்மையாயினும் எங்களுக்கு இரு அன்புயிர்கள் பிரிந்தனவே சித்தப்பா. தாங்கமுடியவில்லை சித்தப்பா.

**சுதா ஜெயா, மது, தயா ஜனா**

# கிளியண்ணை

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட கந்தையா அருளானந்தம் (கிளியண்ணை) அவரின் பிரிவுத் துயருற்று இருந்த வேளையில், அவர் முன்நின்று எங்கள் ஊருக்கு (தச்சன்தோப்பு) செய்த சேவைகளின் நினைவலைகள் வந்து தொண்டையை அடைக்கிறது. அவர் எமதூருக்குத் திருமணத்துடன் வந்தவரெனினும் எமதூருக்கு அவர் செய்த சேவைகள் சொல்லி முடியாதன. வாசிகசாலையொன்றில்லாமலிருந்த ஊருக்கு இளைஞர்களை ஒன்றுசேர்த்து ஸ்ரீ முருகன் வாசிகசாலையை ஸ்தாபித்தார். தலைமைப் பொறுப்பையும் ஏற்றுத்திறம்பட நடத்திவரும் வேளையில், சிறுவர்களுக்கான பாலர் பாடசாலை ஒன்றைத் தங்கள் வளவில் நிறுவி ஆசிரியருக்கும் சம்பளம் வழங்கிக் கல்வியறிவூட்டினார். தொடர்ந்து வந்த உள்நாட்டுப் போர்ச் சூழ்நிலையில் ஊர்மக்களைக் காப்பாற்றுவதற்காக இரவிரவாகக் கண்விழித்து ஒவ்வொரு மூலையிலும் நின்று மக்களைக் காப்பாற்றிய மாமனிதரின் இறுதிச் சடங்குகளில் இங்கேயே வாழ்ந்தபோதிலும் கூடக் கலந்துகொள்ள முடியாதபடி, கொரனா கொவிட் 19 தடுக்கிறதே அப்பாவிகளாக நின்று நாங்கள், கலங்குகின்றோம் உங்கள் ஆத்மா சாந்தி அடையப் பிராத்திக்கின்றோம்.

**அருளப்பு உதயன்**

தச்சன்தோப்பு (கனடா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னண்ணா

சின்னண்ணா நீங்கள் எனக்கு இன்னும் ஒரு அப்பா, இளவயதில் நாமெல்லோரும் ஓலைக்குடிசையில் வாழ்ந்த வாழ்க்கை மிகவும் மகிழ்வானது. எங்கள் குடும்ப நலனுக்காக உங்கள் பாடசாலை வாழ்க்கையையும் அதுதரும். சந்தோசங்களையும் இழந்து சிறுவயதிலிருந்தே வேலைக்குப் போய் உழைத்துவரும் காசையெல்லாம், குடும்பத்தைச் சீராக நிர்வகித்து வந்த பெரிய அண்ணாவிடம் கொடுத்துவிட்டு, சினிமாவுக்குப்போகவோ அல்லது வேறு தேவைகளுக்காகவோ, அவரிடம் கேட்டுக் கொண்டு நின்ற நாட்கள் அற்புதமானவை. கைதடியில் அரிசி மூட்டையை வாங்கி, மோட்டார் சயிக்கிளில் கட்டிக்கொண்டு பின்புறமாகக் கவிண்டு விழுந்த நாட்கள் அனைத்தும் அழியாத நினைவுகள் அண்ணா. மகிழ்வு தரும் நாட்கள்.

கைதடியில் 15-20 பேருடன் வேலைசெய்வித்துக் கொண்டிருந்த நாட்களில், எங்களிருவரையும் இந்திய இராணுவம் தடுத்து வைத்து, உங்களைக் கொல்லப்போவதாக இம்சைப்படுத்திக் கொண்டிருந்த வேளை தமிழ்தெரிந்திருந்த இராணுவ வீரரொருவரின் உதவியுடன் வெளியில்வந்து. இரவிரவாக கொழும்பு சென்றவேளை நாங்கள் சந்தித்த கஷ்டங்கள், உயிர் அச்சுறுத்தல்கள், பூசா தடுப்பு முகாமுக்குச் சென்று மீண்டு வந்த எனக்கு மீண்டும் ஏற்பட்ட கஷ்டங்கள், மரணவலிகளுடன் நாங்கள் சுவிற்சிலாந்து சென்றதை இன்னமும் மறக்க முடியுது இல்லை அண்ணா

சுவிஸ்நாட்டில் வாழ்ந்த நாட்களில் சமைத்து உணவுதந்து எனது உடுப்புக்களையும் கழுவி நான்விரும்பிய படி கல்யாணமும் செய்து வைத்து என்னைக் கனடா அனுப்பி, உங்கள் பிள்ளைகள் மூவரை எனது பராமரிப்பில் வளர்த்து விட மகிழ்திருந்தீர்கள் அண்ணா. பொய்க் குற்றம் சுமத்தி இந்திய இராணுவத்திடம் உங்களை காட்டிக்கொடுத்த வருக்கு மாற்று இயக்கங்களால் உயிர் ஆபத்தென்று வர சுவிற்சிலாந்து கூட்டிப் பாதுகாத்து வாழவைத்த பெரும் குணம் உங்களது. எப்போதும் மற்றவர் நலனுக்காக வாழ்ந்து "உங்களிடம் இயலுமை இருக்கும்போது இயலாதவர்களுக்கு உதவி விடுங்கள்" என்று நீங்கள் கூறி வாழ்ந்து காட்டிய வழியில் வாழ்கின்றோம் அண்ணா. எம்மால் உங்களுக்குச் செய்ய முடிந்தது அவ்வளவே. கடைசி நிமிஷம் வரை பிறர் மகிழ்வில் மகிழ்ந்திருந்த நீங்கள் இறைவனுடன் கலந்து மகிழ்ந்திருப்பீர்கள்.

சாந்தி சாந்தி சாந்தி

**தம்பி தேவன் (கனடா)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரியப்பா

நீங்கள் சொர்க்கத்தில் உறங்க
எங்கள் மனமோ
உங்களோடு கலந்து உறங்கும்
நிலவு இருக்கும் தூரத்தைவிட
நீங்கள் இருக்கும் தூரம் குறைவுதான்
நிலவைத் தொட்ட எங்களால்,
உங்கள் நினைவை மறக்கமுடியுமா?
ஏதோ ஒன்று தொலைத்ததுபோல
என்னவோ ஒன்றை இழந்ததுபோல
தொலைத்ததும் தெரியாமல் தேடவும் முடியாமல் இருக்கு
சாய்ந்து சத்தம் போட்டு அழவேண்டும் போல இருக்கு
புன்னகை செய்ய
கற்றுக் கொடுத்த
பெரியப்பாவின் இதழ்கள்!!
இன்று..... கண்ணீர் விடவும்
கற்றுக் கொடுக்கிறது.....!!!

**சாம்பவி, கபிலன், வினோஜா**

## அப்பா

அம்மாவின் வயிற்றில் 3 மாதக் கருவாக நான் உருவாகிய போதே வெளிநாடு சென்றுவிட்டீர்கள். இந்த உலகை நான் பார்த்த நாள் தொடக்கம் 12 வருடங்கள் அப்பாவின் பாசத்தை உணராதவன், கைகளைப் பற்றிக்கொண்டு கூட நடக்காதவன். அவரின் உறவினர்கள் எல்லோரும் கிளியண்ணை என்றுதான் குறிப்பிடுவார்கள். அப்பாவும் கிளி போலப் பச்சை நிறமா என வேடிக்கையாகக் கேட்ட நினைவுகள். 12 வருடங்களின் பின் விமான நிலையத்தில் உயர்ந்த ஆரோக்கியமுள்ள மாமனிதர் வந்து என்னை அணைத்தபோதுதான் அப்பாவின் அன்பை அறிந்தேன். அவரை அநேக நாட்கள் பிரிவின் பின் அவருடைய அன்பு முழுவதும் கிடைக்கின்றகாலத்தில் நாம் ஒன்றாயிருக்கின்ற நேரத்தில் கடவுள் அவரை அழைத்துவிட்டார். எப்போதும் மலர்ந்த முகத்துடன் இருக்கும் அவர் கவலைகளை வெளிக்காட்டுவது இல்லை. நல்ல அப்பாவாக நண்பனாக வழிகாட்டியாக வாழ்ந்த உங்கள் உயிர் என்றும் எங்களுடன் இருக்கும் உங்களை எரித்த தீ அணைந்து விட்டது. எங்களை வாட்டும் உங்கள் நினைவுத் தீ இன்னமும் எரிந்து கொண்டு தானிருக்கிறது. அப்பா, அப்பா என நாளும் அழுது கொண்டிருக்க நீங்கள் காட்டிய பாசமும் அன்பும்தான் ஆறுதலளிக்கிறது. அப்பா நீங்கள் கற்றுத்தந்தபடி, வாழ்ந்து காட்டிய வாழ்க்கை முறையில் எம்வாழ்க்கை தொடரும் அப்பா இறைவனடியில் என்றும் இன்புற்றிருங்கள் அப்பா.

சாந்தி சாந்தி சாந்தி

**மகன் லதன் (கனடா)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனி வரும் தலைமுறைக்கு...

1976 ஆம் ஆண்டு அளவில் திருமணம் செய்து எமது ஊருக்கு வந்தவர் அமரர் அருளானந்தம் (கிளி) இவர் திறமையான ஆச்சாரியார் பல தொழிலாளர்களை உருவாக்கியவர். எமது கிராமத்தில் நடைபெறும் பொது வேலைகளில் பங்கு கொண்டு சரியான முறையில் செய்து முடிப்பவர். எமது கிராமத்தில் இவரினால் சிறப்பாக வித்திடப்பட்ட முன்பள்ளியின் ஆரம்ப கர்த்தாவாகவும் விளங்கி முன்பள்ளியின் தேவைகளை தனியாளாகப் பூர்த்தி செய்து கொடுத்தவர். கிராமத்தில் முதல் தடவையாக ஆரம்பமான முன்பள்ளியினை தனது இல்லத்தில் நடாத்தி வந்தவர். அத்தோடு மட்டும் நின்று விடாது கிராமத்தில் சனசமூக நிலையம் அமைப்பதற்கும் முன் நின்று பங்காற்றியவர். 1986 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சிறிமுருகன் சனசமூக நிலைய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டு கிளி அவர்கள் பல வழிகளிலும் கிராமத்தின் வளர்ச்சிக்காக சமூக நாடகங்கள், கிராமிய நாடகங்கள், கருத்தரங்குகள் என நடாத்தி வந்தவர். சனசமூக நிலையத்தின் நிதித் தேவைகளை ஊர்மக்களுடன் இணைந்து பூர்த்தியாக்கியவர். இவரின் மறைவு எமக்கு பெரிய இழப்பாகும். கிளி அவர்களினால் ஆரம்பித்து வைத்த முன்பள்ளி இப்போது கிராமத்தின் மத்தியில் இனிவரும் தலைமுறைக்கு அறிவூட்டல் செயற்பாட்டை ஆரம்பித்து இருப்பது எமக்கு அமைதியைத் தந்து இருக்கிறது. கண்ணீரை துடைத்துக் கொண்டு அவர் ஆரம்பித்த கருமங்களைத் தொடர்வதே சிறப்பான அஞ்சலியாகும்.

மறைந்தாலும் வாழும்
அமரர் கிளி அவர்களின் நினைவுடன்
ஸ்ரீமுருகன் சனசமூக நிலையத்தின்
முன்னாள் தலைவர்

**க.முத்துராசா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்வாழ்க்கை படத்திற்கு நீயே இயக்குனர்

"வாழ்க்கை" படத்திற்காய் என் கதையை எழுத
இயக்குனராய் சிந்தித்தேன் அன்றொருநாள் பொழுது
சிந்தனையை நிறுத்திச் சிந்தித்தேன் ஒருகணம்
வாழ்க்கை என்றால் என்னவென்று.....

இன்பங்களும் துன்பங்களும் இயற்கையின் நியதி
இன்பமும் துன்பமும் சரிபாதி இருப்பதில்லை
மின்னலாய் ஒரு கணமும் மின்மினியாய்ப் பலகணமும்
ஒளிர்ந்து விட்டு ஒழிவதுதான் வாழ்க்கை.

விரிந்த இவ்வுலகில் வென்றமனிதர் சிலர்
வேடிக்கையால் தோல்விதனை வென்றுவிட்டோர் பலர்
தோல்வியின்றி உயரேயேறி போய்விடலாம் என்றாலோ
வீழ்த்தி நடை போடுகிறது வாழ்க்கை

நல்லவராய் இவ்வுலகில் வாழ்ந்துவிட முடியாது
தீயவராய் இவ்வுலகில் வாழ்ந்துவிடக் கூடாது
வாய்ப்பதனைத் தட்டிவிட வரிசையிலே நிற்கிறது
இத்தனைக்கும் மத்தியிலும் தன்பாட்டில் "வாழ்க்கை"

சீர்கொண்டு இவ்வுலகில் திளைத்திடவும் முடியாது
சீறிவிட்ட மனிதனவன் சிகரம் தொடமுடியாது
சிதறிவிட்ட இப்பூமியி லொருவன் மனதாரச்
சிரித்திட்டாலும் பைத்தியமே, பைத்தியமே வாழ்க்கை

அடுத்தநொடி மரணம் அறிந்து கொண்டும்
அழிவுதனை ஏற்றுவிட மறுக்கிறது நெஞ்சம்
பூமியிலே ஜனன மரணம் புதிதல்ல, புரிந்தால்
பாரினிலே அடைந்திடலாம் பட்டாம்பூச்சி வாழ்க்கை

மாசற்ற இயற்கையிலே மாசு கொண்ட மனிதநெஞ்சில்
தூர்வார யாருமில்லை போலியுறு ஜோதிகொண்டு
பொல்லாப்புடன் உன் கதையை அனுசரித்து
வேறொருவர் எழுதிவிட இதுஎன்ன வாழ்க்கை?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூத்திருக்கும் ரோஜாவுக்கு ஆறுதல் மழைத்துளிதான்
வாட்டமுற்ற பயிருக்கும் அதுவே ஆறுதலாம்
உனக்கான ஆறுதலை உனக்குள்ளே தேடிவிடு
சிதைந்துபோன உன்மனதில் சீர்பெறுமே வாழ்க்கை

வாழ்கையென்ற என்படத்தில் வந்துபோயின சில காட்சிகள்
முடிவில்லா இக்கதையிடை முறித்துவிட்டேன் சிலகதையை
இயக்குனராயி ருந்து நானுனக்கான அறிவுரை
உன் வாழ்க்கை படத்திற்கு நீயே இயக்குனராகு
இயக்குனராகி நீயே உன்கையிலுன் வாழ்க்கை

**லோஜிகா அண்ணாமலை**
**ஆரம்ப உயர்தரம் (கலைப்பிரிவு)**
**யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி**

# வெற்றியின் இரகசியம்

தொழிலின் மதிப்பு அதனுடைய குணத்தையும் தன்மையையும் பொறுத்தே தீர்மானிக்கப்படுகிறதே தவிர அதனுடைய அளவினால் அல்ல. செயலின் தன்மை, உலகில் பணிபுரியும் ஒரு தனிமனிதனை வழிகாட்டி ஊக்குவிக்கும் குறிக்கோள்களைச் சார்ந்திருக்கிறது. குறிக்கோள் உயர்ந்தும், சிறந்தும் இருப்பின் ஒருவருடைய செயலில் அழகும், திறமையும் அதிகரிக்கின்றன. மகா உன்னத வெற்றிகளைக் குவிக்கும் மாமனிதர்கள் எல்லோரும் இப்படிப்பட்ட குறிக்கோளினால் ஊக்கமடைந்து உலகில் சீர்மிகுந்த செயல்களை அற்புதமாகப் படைத்திருக்கிறார்கள். அவர்களுடைய செயல்களின் பலன்களைத் தொடரும் தலைமுறையினர்கள் அனுபவித்து வருகின்றார்கள்.

இன்றைய உலகின் மனிதன் அவனுடைய செயல்களை அணைபோட்டு அரவணைத்துச் செல்ல ஒரு தெளிவான குறிக்கோள் இல்லாமல் இருக்கின்றான். சுயநலசெயல்களை மேற்கொள்ளத் தூண்டும் ஒரு இலட்சியமோ ஒருதொலைநோக்கோ அவனிடமில்லை. ஒரு காரியாலயத்தில் ஊழியனாகவோ. அல்லது ஒரு அமைப்பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாகியாகவோ அவன் எந்த ஒரு வேலையைத் தொடர்ந்து செய்யும் போதும் மனச்சோர்வையே அனுபவிக்கிறான். அவன் அலுவலகத்தையடைந்து வேலையைத் தொடர்ந்து, தொடங்கிய உடனேயே ஓய்வடைந்து விடுகிறான். மாலை வீடு திரும்புவதற்குக்கூட அவனிடத்தில் சக்தியில்லை. இச்சூழ்நிலையிலும் அவன் செய்யும் வேலை மதிப்பற்றதாகி அவன் சமுதாயத்திற்கு ஒரு சுமையாகிவிடுகின்றான்.

வாழ்க்கையில் ஒரு தீர்மானமான அற்புதமான குறிக்கோள் அல்லது இலக்கைத் தேர்ந்தெடுத்து அதனைச் சாதனையிலேயே கருத்தூன்றி முழு அர்ப்பணிப்புடன் சலிப்பின்றி உழைத்து இப்படிப்பட்ட மனச்சிதறல்களை அடக்குவதிலேயே வெற்றியின் இரகசியம் புதைந்திருக்கிறது. தன்னலமற்ற சமர்ப்பணப் பாவனையுடன் மேற்கொள்ளப்படும் இத்தகைய செயல்கள் வாழ்க்கையில் ஒரு ஊக்கத்தையும் மன அமைதியையும் ஒரு பிடிப்பினையையும் மகிழ்ச்சியையும் இடைவிடாது தந்து நம்மைத் திறமைக்கும் வெற்றிக்கும் வழிநடத்திச் செல்கின்றன.

இப்படியாக படிப்படியாக ஒரு பரந்த நோக்கை நாம் வளர்த்துக் கொள்ள மதம் உதவுகிறது. நம் குறுகிய காரியங்களை விட உன்னதமான காரணங்களிற்கு வேலைசெய்யும் பழக்கத்தை வளர்த்துக்கொள்ள நாம் வேலையிலேயே ஊக்கத்தை அடையும் வழியைக் கற்றுக்கொள்ள வேண்டும். உலகப்பொருட்களை உடைமையாக்குவதாலும் வெற்றிப் புலனின் பங்காலும் வரும் நிரந்தரமற்ற சுகத்தை விட நல்ல வேலையைத் தன்னலமின்றி முடிக்கும் பொழுது வரும் மனத்திருப்தி பன்மடங்கு உயர்ந்த சுகமாகும். ஒருவரின் உள்ளத்திலேயே வாழ்க்கையின் வெற்றி அடங்கியிருக்கிறது. புறஉலகில் அல்ல.

**ஸ்ரீ.சி.கீர்த்தனா**
**இராமநாதன் நுண்கலைப்பீடம்**
**யாழ் பல்கலைக்கழகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட மாகாணக் கல்வி எதிர்நோக்கும் பிரச்சினைகள் வெளிப்படுத்தப்படாத காரணங்கள்

கடந்த சில வருடங்களாக தேசிய மட்டத்தில் வட மாகாணக் கல்வி நிலை இறுதியிடத்தில் இருப்பதைப் பரீட்சைத் திணைக்களப் பெறுபேறுகள் காட்டி நிற்கின்றன. இறுக்கமான பொருளாதார தடையினை இலங்கை அரசு விதித்திருந்த காலகட்டத்தில்கூட தேசிய பரீட்சைப் பெறுபேறுகளில் உயர்வினைக் காட்டி நின்ற வடமாகாணம் இன்று பெறுபேறுகளில் தொடர்சியாகப் பின்னடைவைக் காட்டி வருவது என்பது கையறு நிலையில் இருக்கும் தமிழினத்திற்கு மிகவும் வேதனை தரும் ஒரு விடயமே. இந்த வலிகளில் இருந்து மீள்வதற்குக் கல்வி புலம் சார்ந்த அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள் மட்டுமன்றிப் பெற்றோர்கள் கூட வழி என்ன? என்று சிந்திக்கத் தலைப்பட்டுவிட்ட காலமிது.

தேசியப் பரீட்சைகளில் ஏற்படும் வீழ்ச்சிக்குப் பொதுவாகப் பாடசாலைகளையும், அதிபர், ஆசிரியர்களையும் குற்றம் சுமத்துவதோடு கல்வி அதிகாரிகள் நின்றுவிட, ஆசிரியர்களோ மாணவர்களது நடத்தைகள் மீதும் குடும்பச்சூழல் மீதும் குற்றம் சுமத்தி விட்டு, பாதிப்பு நிலைக்கும் தமக்கும் சம்பந்தம் இல்லை என்ற ஒரு மனோ பாவத்தோடு தப்பிக் கொள்ளும் நிலையே எமது வழமையாகவுள்ளது. பத்திரிகைகளில் வெளிவரும் விமர்சனக் கட்டுரைகள் கூட, பெரும்பாலும் வகுப்பறைகளை மையப்படுத்திய தீர்வுகளை முன் வைப்பதன் ஊடாக இதுவரை காலமும் அதிபர், ஆசிரியர்களது செயற்பாடுகளில் காணப்படும் பலவீனங்களே இத்தகைய வீழ்ச்சிக்கு காரணம் எனக் கூறி, பிரச்சினையின் உண்மை நிலைமைகளைப் பற்றி எவரையும் சிந்திக்கவிடாமல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. வடமாகாணக் கல்விப் பெறுபேற்று வீழ்ச்சிக்கு இவற்றை விடவும் பலமான காரணிகள் உண்டு என்பது பற்றிய கருத்துக்களை முன்வைத்து, அது பற்றிய சிந்தனைகளைத் தூண்டி, விமர்சனங்களுக்கு திறவு கோலாகி நிற்பதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

## வடக்கு மாகாணமும் வலயக்கல்வி அலுவலகங்களும்

இலங்கையில் இன்று நடைமுறையில் இருக்கும் வலயக்கல்வி நிர்வாக முறையானது 1998ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியிலேயே நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது. அன்றைய கால கட்டத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் ஒரே மாகாண சபையாக இயங்கிய நிலையில் .ங்கு இருபது வலயங்களாக பிரிக்கப்பட்டு, இருபது வலயக்கல்வி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலுவலகங்கள் இயங்குவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தது. இருந்தும் அன்றைய வடக்கு, கிழக்கு மாகாண சபையின் கல்வி பண்பாட்டு அலுவலகங்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் அவர்கள் எடுத்த பெருமுயற்ச்சியின் பயனாக, தீவக வலயம், துணுக்காய் வலயம், மடுவலயம், தெகியத்தகண்டிய வலயம் என்பன புதிய வலயங்களாக உருவாக்கப்பட அனுமதி பெறப்பட்டு, வடக்குக் கிழக்கு மாகாணத்தின் கல்வி வலயங்களை இருபத்து நான்காக அதிகரிக்க முடிந்தது.

இணைந்திருந்த வடக்கு கிழக்கு மாகாணங்கள் 31.12.2006 உடன் தனித்தனி மாகாணங்களாக பிரிக்கப்படட்ட போது, வடக்கில் 12 வலயங்களும் கிழக்கில் 12 வலயங்களுமாகப் பிரிப்பு அமைந்திருந்தது. இருந்தும் பிரிந்து சென்ற கிழக்கு மாகாணசபையின் உரிய அதிகாரிகள் அமைச்சர்கள் எடுத்த முயற்சிகளின் விளைவாக, அங்கிருந்த பன்னிரு வலயங்களும் பதினேழு வலயங்களாக அதிகரிக்கப்பட்டன. கிண்ணியா, மட்டக்களப்பு மத்தி, மட்டக்களப்பு மேற்கு, பொத்துவில், ஹோமரங்கடவெல என்பன புதிய வலயங்களாக தோற்றம் பெற்றன பாடசாலை மேற்பார்வைகளும், வழிகாட்டல்களும், வளப்பங்கீடுகளும் நியாயமான வகையில் பரவலாக்கப்படும் வாய்ப்புக் கிடைத்தது. அத்தோடு அங்கிருக்கும் வலயங்களில் மட்டக்களப்பு மத்தி, அக்கறைப்பற்று, கல்முனை ஆகிய வலயங்கள் தேசிய ரீதியில் க.பொ.த (சாதாரண) பரீட்சையில் முதல் இருபத்தைந்து நிலைமைகளுக்குள் வருவதை அவதானிக்கலாம். ஆயினும் வடமாகாணத்தில் பன்னிரு வலயங்கள் ஏறக்குறைய இருபது வருடங்களாக பன்னிரு வலயங்களாகவே காணப்படுகின்றன. கிளிநொச்சி மாவட்டத்தில், மாவட்டத்திற்கே ஒரு வலயம் அமையப் பெற்றிருப்பது பற்றி அக்கறை கொள்ளவோ, அது பற்றி நேரான தீர்மானம் எடுப்பதற்கோ பொறுப்பு வாய்ந்த எவரும் எங்களிடம் இல்லையோ என எண்ணக் கவலையேற்றப்படுகிறது. இதே போல வலிகாமத்திலும், தென்மராட்சியிலும் புதிதாக வலயங்கள் உருவாக்கப்பட வேண்டிய தேவை பற்றி மாணவர்கள், பெற்றோர்கள், சமூக ஆர்வலர்கள் மட்டுமே கவலைப்படுகின்ற ஒரு நிலையே வெளிப்படையாகத் தெரிகிறது. புதிய வலயப் பிரிப்புக்களும் பொருத்தமான ஆளணி நியமங்களும் நிச்சயமாகப் பாடசாலைகளது செயற்பாடுகளை மேம்படுத்தும் என்பதில் ஐயமில்லை. ஆனால் கிழக்கு மாகாணத்தில் வலயப்பிரிவு முஸ்லீம் பாடசாலைகள் ,தமிழ்ப் பாடசாலைகள் எனப் பிரிக்கப்பட்டமை பல்லின, பல்வகைமையை பாதிப்பிக்கும் என்பதனையும் கவனத்தில் கொள்ள வேண்டும். தேசிய ரீதியாக இவ்வாறான பிரச்சினைகளை எதிர் கொள்ளும் கல்வி அமைச்சு. கோட்டங்களை இல்லாமல் செய்து வலயங்களின் எண்ணிக்கையைத் தற்போது இருப்பதை விட இரண்டு, மூன்று மடங்காக அதிகரிக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோசித்திருப்பதாக செய்திகள் வருகின்றன.

கல்வி நிர்வாகத்தில் காணப்பட்ட மூன்று விதமான கட்டுப்பாட்டுப் பகுதிகள்

வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை 2009க்கு முன்னர் கல்வி நிர்வாகமானது மூன்று விதமான கட்டுப்பாட்டுப் பகுதிகளை உள்ளடக்கியதாக இருந்தது.

1. முழுமையான இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதி
2. பகுதியளவிலான இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதி
3. முழுமையான விடுதலைப்புலிகளது கட்டுப்பாட்டுப்பகுதி

இவ்வாறு மூன்று விதமான கட்டுப்பாட்டுப் பகுதிகள் காணப்பட்டாலும் அந்தக் காலகட்டத்தில் அதிபர், ஆசிரியர் நியமனத்திலும் இடமாற்றத்திலும் நியதிகள் இறுக்கமாகவும் முழுமையாகவும் கடைப்பிடிக்கப்பட்டன. தூர நோக்குடன் நியமனங்கள் செய்யப்பட்டன. இடமாற்றங்கள் வழங்கப்பட்டன. எந்தவிதமான செல்வாக்குகளுக்கும் இவற்றில் இடமிருக்கவில்லை. அப்போதை கல்விச் செயலாளர் ஒவ்வொரு வலயங்களுக்கும் சென்று அதிபர் கூட்டங்களில் பங்கு கொண்டார் இதனால்தான் போலும் அன்றைய காலகட்டத்தில் எமது கல்வி நிலை இந்த மாதிரியான மோசமான வீழ்ச்சியைச் சந்திக்வில்லை.

எனினும் 2009ஆம் ஆண்டின் பின்னர் வடக்கு மாகாண சபையினால் வழங்கப்பட்ட ஆசிரிய நியமனங்களில் அதிகமானவை வன்னிப் பிரதேசத்தை மையப்படுத்தியே வழங்கப்பட்டன. அதில் கூட செல்வாக்குடையவர்கள் நகரப்புறப் பாடசாலைகளில் நியமிக்கப்பட்டனர். இது காரணமாக நியமனம் பெற்ற ஆசிரியர்களிடையே வெறுப்பு, விரக்தி, ஆசிரியவாண்மைத்துவ செயற்பாடுகளில் வீழ்ச்சி என்பன ஏற்பட்டதோடு, நியமனம் பெற்ற பலர் புதிய பதவிகளுக்கு விண்ணப்பித்து அவற்றைப் பெற்றுக் கொண்டு ஆசிரியத் தொழிலைக் கைவிட்டு விட்டுச் சென்ற வரலாறுகள் அதிகள் பதியப்பட்டுள்ளன.

அவர்கள் எதிர் கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் காரணமாக தொழில் நிலையங்களில் இருந்து அதிகளவான சலுகைளை எதிர்பார்க்கிறார்கள். அதிக அளவான விடுமுறைகளைப் பெற்றுக்கொள்ள முயல்கின்றனர். இவை மாணவர்களது கற்றலைப் பாதிப்பதாகவே அமைந்து விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு நாம் கவனமாக ஆராய வேண்டிய ஒரு விடயம் என்னவெனில் 2005ஆம் ஆண்டின் பின் வழங்கப்பட ஆசிரிய நியமனங்களில் மிகப் பெரும் பங்கு கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட வலயங்களுக்கு வழங்கப்பட்டு ஆசிரியர் நிரம்பல் அதிகரிக்கப்பட்டிருந்த நிலையில், அந்த மாவட்டங்களது கல்வி நிலையும் பெறுபேறுகளின் வீழ்ச்சியினைக் காட்டி நிற்கின்றமையையும் நாம் கவனிக்க வேண்டியுள்ளது.

இதுவரை காலமும் வடமாகாணத்தில் கைக்கொள்ளப்பட்டு வந்த ஆசிரிய நியமனம் மற்றும் ஆசிரிய இடமாற்றம் தொடர்பான கொள்கைகள், உண்மையில் வடமகாணக் கல்விப் பெறுபேற்று வீழ்ச்சிக்கே காரணமாக அமையலாம். எனவே இது பற்றித் திறந்தமனதுடன் ஆராய்ந்து பார்க்க வேண்டியது கொள்கை வடிவமைப்பாளர்களின் கடமையாகும்.

**தொண்டர் ஆசிரியர் நியமனம்**

வடக்கு மாகாணத்தில் ஓரிரு தடவைகள் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டமை யாவரும் அறிந்ததே. இதன் தொடர்ச்சியாக 2016 ஆம் வருட ஆரம்பத்திலும் ஒரு தொகைக் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. இங்கு குறிப்பிட்ட வேண்டிய ஒரு விடயம் என்ன வெனில் கடந்த காலங்களில் பாடசாலைகளில் ஏற்கனவே கடமை புரியாதவர்களுக்கும் இந்த நியமனம் அரசியல் கட்சிகளது அழுத்தங்களுக்கு உட்பட்டு வழங்கப்பட்டிருக்கின்றமை ஆகும். தமது அரசியல் நலன்களைப் பாதுகாத்துக் கொள்ள அரசியல்வாதிகள் காலத்திற்குக் காலம் இவ்வாறான சந்தர்பங்களில் தமது பலத்தினைப் பிரயோகித்து. தம் ஆதரவாளர்களுக்கு நியமனம் கிடைக்க வகை செய்கின்றனர். இதனால் அர்ப்பணிப்புணர்வு, ஆக்க சிந்தனை என்பன குறைந்த கல்விப்புலத்தில் புலமை குறைந்தவர்களுக்கும் ஆசிரியர் நியமனம் கிடைக்க வழியேற்பட்டுவிட்டது. இதனுடன் தொடர்புபட்ட இன்னுமொரு விடயம் யாதெனில் இவ்வகையான நியமனங்கள் கூட வன்னிப் பிரதேசத்திற்கே அதிகமாக வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு நியமனம் பெற்றவர்களில் பலரும் ஆசிரிய பயிற்சியினை நிறைவு செய்ததன் பின்னர். பல்வேறு தேவைகள் கருதி தமது வசிப்பிடத்தை யாழ் நகரைமையப்படுத்தி அமைத்துக் கொள்ள விரும்புவதோடு, காலப்போக்கில் இடமாற்றம் பெற்று யாழ்நகர் நோக்கி நகர்ந்துள்ளமையும் ஒரு பிரச்சினையாகவே கருதப்படுகின்றது.

வடக்கு மாகாணக்கல்வி அமைச்சு, மாகாணக்கல்வித் திணைக்களம் உருவாக்கப்பட்ட நேரத்தில் இலங்கைக் கல்வி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாக சேவையைச் சேர்ந்த இளம் உத்தியோகத்தர்கள் சிரேஷ்ட உத்தியோகத்தர்களின் வழிகாட்டலில் நல்ல பயிற்சியை நிபுணத்துவத்தைப் பெற்றார்கள் என்பது மறுக்க முடியாதது. இவ்வாறானவர்கள் சிலர் வலயக் கல்விப் பணிப்பாளர்களாக கடமையைப் பொறுப்பேற்று அபிவிருத்தியை நோக்கி செயற்பட்டமை மனங் கொள்ளத்தக்கது ஏனையோரும் குடா நாட்டிற்கு அப்பாலான வலயங்களில் பணியாற்றுவதன் மூலமே பெறுபேற்று வீழ்ச்சியை தடுத்து நிறுத்த உதவும்.

**கல்வி அபிவிருத்தி**


அன்றும், இன்றும் ஆசிரியர்கள் வலயக்கல்வி அலுவலகங்களினாலும், மாகாணக் கல்வித் திணைக்களத்தினாலும் செயலமர்வுகள், கருத்தரங்குகள், தரவட்டங்கள் பயிற்சி வகுப்புக்கள் என அழைக்கப்படுகின்றனர். இவை யாவும் கற்றல் கற்பித்தல் தொடர்பான அறிவு, அனுபவங்களைப் பகிர்வதற்கான களங்களேயாகும். ஆனால் இவற்றைப் பாடசாலை நாள்களில் வைப்பதால் மாணவர்கள் பாதிப்படைவர். ஞாயிற்றுக் கிழமைகளில் வைப்பதால் ஆசிரியர்களின் நலன்கள் பாதிப்படையும் இவையும் கல்வி வீழ்ச்சிக்கான காரணங்களாகும். பாடசாலைகளில் அளவுக்கு மிஞ்சிய விழாக்களை நடாத்துவதால் கற்றல் கற்பித்தல் அரைவாசியையோ அல்லது முழுநேரத்தையுமோ வீணடிக்கலாம். எனவே இதுவும் கல்வி வீழ்ச்சிக்கான காரணமாகும்.

பாடசாலைகளில் மேற்கொள்ளப்படும் உள்வாரி மதிப்பீடு வெளிவாரி மதிப்பீடு என்பன மாணவர் அடைவை உயர்த்துவதற்கான நல்ல கருவிகள். ஆனால் பாடசாலைகளில் உள்வாரி மதிப்பீட்டைச் சரியாக செய்யக் கூடியவர்களாக ஒரு சில அதிபர்களே உள்ளார்கள் ஏனையோர் அது பற்றிய அறிவு தேர்ச்சியை வளர்ப்பதில் பின்நிற்கின்றனர். வலயங்களில் உள்ள வெளிவாரி மதிப்பீட்டுக் குழுவினால் பாடசாலைகள் தினந்தோறும் மதிப்பீடு செய்யப்பட்டு அறிக்கைகள் வழங்கப்படுகின்றன. ஆனால் அவை உடனுக்குடன் வலய நிர்வாக, அபிவிருத்திக் கூட்டங்களில் ஆராயப்படுவதோ, அதன்படி பாடசாலையின் தேவைகள், குறைபாடுகள், பிரச்சினைகள் தீர்க்கப்படுவதோ இல்லை. தொடர் நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை. ஒரு சில வலயங்கள் இதற்கு விதிவிலக்காய் இருக்கலாம். இதுவும் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் கல்வி வீழ்ச்சிக்குக் காரணமாகலாம். இதனை கிழக்கு மகாகாணக்கல்வி நிர்வாக சேவையாளர் சங்கமும் கூறுவது பரிசீலிக்கக் கூடியது. மாகாண சபை அமைக்கப்பட்ட பின்னர் கல்வி அமைச்சர், கல்விச் செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர், கோட்டக் கல்விப் பணிப்பாளர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றவாறான அதிகாரப் படிமுறை பாடசாலைகளுக்கு அனுசரணை வழங்குவதற்காக வகுக்கப்பட்ட போதும் மாறாக அவற்றின் சுயாதீன செயற்பாடு (Autonomy) பாதிக்கப்படுவதாகவே சொல்லப்படுகின்றது. அரசியல் வாதிகளின் செல்வாக்குகளும் ஊடுருவிக் காணப்படுகின்றன. தென்னிலங்கையில் மாகாண சபைகள் ஜனநாயக பிரதிநிதித்துவ முறையில் நீண்டகால அனுபவத்தைக் கொண்டன. அங்கு அதிகரப் படிமுறை ஓரளவு நெகிழ்ச்சியுள்ளதாகக் காணப்படுகின்றது. இங்கு இறுக்கத் தன்மை உள்ளது. எட்வேட் எடமிங்கின் கோட்பாட்டின் படி

என்றவாறு தலைகீழாக மாற்றப்படவேண்டும். மாணவர் களை மையமாகக் கொண்டு செயற்படும் போதே தரமான கல்வியையும், கல்விப் பெறுபேற்றில் உயர்ச்சியையும் எதிர்பார்க்க முடியும். அபிவிருத்தியடைந்த நாடுகளில் இத்தகைய முகாமைத்துவக் கொள்கைகளே பின்பற்றப்படுகின்றன.




எமது நாட்டிலே புதிய தலைமைத்துவ வெற்றிடம், ஜனநாயக தேக்க நிலைமை காணப்படுகின்றது. அதிலும் வடக்கு, கிழக்கில் இந்நிலைமை மோசமாகவேயுள்ளது. வடக்கு, கிழக்கில் இளைஞர் இயக்கங்களும் அறிவார்ந்த தலைமைத்துவம், புதிய, புரட்சிகரமான ஜனநாயகம் பற்றிய தேடல் இன்மையே அவர்களின் தோல்விக்குக் காரணமாயிற்று எனலாம். மீண்டும் பழைய தலைமைத்துவம், பழைமைவாத அரசியலால் ஜனநாயகம் தேக்கமுற்று, சுறுசுறுப்பு ஆற்றியிருக்கின்றது.அவர்கள் காலத்துக்குக் காலம் வாக்குகளைப் பெற்று தமது சிறப்புரிமைகளை அனுபவிப்பவர்களாகவே இருப்பார்கள். மாகாணங்களின் தற்போதுள்ள அதிகாரகங்களையோ பெறக்கூடிய அதிகாரங்களையோ பயன்படுத்தக்கூடிய ஜனநாயக நீட்சி, ஜனநாயக ஓட்டம் எம் தலைவர்களுக்கு மிகப்போதாமலே உள்ளது. எம் சமுதாயம் குளத்து நீரைப் போல தேங்கியேயுள்ளது. இந்நிலையில் வடக்கு மாகாணத்தின் கல்வி, பொருளாதாரம் மற்றும் ஏனைய துறைகளில் எவ்வாறு உயர்வை எதிர்பார்க்க முடியும், இவற்றை மக்களும், அறிவாளிகளும் சிந்திக்க வேண்டும்.


**திரு. பி. முத்துலிங்கம்**

ஒய்வு நிலைப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்

கந்தர்மடம், யாழ்ப்பாணம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படிப்பும் முடிப்பும்

எடுத்த உடனேயே யாரும் சிகரெட் புகையை வளையம் வளையமாக விடுவதில்லை, சிலநாட்கள் புரைக்கேறிய பின்னர்தான் சாத்தியம். அதேபோலத்தான் தண்ணீர் உதட்டில் படாதவறு தொண்டைக்குளிக்குள் விடுவது போல சாராயத்தை கொண்டைக்குளிக்குள் முதன்முறையிலேயே ஊற்றி விடமுடியாதப்பா. அதி கவனமும் கண்காணிப்பும் சீர் தூக்கித் திறனாய்ந்தும் நான் எடுத்த முடிவை எடுத்த எடுப்பிலே தட்டிவிட முயலாதீர்கள் அப்பா.

இல்லையம்மா, நீயோ படித்திருக்கிறாய் பட்டமும் பெற்றிருக்கிறாய். ஒரு அரச தொழிலொன்று தேடிக்கொள் என்றாலும் விரும்பிறாயில்லை. வசதிவாய்ப்புகளுடன் இருக்கின்ற மயூரனைக் கட்டிக்கொள் என்றாலும் சம்மதிக்கிறாயில்லை.

அவர்கள் தேடிவைத்திருக்கிற வசதி வாய்ப்புக்கள், பாடுபட்டுத் தேடியவை அல்ல. பல பேரை வருத்திச் சம்பாதித்தவை. அறம் வெல்லும்போது இவையும் அழிந்து போய்விடும் அப்பா

அறாவட்டியிலும் அடுத்தவன் சொத்தைத் தட்டியும்சேர்த்தவை தான் ஆனால் இன்று எல்லோரும் அப்படித்தானே வாழ்கிறார்கள்.

எல்லோரையும் போல என் என்னால் வாழ முடியாதப்பா அம்மாவை நீங்கள் இரண்டாம் தாரமாகக் கட்டிக் கொண்டதும், அவர் விழவிருந்த நரகக்குளியிலிருந்து நீங்கள் அவரை மீட்டு வந்ததையும்கூட கேவலமாகப் பேசியவர்கள்தானே அப்பா.

இல்லைப்பிள்ளை, தங்கைச்சியின் மகன்தானே அறவாழி அவுணர்களின் விசாரணையின் பின் இப்பவெல்லாம் மிக ஒழுங்காக இருக்கிறான்தானே. ஒருவகையில் பார்த்தால் இவன் உனது முறைப்பையன் என்பதாலும் ஏனையோரிடமிருந்து பாதுகாக்கப் பட்டுமிருப்பாய்.

பழைய கதைகளை விவாதிக்க நான் முனையவில்லை இவரை ஆரம்பமுதல் எனக்குப் பிடிப்பதில்லை. படிக்கப்போன என்னை இடைஞ்சல்படுத்துகிறார். என்றுதானே அறவாழி அவுணர்கள் விசாரித்தனர். அவர்கள் விசாரிக்காது விட்டிருந்தால் என்நிலைமை என்னாகயிருக்கும் என எண்ணிப்பார்த்துப் பயந்து படிக்கப்போகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயந்து நிற்கப் பார்த்த நாட்களை எண்ணிப்பாருங்கள் அப்பா எவ்வளவு கொடுமையானவை.

அதற்காக உனது பண்ணையில் வேலை செய்பவனைத் திருமணம் செய்ய விரும்புகிறாயே அதுதான் எனக்கு விளங்குதில்லை. உடன்பாடுமில்லை.

பலநாட்களாக அவதானித்துத் தேர்ந்து மேலும் சில நாட்கள் அவரது நடவடிக்கைகள் பழக்கவழக்கங்களை உன்னிப்பாகக் கவனித்த பின்னர்தான் அப்பா அவர்தான் எனக்குப் பொருத்தமானவர் என்று தோன்றுகிறது. எனது பண்ணையைப் பொறுப்புடன் பாதுகாக்க இவரை விட ஒருவரைத்தேர்ந்தெடுக்க முடியாது.

சரி, நீயோ விவசாயப் பட்டதாரி பிறகும் என்னென்னவோ மேல்படிப்பும் படித்திருக்கிறாய் இவரோ க.பொ.த. வகுப்புடன் படிப்பை நிறுத்தி விட்டு வேலைக்கு வந்தவர்தானே உனது கல்வித் தகைமைகளுக்கேற்றாப் போல் தெரிவு செய்திருக்கலாமே.

அவர் உயர்தரத்தில் விஞ்ஞானபிரிவில் படித்தவர். அப்பாவை விசாரிக்கவெனக் கூட்டிச் சென்றவர்கள் கொன்றுபோட்டு, வீதிக்கரையில் எறிந்து விட்டுப் போகாவிட்டால், உயர்கல்வி கற்று அவரும் ஒரு விஞ்ஞான பட்டதாரியாக வந்திருக்கக்கூடிய அறிவும், திறமையும், அவதானமும் மிக்கவர் அப்பா, சின்னவயதிலிருந்தே கடினமாக உழைத்த படியால் திடகாத்திரமான உடற்கட்டும், ஆரோக்கியமாகவும் இருக்கிறார். ஒரு நாளும் வேலைக்கு நேரம் பிந்திவரவும் இல்லை, பணிந்து நின்றதுமில்லை. ஒழுக்க சீலராகவும் இருக்கிறார். எல்லாவற்றிற்கும் மேலாகத் தாயை நேசிப்பவர். நீங்கள் தானே, தாயை நேசத்துடன் பராமரிப்பவன், தாரத்தையும் அதே நேசத்துடன் பராமரிப்பான் என்பீர்களே எழிலனையும் நான் அவ்வாறுதான் பார்க்கிறேன் அப்பா.

எதற்கும் அம்மாவுடனும் ஒரு தடவை பேசிப்பார் அம்மா.

அம்மா மட்டுமல்ல அப்பா, அண்ணன்மார்களும் எழிலனை நன்கு அறிந்து வைத்திருப்பதுடன் தோழமையுடன்தான் பழகுகின்றனர்.

நீ அவசரப்பட்டு முடிவெடுப்பவள் அல்ல. உணர்ச்சிகளுக்கு அடிமைப்பட்டு முடிவெடுப்பவளும் அல்ல. என்ன இருந்தாலும் மயூரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது தங்கையின் மகன். எனக்கெல்லாம் சரியாய் நடந்துதென்றால் மகிழ்ச்சிதான்.

நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்கவேண்டாம். எல்லாம் நன்றாகவே முடியும். பாடசாலைக்குச் செல்லும் நாட்களில் மயூரன் தந்த தொல்லைகளால் படிப்பே வேண்டாமென்றிருந்த கலையரசி, அறவாழி அவுணர்கள் சமூகத்தை ஓரளவு ஒழுங்கு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததும் படித்து பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகி விவசாய விஞ்ஞானப் பாடநெறியைத் தேர்ந்தெடுத்துச் சிறப்புச் சித்தி பெற்று போதனாசிரியராக ஒரு வருடகாலம் சேவையாற்றத் தெரிவு செய்யப்பட்டுச் சேவையாற்றும் காலத்தில் நிர்வாகத்தினருக்கும் அவளுக்கும் ஏற்பட்ட முரண்பாடுகளால் வேலையையே வேண்டாமென்று வந்து தங்களுக்கென இருந்த காணிக்கருகிலிருந்த காணிகளையும் வாங்கிப் பெரு விவசாயப் பண்ணை ஒன்றை நிறுவி நிர்வகித்துக் கொண்டிருந்த காலங்களின் ஆரம்பத்தில் உதவி ஆட்களைச் சேர்த்துக் கொண்ட போது வந்து இணைந்தவன்தான் எழிலன். திடகாத்திரமான உடலமைப்பும் எதனையும் நுண்மையாக நோக்கும் நுண்அறிவும் கொண்டிருந்தவன். சுறுசுறுப்பானவன். ஒழுக்கம் நிறைந்தவன். கலையரசி மனதில் ஒருவித ஈர்ப்பை உண்டாக்கியிருந்தான்.

பண்ணையின் எல்லைகளில் 200 தேக்கங்கன்றுகள் நாட்டி வளர்க்கத் திட்டமிட்டு 3 அடி சதுரகுளிகள் 3 அடி ஆளத்துக்கு வெட்டி, தேங்காய்மட்டைகளை தும்புப்பக்கம் மேலே இருக்கக்கூடியவாறு அடுக்கி, ஏற்றிவந்து வைத்திருந்த பாண்போறணைச் சாம்பலையும் இட்டு மேல் மண்ணால் நிரப்பி வளரிடம் தயார்ப்படுத்தும் வேலைகளில் கலையரசியுடன் கூட எழிலனும் மேலும் ஐந்து தொழிலாளிகளும் அதிதீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையில் "குளிவெட்டும் வேலைகளை நாங்கள் செய்கிறோம்" நீங்கள் மெதுமெதுவாக தேங்காய் மட்டைகளைப் பரப்பிச் சாம்பலையும் போட்டு வையுங்கள் குளிகள் வெட்டி முடிய நாங்கள் நிரப்புகிறோம் என்று எழிலன் கூறினான்.

ஓம், அதுதான் சரியெனக் கலையரசி வெட்டிய குளிகளுள் தேங்காய் மட்டையைப் பரவிக்கொண்டிருக்கும்போது குளிகள் வெட்டடப்பட்டிருந்த சீரைக்கண்டு, எந்த வேலைகள் செய்தாலும் அதிலொரு நேர்த்தியிருக்கும் என எண்ணியவள், திரும்பிப் பார்த்தாள். எழிலனுடைய முறுக்கேறிய உடலும், அதில் முத்து முத்தாகத் திரளும் வெயர்வைத் துளிகளையும் கண்டு மயங்கினாள். எப்படியாவது இன்று நேரிடையாகவேனும் கேட்டுவிடவேண்டும் என்று எண்ணிக் கொண்டிருக்கையில், அவனே அருகில் வந்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா 10 அடி இடைவெளிவிட்டு நாங்கள் நாட்டிவரும் தேக்கம் கன்றுகளிடையே வரிசையாகப் பனம் விதைகளையும் புதைத்துவிட்டால் நல்லதுதானே.

நல்லயோசினைதான், எனக்கு ஏன் தோன்றாமல் போனது? வடலிகள் வளர 2-3 வருடங்கள் எடுக்கும் அத்துடன் வடலி ஓலைகளைப் பண்ணை மாடுகளுக்கு உணவாகவும் கொடுக்கலாம்.

இவை உயர்ந்து நேராக வளர்வதால் ஏனைய பயிர்களுக்குத், தேவையான சூரிய ஒளியையும் தடுக்காது, தென்னம்பிள்ளை நாட்டினால் பயன் அதிகம்தான். பராமரிப்புத் தேவை. இவை விதைகளை புதைத்தால் தானே வளர்பவை.

அத்துடன் தென்லை ஓலைகள் பரந்து நிழல்போடுவதால் ஏனையபயிர்கள் வளர இடைஞ்சலாக இருக்கும் என்று கூறியவாறே அருகிலிருந்த கல்லொன்றில் அமர்ந்து கொண்டான்.

குளிகள் வெட்டும்பணி, தேங்காய் மட்டை புதைப்பது போன்ற பணிகள் விரைவாகவே நடந்துகொண்டிருந்தன. தேனீரும் காலை உணவும் வரவே அவற்றை எடுத்துவிட்டு சற்று ஓய்ந்திருந்துவிட்டுப் பணிகள் ஆரம்பிக்க அனைவரும் சென்றுவிடவே எழிலனைச் சற்று நிற்பாட்டி வைத்திருக்கிறாள் கலையரசி.

எழில், எனக்குச் சுற்றிவளைத்துப் பேசத்தெரியாது. அது நேரவிரயம் எனக்கருதுபவள். எதையும் நேரடியாகப் பேசுவேன்.

எனக்குமட்டுமல்ல பண்ணையிலுள்ள அனைவருக்கும் உங்கள் நடைமுறை பிடித்திருப்பதற்கும் மேலாக நீங்கள் திட்டமிட்டு எடுக்கிற முடிவுகளும் நேரடிப் பேச்சும் நட்ட லாபம் கருதாமல் கற்று வைத்திருப்பவற்றை நடைமுறைப்படுத்திப் பார்க்கும் பாங்கும் நிறையவே பிடிக்கும்.

அதல்ல எழில். நான் நன்கு திட்டமிட்டுச் செய்பவள் என்பதை அறிந்து வைத்திருப்பது நல்லது. ஆயினும் நீண்டகாலத்திட்டங்களை எடுத்தேன் கவிழ்த்தேன் என்று எடுக்க முடியாது. இழப்புக்கள் தாங்க முடியாமல் போகும்.

என்னம்மா, என்ன சிந்தனை உங்களுக்கு ஏதென்றாலும் சொல்லுங்கள் என்னால் முடியுமானவரை முயன்று செய்வேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில் அம்மா என்று என்னை அழைப்பதை நிறுத்தவேண்டும் என்னை வயதாகிவிட்டவளாக நீங்கள் கருதுவதாக உணர்கிறேன்.

இல்லை அம்மா வயதில் முதிர்ந்த குறைந்த, சின்னப்பிள்ளை களையும் அம்மா என விழித்தும், ஐயா என்று எல்லாப் பருவத்து ஆண்களையும் அழைப்பது எமது மரபல்லவா? அதற்காக நீங்கள் ஏன் வயதாகிவிட்டதென எண்ண வேண்டும்?

படிக்க, பல்கலைக்கழக அனுமதிக்காகக் காத்திருக்க, பின்னர் அங்கே பயிற்சிக்காகவும், பின்னர் வேலைவாய்ப்புக்களுக்காகவும் காத்திருக்க, பெண்களின் வாழ்க்கையிலே வயசும் பருவமும் காத்திருப்பதில்லை. முடிவெடுக்கும் ஆற்றல், நிர்வகிக்கும் திறன் வளர வளர அனுபவ முதிர்ச்சியடைந்து கொள்ளும் வேளை வயசும் வாலிபமும் தொலைந்து போவதுதானே யதார்த்தம்.

நீங்கள் படித்த படிப்புக்கு இந்நேரம் ஒரு அதிகாரியாக அரசேவையில் இருந்திருக்கலாம் கார், வசதியான வீடு, எடுபிடிகள், நல்லஇல்லற வாழ்க்கை என்றிருந்திருக்கலாம்.

இப்பவும் நான் ஒரு அதிகாரிதான். அதிகாரிமட்டுமல்ல இந்தப்பண்ணையின் சொந்தக்காரி. படிப்பது அறிவுதேடவே தவிரச் சோம்பேறித்தனமாக இருந்து அதிகாரம் செய்யவல்ல. தவறு நேர்ந்தால் அடுத்தவரைக் காட்டிக்கொடுத்து அறிக்கை எழுதவல்ல. முகம்கொடுக்க. முகம்கொடுத்து வெல்ல. அங்கேயென்றால் சுயசிந்தனைகளைச் செயல்படுத்திப் பார்க்க முடியாது இங்கே முடிகிறதல்லவா.

உங்களைப் போன்ற சிந்தனை உள்ளவர்களாகப், படித்தவர்கள் வளர்ந்தால் இந்த நாடு வளப்பட்டுவிடும். இங்கே படிப்பென்பது காசு தேடுவதற்காக என்றாகிவிட்டது. அரசஉத்தியோகம், அல்லது அந்நிய நாட்டுப் பயணம். அரச உத்தியோகம் கேட்டு உண்ணாவிரதப் போராட்டம் அல்லது முகவர்களை நம்பி காணிபூமியை விற்றுக்காசை கட்டுவதென்றாகிவிட்டது. இரண்டிலும் ஏமாற்றம்தான்.

அப்போதும் அரசதொழில் கிடைத்தால் கூட, தான் பயின்ற துறைசார் நெறிக்கான வேலையிருக்காது. எந்த நாடு சென்றாலும் எதிர்பார்த்த வேலையும் கிடைக்காது. இங்கு நான் எவ்வளவு சுதந்திரமாக எனது எண்ணங்களைச் செயல்ப்படுத்திக் கொண்டிருக்கிறேன். அதிலும் கூட உங்களைப் போன்ற உண்மையான உழைப்பாளிகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்திருக்கிறார்கள். எவ்வளவு திருப்பதி கிடைக்கிறது. உத்வேகம் பிறக்கிறது.

அப்படியெல்லாம் சொல்ல வேண்டாம். நீங்கள் தருகின்ற ஊதியத்துக்கு நான் உழைப்பைத் தருகிறேன். இங்கில்லாது எங்கு வேலைக்குப் போனாலும் நான் இதையே செய்வேன். நீங்களும் கூட எங்களுடனிணைந்து வெயில் மழை பாராமல் வேலை செய்து கொண்டு வருவது எங்களுக்கெல்லாம் உற்சாகம் தருகிறது. என்னுடன் நீங்கள் தேர்ந்தெடுத்து இணைத்துவிட்ட தொழிலாளிகளும் மிகவும் உற்சாகமானவர்கள். இங்கு நீங்கள் கொடுக்கின்ற சம்பளம் சலுகைகள் வசதிகள் வேறு இடங்களில் கிடைப்பதில்லை.

ஆக, எனது தேர்வுகளும் முடிவுகளும் பிழையாகிப்போய் விடாதென்று கருதுகிறீர்கள் அப்படித்தானே.

அதிலென்ன சந்தேகம் பரந்தபண்ணை பட்டித்தொழுவம் பருவத்துக்கான பயிர் வளர்ப்பு நீர் சேகரிப்பு எல்லாவற்றிற்கும் மேலாக நிதிநிறுவனங்கள் உதவ முன்வந்த போதிலும் ஏற்றுக் கொள்ளாத முன்மாதிரி, முன்னெச்சரிக்கை. யாருக்கு வரும்?

அதிகம் பாராட்ட வேண்டாம். எல்லோருக்கும் வஞ்சனையில்லாதுதான் பயிற்சி நெறியின் போது இவைகளைக் கற்றுத்தருகிறார்கள். படிப்பது அரசதொழிலொன்றிற்காக என்று விதி அமைத்துக்கொண்டு படிப்பவர்கள் அந்த வட்டத்துக்குள்தான் சுழலுகிறார்கள் நானும் என்போல் தங்களில் நம்பிக்கையுள்ளவர்களும் சுதந்திரப்பறவைகள்தான்.

என்றும் அப்படி எப்போதும் இருந்துவிட முடியாதம்மா வாழக்கை வட்டத்துள் அடையவேண்டிய அனைத்தும் அடைந்து அனுபவித்தே ஆகவேண்டும்.

சரியாகவே சிந்திக்கிறீர்கள். நானும் அந்தயோசனையை உங்களிடம் கூறவே உங்களைத் தாமதிக்கவைத்தேன். இந்தப் பண்ணையின் வளர்ச்சியில் எனக்கெவ்வளவு பங்குண்டோ அவ்வளவு பங்கு உங்களுக்கும் உண்டு.

புரியவில்லை எனக்கு. நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

திட்டமிடுவதும் முதலிடுவதும் மட்டும் வளர்ச்சிக்குக் காரணமாகிவிடாது. உரிய முறையில் செயல்ப்படுத்துவதுதான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிதரும். இந்தப் பண்ணையின் வளர்ச்சியில் எவ்வாறு உங்கள் பங்குண்டோ அவ்வாறு என் வாழ்க்கையிலும் பங்கு கொண்டால் நல்லாயிருக்கும் என நினைக்கிறேன்.

அம்மா, என்னம்மா சொல்கிறீர்கள். எனக்கொன்றும்புரிய வில்லையென எழுந்தான் வேலை செய்யும் இடத்திற்குப்போக

புரியவில்லை என்று சொல்ல வேண்டாம். புரிந்துகொள்ள முனைந்தால் எல்லாம் புரியும். நீங்கள் ஆறுதலாக யோசியுங்கள் எல்லாம்புரியும்.

இரண்டு நாட்களாக எழிலன் வேலைக்கு வரவில்லை. கலையரசியின் மேற்பார்வையில் ஏனைய தொழிலாளர்கள் வேலை செய்து கொண்டிருக்கின்றனர். கைதேர்ந்த அவர்கள் சிறப்பாகவே பணிபுரிந்தாலும் கலையரசிக்கு நிறைவு காணமுடியாதிருக்கிறது. எழிலன் ஏன் வேலைக்கு வரவில்லை அவசரப்பட்டுவிட்டேனோ என ஆதங்கப்பட்டாள். ஒருவேளை சுகயீனமுற்றுள்ளரா என்று அங்கலாய்ப்புடன் இருந்தாள். மூன்றாம் நாள் எழிலன் வேலைக்கு வந்தான். வழமைபோலவே உற்சாகமாக வேலையில் கண்ணும் கருத்துமாயிருந்தான். 3 நாட்களில் குளிகள் அமைத்து பனம்விதைகளும் புதைத்தாயிற்று. மழைபெய்ததும் கன்றுகள் நாட்டுவதற்கான தயார் நிலையில் இருந்தன. இந்த 3 நாட்களிலும் எந்தவித பெறுப்போ, கபடமோ, சோர்வோ இல்லாமல் கலையரசியும் இயல்பாகவே நின்று வேலைகள் செய்தாள்.

இவன் என்ன எண்ணுகிறான் என அறிய முடியாது அவதிப்பட்டாள். ஒருவேளை நானாக வழமைக்குமாறாகபோய் என்னை இணைத்துக்கொள்ளுங்கள் எனக்கேட்டதால் மலிவான பொருளாகக் கருதிவிட்டானோ என்றெல்லாம் குழப்பிப்போயிருந்த நாளில், மாலை வேலை முடிந்து எல்லோரும் வீட்டுக்குப் போகும் நேரம் எழிலன் மட்டும் தனித்து நின்றான்.

அம்மா நான் பொறுப்பெடுத்த வேலைகள் சரிவரச்செய்து தந்துவிட்டேன் என நினைக்கிறேன். என்னுடன் வேலை செய்யும் முருகேசண்ணை மிகவும் பொறுப்பானவர் என்னை நம்பிப் பொறுப்புக்களைத் தந்தமாதிரி அவரிடம் தரலாம் நிறைவாகச் செய்வார். இந்த மாத நிறைவுடன் வேலையிலிருந்து விலகிக்கொள்கிறேன் என்றான்.

விக்கித்துப்போனாள். தளராத குணம் கொண்டவர். இவர் ஏன்? ஏன் எனக் கேட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லையம்மா, நான் என்னையறியாமல் உங்கள் களங்கமற்ற மனதில் சஞ்சலம் ஏற்படுத்திவிட்டேன் போலத் தெரிகிறது. அதனால்...

அதனால் ஒன்றும் இல்லை நான் எனக்குப் பிடித்ததைப் பற்றிக் கொள்ள விரும்பியது உண்மைதான். நேரிடையாகக் கேட்டதும் உண்மைதான். உங்களுக்கு அவ்வாறான எண்ணம் இல்லாமலிருந்தால் ஏன் வேலையை விட்டுச் செல்லவேண்டும்?

அது சரிவராதம்மா. நாங்கள் தினக்கூலிக்காரர் எங்கடை மட்டோடுதான் வாழ்வமைத்துக் கொள்ள வேண்டும்.

நீங்கள் காண்பது போல நாங்கள் நிலச் சொந்தக்காரரும், பரம்பரைப் பணக்காரரும் அல்ல. அப்பா அன்னைக்கு வாழ்வளித்துக் கூட்டிவராவிட்டால் நாமும் இவ்வாறுதான் சமூகத்தில் கணிக்கப்பட்டிருப்போம்.

எப்படி இருப்பினும், நான் உங்களிடம் வேலைசெய்பவன் தானே....

எனக்குதவிய மாதிரி உங்களுக்கும் அந்தநேரத்தில் யாரும் உதவியிருந்தால் நீங்களும் படித்து உயர முடிந்திருக்கும். அத்தகைய திறமையும், ஆர்வமும் உங்களிடம் இருக்கிறது. சந்தர்ப்பங்கள் மனித வாழ்வை எப்படிப் புரட்டிப்போடுகிறது பாருங்கள்.

நீங்கள் கூறுபவை உண்மைதான். நியாயமும்தான். ஆனால் வாழ்வியலில் நடக்கமுடியாதவற்றை நினைப்பதில் பிரயோசனமில்லை.

எழிலனின் திடமான கொள்கைகளும், மாற்றவே முடியாத முடிவுகளையும் நன்றாகவே அறிந்திருந்த கலையரசி, அதற்காக ஏன் வேலையிலிருந்து நிற்கவேண்டும்? தயவுசெய்து ஒழுங்காக வாருங்கள் எனது விருப்பைச் சொன்னேனே தவிரக் கட்டாயப் படுத்தவில்லையே

அது சரிவராதம்மா, ஒருவேளைபோல் ஒரு வேளை மனதிராது
.

வேலைக்கு வராமல் விடுவதற்கான நொண்டிச்சாட்டுகள் கூறுகிறீர்களே தவிர, உங்களில் உங்களுக்கும் என்னில் எனக்கும் திடமான நம்பிக்கை இருக்கும் வரை. மன சொன்றும் குழப்பமடையச் செய்யமுடியுமா?

பண்ணைவேலைகள் வழமைபோல எழிலன் முன்னெடுத்துச் செல்கிறான்.

**மயூரதன் - யாழ்ப்பாணம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறம் சொன்ன தாத்தா

தாத்தா வளர்த்த மாமரத்தில்
தளிர்கள் விரிந்து எழிலாகும்
பச்சையாய் இலைகள் செழித்திடுமே
பருவத்தில் அங்கே பூ பூக்கும்
பூக்கள் முதிர்ந்து பிஞ்சாகும்
புதுப்புதுக் காய்கள் நிறைந்திடுமே
காய்த்துக் கிளைகள் நிறைந்திருக்க
காண்போர் எல்லாம் மகிழ்வடைய
காய்கள் முற்றிப் பழமாகும்
கனிகள் கொந்த அணிலுடனே
கிளிகள் காகம் கூடவரும்
நலமுடன் அவற்றைக் காத்திடவே
நாமொரு உபாயம் வகுத்தோமே
ஒட்டைத் தகரவாளி யொன்று
ஒன்றுக்கும் உதவாது கிடக்கிறதே
நாமதை எடுத்து வந்தே
நடுவினில் இரும்புத் துண்டொன்றை
நன்றாய்க் கட்டித் தொங்கவிட்டு
நீளக் கயிறும் இணைத்ததனை
இழுத்துப் பார்க்கச் சட,சடவென
சத்தம் வரவே பறவையுடன்
அணிலும் பாய்ந்து ஓடினவே
இன்று தாத்தா எனையணைத்து
அன்பொடு பழமொன்று தந்தாரே
எனக்கென ஒன்றைத் தந்ததுமே
ஏக்கமுற் றிருந்த தங்கைக்கும்
இந்தா உனக்கெனக் கொடுத்திட்டார்
அயலில் நின்ற சிறுவர்க்கும்
அன்புடன் சிலதைக் கொடுத்தாரே
கழுவி வெட்டித் தின்றோமே
கரும்பாய் இனித்ததே மாம்பழமும்
அயலுடன் பங்கிட்டு உண்ணும்
அறமும் சொல்லித் தந்தாரே
பொய்சொல்ல மாட்டேன் ஒருபோதும்
கையை மணந்து பாரிப்போது

- குழந்தைக்கவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அட்டைப்படநாயகன்

இப்பிரதேசத்துச் சான்றோர்களைக் கௌரவிக்கவும், இவர்களைப் போல தாமும் எழவேண்டும் என்ற உந்துதலை எமது மாணவர்கள் மத்தியில் வளர்த்து விடவுமாக இளந்தளிர் செயற்பட்டு வந்தது. இனியும் அவ்வாறே துளிர் விரியும். அந்தவகையில் இளந்தளிர் இப்பிரதேச வளர்ச்சியில் அதிக ஈடுபாடுகாட்டித் தற்துணிவுடன் செயற்பட்ட சமூக முன்னேற்றச் சிந்தனையாளன் திரு. சோமலிங்கம் சடாச்சரம் ஐயா அவர்களின் புகைப்படத்துடன் இளந்தளிர் - 9 வெளிவருகின்றது. மிகவும் மனநிறைவையும் தருகிறது.

மனிதகுலம் மாண்புறவேண்டுமெனில் கல்வியும் ஒழுக்கமும், இறைபக்தியும் ஒருங்கே வளரவேண்டும். அவ்வாறு வாழ்ந்து இக்கிராமத்தின் உதாரணபுருஷராகத் திகழ்ந்து மிக நல்லவனாய் அதிவல்லவனாய் வாழ்ந்து இக்கிராமத்தின் கல்வி, ஒழுக்கக்கட்டுப்பாடு, பொருளாதாரவளம் போன்றவற்றை உயர்த்தி வைக்கவெனத் திரு சரவணமுத்து சோமலிங்கம் அவர்களுக்கும் நாவற்குழியூர் திரு. சண்முகம் அவர்களின் மகளாகிய சிவக்கொழுந்து அவர்களுக்கும் 19-10-1907 ஆண்டு அவதரித்தார். கார்காலம் நிறைந்து கமம் புலமெலாம் செழிப்புற்றிருந்த காலத்தில் ஒரே மகனாகப் பிறந்தார். எதிர்காலத்தில் இக்கிராமம் செழிப்புறப்போவதை முன்கூட்டியே அறிவித்தது.

மூன்று சகோதரிகளுடன் பிறந்த இவர் ஆரம்பக் கல்வியைக் கைதடியிலும் உயர் கல்வியை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியிலும் பெற்றுக் கொண்டார். இளமையிலிருந்தே ஆர்வத்துடிப்புடன் சமதர்மம், பொருளாதார மேம்பாடு சுயபொருளாதார விருத்தி போன்றவற்றில் ஈடுபாடு காட்டிய இவர் விளையாட்டுத் துறையிலும் பிரகாசித்தார் அக்காலத்தில் உயர் கல்வியாகிய கேம்பிறிட்ஜ் சீனியர் பரீட்சையில் திறமைச் சித்தி பெற்றவுடனேயே 1927ம் ஆண்டு தபால்திணைக்களத்தில் அதிபராக இணைந்து நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் வேலை செய்தமையால் மூன்று மொழிகளிலும் புலமை பெற்றார். தொழிற்சங்கத் தலைவராகச் செயற்பட்டமையால் தொழிலாளர் பிரச்சினைகளைச் சரிவரப் புரிந்து அவற்றிற்கான தீர்வுகளுக்காகச் சிபார்சு செய்ததுமட்டுமன்றி வாதிட்டுவென்றும் கொடுத்துள்ளார். மற்றவர்களின் உரிமைக்காகவும் நியாயங்களுக்காகவும் வாதாடிய இவரின் இயல்பு நடுநிலையில் நின்று தீர்வுகாண மிகவும் உதவியது.

1937 காலப்பகுதியில் நாவற்குழியூர் திரு நடராசா சிவபாக்கியம் என்பவரைத் திருமணம் செய்து ஒரே புத்திரன் திரு.சோமலிங்ககுமார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற ஆண்மகனைப் பெற்றெடுத்தனர். சோமலிங்ககுமார் நாவற்குழி பாடசாலையில் கற்கும் காலத்தில் எனது நண்பனாக இருந்ததுடன் வகுப்பில் திறமைமிகு மாணவருமாகவிருந்தார். உயர்கல்வி கற்ற இவர் அரச தொழில் தேடிக் கொண்டபின்னர் வண்ணார்பண்ணை சிதம்பரநாதன் சிவபாக்கியம் அவர்களின் இளையபுதல்வி சிவகுமாரியைத் திருமணம் செய்து ஆர்த்தி விஷாகன், கிஷாந்தன் ஆகிய பிள்ளைகளைப் பெற்றுக் கொள்ளவே, பேரப்பிள்ளைகளுடன் மகிழ்ந்து கொண்டாடி வாழ்ந்து கொண்டு, நாவற்குழிப் பிரதேசமக்களின் மேம்பாட்டுக்காகச் செயற்பட்டு, அவ்வூர் கிராமசபைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுச் செயற்பட்டிருந்த காலத்தில் வழிபாட்டிடங்களில் ஏற்படும் பிரச்சினைகளைச் சுமூகமாகத் தீர்த்து வைத்ததுடன் கோவில் நிர்வாகத்தைச் சிறப்புறச் செயல்ப்படவும் வைத்தார். வண்ணார்பண்ணை காட்டுத்துறைப்பிள்ளையார், நாவற்குழியூர் வேலாயுதர் ஆலயம் வேலன்பராய் கண்ணகை அம்மன் ஆலயம் என்பன இவரது கண்காணிப்பிற்குள்ளாக்கப்பட்டு மக்கள் ஒன்றுகூடி வழிபடும் இடங்களாக்கப்பட்டன.

1972 ம் ஆண்டு காலப்பகுதியில், இணைந்திருந்த கைதடி நாவற்குழி கிராமசபையை எங்களுக்கென ஒரு சபை இருந்தால்தான் எமது பிரதேசம் வளர்ச்சியுறும் எனக் கருதி அதிகாரபூர்வமாக நாவற்குழி கிராமசபையை ஏற்படுத்தி அதற்கான ஒரு கட்டடத்தையும் நிறுவி 1974 ஆண்டு முதல் புதிய கட்டத்தில் இயங்கவைத்தமை. இதே காலப்பகுதியில் தென்மராட்சிமேற்குக் கூட்டுறவுச் சபையில் (கைதடி) தலைமைப் பதவியைப் பொறுப்பேற்று மிகத் திறம்பட நிர்வகித்த காலத்தில் நாவற்குழி வயல்வெளி நெல் அறுவடைக்குப் பின்னர் தரிசாக விடப்படுவதுகண்டு, அங்கே சணல் பயிரிடப் பயிற்றுவித்து, அதன் கம்புகளிலிருந்து சணல்நூல் தயாரிக்கும் நோக்கில் ஒரு சணல் தொழிற்சாலையையும் அமைத்து 15-20 இளைஞர்களுக்கு நேரடியாகவும் 50-100 பயனாளிகளுக்கு மறைமுகமாகவும் தொழில் வாய்ப்பேற்படுத்திக் கொடுத்தார். (இராணுவ முகமாக்கப் பட்டுள்ளது)

கோப்பாய்ப் பகுதியில் அமையவிருந்த சித்தமருத்துவ வைத்தியசாலையைத் தனது பேச்சுதிறத்தாலும் ஆளுமை அதிகாரத்தாலும் தூரநோக்கோடு கைதடியில் அமையச்செய்தார். அவ் வைத்தியசாலையில் 25 - 30 முழுநேர பகுதிநேரத்தொழில் வாய்ப்புக்கள் கைதடி நாவற்குழி மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்ததுடன், நோயாளிகளுக்கு பூரணமாகக் குணப்படுத்தக் கூடிய வைத்தியவசதிகளையும், இப்பிரதேச மாணவர்களைச் சித்தமருத்துவத்துறையில் கற்க இலகுபடுத்தியும் ஊக்கியும் வைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று அந்த வைத்தியசாலை வளர்ந்து அருகே சித்த மருத்துவ பல்கலைக்கழக அலகு அமையவும் அப்பிரதேசம் சிறப்புறவும் காரணமாயிருந்தார்.

தங்கள் கிராமசபைக்குள் அடங்கிய வீதிகளனைத்தும் புனரமைத்தும் விசாலித்தும், புது வீதிகள் அமைத்தும் பிரதேச மக்களின் போக்குவரத்தை இலகுபடுத்தினர். அவ்வேளையிலும் கூட ஒப்பந்தக்காரர்கள் சரியான முறையில் செய்கிறார்களா என்பதைக் கவனிக்க தொழில்நுட்ப உத்தியோகஸ்தர்கள் இருந்த போதும் குடை ஒன்றை விரித்துப் பிடித்தபடி வேலை நடைபெறும் இடங்களை நடந்தே சென்று பார்வையிடுபவர் (அந்தக் காட்சிதான் கண்நிறைந்து மனதில் பதிவாகி இன்னமும் நிற்கிறது) தபாற்துறையில் சேவையாற்றும் போது தொழிற்சங்கவாதியாகச் சேவையாற்றியதால் எல்லா மட்டங்களிலும் நடக்கும் நிர்வாகச் சீர்கேடுகளை நன்கறிந்தமையால் முழுமையான பலாபலன்கள் பொது மக்களுக்குச் சேரவேண்டுமென்பதில் மிகக்கவனமாக இருந்தார்.

கிராமங்கள் எழுந்தாலே பிரதேசம் வளர்ச்சியடையும் எனக் கருதி கிராமங்கள் தோறும் வாசகசாலைகள் ஏற்படுத்தி கிராம முன்னேற்றம் காணச் செயற்படுமாறு தூண்டினார். அக்காலப்பகுதியில் எமது ஸ்ரீசரஸ்வதி சமூக நிலையமும், அயற்கிராமத்தில் இயங்கிய காந்தி சனசமூக நிலையமும் சிறப்பாகச் செயற்பட்டு வந்தமையால் அவற்றின்மீது அளவற்ற அக்கறையும் கொண்டிருந்தார். நாம் நடாத்தி வந்த மாதந்த பௌர்ணமிக் கருத்தரங்கில் 3 தடவைகளுக்கும் மேலாகக் கலந்துகொண்டு, ஆச்சாரி இனத்தவரிடையே காணப்படும், கோபம் குரோதம் போட்டி களையப்பட்டு ஐக்கியம் வளரவேண்டுமென வலியுறுத்தினர்.

நெல்வயலில் சணல் பயிரிடுவதால் ஏற்படக்கூடிய சாதகமான விஷயங்களை அடிக்கடி என்னுடன் கலந்துரையாடுவார். நான் கற்று வைத்திருக்கின்ற விவசாய அறிவைப் பயன்படுத்தி விரிவாக்கம் செய்யப் பல முன்மொழிவுகள் வைத்திருந்த போதிலும் அவை நிறைவேறு முன்னர் காலமாகிவிட்டார். காலமுமாகி விட்டார். நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலை தொடரவந்ததால் யாவும் குழம்பிவிட்டன. மக்களும் தொழில்செய்து வாழ்வதில் நாட்டமின்றிப் பொய் பல பேசியும் முறைகேடான தொழில்கள் செய்தும் பணம் தேடப்பழகிவிட்டதால், தூய சுயமரியாதைச் சிந்தனைகள் செயலற்றுப் போய் விட்டன. ஆயினும் காலம் வரும். இவர்போன்று சமூகசிந்தனை உள்ளவர்களின் எண்ணங்களின் அலைகள் (Vibrations) ஓயப்போவதில்லை. வெல்லும் நிச்சயம் வெல்லும்.

**க. மயில்வாகனம்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா, என்றும் நீங்கள் எங்களுடன்....









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாந்தியைத் தேடுவோம்

எத்தனைகோடி பணமிருந்தாலும் நிம்மதி வேண்டும் வீட்டிலே என்பது அனுபவக் கவிஞனின் வாக்கு. மனிதர்கள் எல்லோரும் வாழ்வில் தேடுவதும், விரும்புவதும அடையத்துடிப்பதுவும் சாந்திதான். நாம் விருப்பமாகவே, தேடாமலே எம்வீட்டில் விளக்கேற்றி வைக்க வந்தவளும் சாந்திதான். இறைவன் எமக்குத்தந்தது. வசீகரப் புன்னகையுடன் வீட்டில் வலம்வந்து கொண்டு எல்லாப் பணிகளையும் செய்து கொண்டு எம்மையெலாம் ஓரணியில் கட்டிக்காத்தவள். கற்றிருந்தும், மாணவர்களுக்குக் கற்றுக் கொடுத்திருந்து கொண்டும், படித்திருந்தாலும் ஆச்சாரியத் தொழில் செய்து வாழும் என்னுடன் தன் வாழ்வை இணைத்துக் கொண்டவள். அவருடைய கல்வியும் தராதரங்களும் அவருக்கொரு நல்ல அரசவேலைதரும் என்ற சிந்தனையுடன் நம்பிக்கையுடன், எதிர்பார்ப்புடன்தான் இணைந்தாள். அக்காலச் சூழலுக்கேற்றவாறான சிந்தனை அது. ஆனால் அரசு வஞ்சித்ததனால் வெகுண்டு இனி அரசதொழிலுக்குப் போவதில்லை என்று காலம் பிந்திக் கிடைத்த அரசதொழிலைப் புறக்கணித்த ஒருவருடன் எப்படி வாழ்வது என்ற மனச்சஞ்சலம் கிஞ்சித்துமில்லாமல், தன்னுடைய எதிர்பார்ப்பு, அரசதொழிலால் ஏற்படும் கௌரவம், மரியாதை என்பவற்றை ஆச்சாரியத் தொழிலை விரும்பி ஏற்று, அதன் மூலமும் நன்நிலை அடையலாம் என்று விடாப்பிடியாகத் தொழில்ப்பட்ட என்னுடன் இணைந்து குடும்ப நலனுக்காக உழைத்தவள். எப்போதும் இல்லில் இசைந்தொழுகியவள். என் எல்லா முயற்சிகளுக்கும் தேவைகளுக்கும் உதவிகளுக்கும் ஊன்றுகோலாய் நின்றவள். ஊக்குவித்தவள். உதவியென வந்தோரெவர்க்கும் **தன்தாய்போல** நின்று எல்லா உதவிகளும் செய்தவள். எல்லாச் செயல்களையும் என்கருத்துக்களுக் கிசைவாகவே செய்து வாழ்ந்தவள். ஏற்றமுடன் நான் எழவும், நான் எடுத்தமுடிவுகள் தோற்றுப் போகக்கூடாது என்பதற்காகவும் என்னுடன் இணைந்தவள். வாழ்வில் எல்லோருக்கும் ஏற்படுவதுபோல் எம்வாழ்விலும் ஏற்பட்ட பிரச்சனைகளுக்கும், துயரங்களுக்கும், தோல்விகளுக்கும் அதனால் நான் கோபம் கொண்டு எழுந்த வேளைகளில் எல்லாம் குளிர்நிலவாய் என்னை அணைத்தவள். நோயுற்று நான் வீழ்ந்தவேளை, தன்னைக் கவனியாது எனக்கான எல்லாப் பணிவிடைகளையும் செய்தவள். 2006ம் ஆண்டு அரசகொள்ளையருடன் அயலூர் கொள்ளையர் இணைந்து எம் சொத்துகள் சேமிப்புகள் அனைத்தையும் கவர்ந்து கொண்டு போன வேளையிலும் கூட என் இயலாமையால் ஆத்திரப்பட்டு நின்ற நாட்களில் அரச வன்முறைகளுக்கு நாமொன்றும் செய்யமுடியாதென்று என்னைச்



PUBLIC LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாந்தப்படுத்தியவள். நாம் தேடியவைதானே, போகவேண்டியவைதான் போயிட்டன. எமது உயிரும், உரமும் போகவில்லைத்தானே என உற்சாகப்படுத்தியவள். சூழ்நிலையோடிசைந்து இணங்கிப் போகும் குணம்படைத்தமையால்தான் இவள் சாந்தியானாள் அண்டிய எல்லோர்க்கும் சாந்தி அளித்தாள் இவள் ஆன்மா சாந்தியடையும் வகை நாம் பணிசெய்வோம்.

நோயென்று ஒருபோதும் படுத்ததில்லை. ஓய்வொழிச்சலின்றித் தன் பணிகளுடன் தக்கார் பணிகளும் பார்த்து வைப்பாள். துணிகள் தைப்பாள். சுவையாய் சமைப்பாள் பாடம் சொல்லித்தருவள். தஞ்சமென வந்தவரை ஆதரிப்பாள். எனக்கும்பிள்ளைகளுக்கும், மனைவியாய் தாயாய் நல்ல நண்பியாயுமிருந்தாள். எப்படி இதையெல்லாம் செய்கிறாள் என ஆச்சரியத்துடன் எண்ணி மகிழ்ந்திருந்தோம் 23-05-2019 அன்று விடாமல் தலை இடிக்குது என்றாள். மருந்தெடுத்தாள். மாலை வேளை தனக்கொருவித மயக்கமாயிருக்கிறது என்றாள். வைத்தியநிபுணர் ஆலோசனையுடன் வைத்தியசாலையில் சேர்த்தோம். தீவிரகண்காணிப்பிலிருந்தாள். நீங்கள் வெளியே வீணுக்குத்தானே நிற்கிறீர்கள் திட்டமிட்டபடி பரிசில் விழா செய்து விட்டுவாருங்கள். பாவம் மாணவர்கள் அவர்களைக் கவனியுங்கள் என்றாள். விழா முடிந்து வரவும் சுகமாக இருந்தாள். புன்னகைத்தாள் கண்களால் பேசினாள். கையசைத்து சென்றுவா என்றாள். தேறி வருகிறார் இரண்டு நாட்களின் பின் (வாட்) விடுதிக்கு மாற்றிவிடுவோம். அவருக்குப் பூரண ஓய்வு வேண்டும் என்றார் வைத்திய நிபுணர். மகிழ்ந்திருந்தோம். மாயம் என்ன நடந்தது? இரவு 8.30 மணிக்கு இடிபோல் செய்தி வந்தது. இப்படியும் வாழ்வில் நடக்குமா என அங்கலாய்த்தோம். அழுதோம் புரண்டோம். எழுதிய விதியின் கை எழுதியபடியே செல்கின்றது. போதி மரத்துப் புத்தராய் எமக்குச் சாந்தி அளித்தவளே நீ எங்கே? எல்லார்க்கும் பணிவிடைசெய்து பராமரித்தவளே உன்னைப் பாதுகாக்கவும் பராமரிக்கவும் முடியாமல் போனதே ஏன்? தவிக்கின்றோம்.

தச்சன்தோப்பு காத்தியேசு சின்னத்துரை யாழ்ப்பாணம் சின்னத்தம்பி சோதிலட்சுமி இணையருக்கு 1949ம் ஆண்டு தை மாதம் 31ம் திகதி பிறந்தார். தங்கையர் இருவர் தம்பி ஒருவர் 1958ம் ஆண்டு இனக்கலவரம் வரை கொழும்பு நகரிலே இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் பணிபுரிந்த அப்பாவுடனும் சகோதரர்களுடனும் கொழும்பில் வாழ்ந்தார். கற்றார் 1959 இலிருந்து யாழ்ப்பாணத்து வீட்டில் பாட்டியையும் இணைத்துகொண்டு வாழ்ந்தார். சிறுவயதிலிருந்தே கவனிக்கப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாந்தமான குணத்தால் சாந்தா சாந்தா என்றே அழைக்கப்பட்டார். அக்காலத்தில் யாழ்ப்பாண நகரில் பிரபல்யமிக்க வைத்தீஸ்வராக் கல்லூரியில் க.பொ.த (உயர்தரம்) வரைகற்றுயர்ந்தார். அப்பாவின் உழைப்பெல்லாம் அண்டி வந்த உறவினர்களுக்கு உதவியமையால் உயர் கல்வி கற்கும் வாய்ப்பை இழந்தபோதிலும் கற்றுக்கொண்டவர்களின் அறிவு சோம்பியிருக்கவிடா தென்பதற்கிணங்க, அயல்வீட்டுப் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுத்தார். அந்த நாட்களில் இவர்களது இல்லம் ஒரு குருசேத்திரம். பலரும் கற்றனர். பலதும் கற்றுக் கொண்டனர். பயனடைந்தவரும் பலபேர். கூடவே தையல்கலையையும் கற்றுத்தேறினார். திருமணபருவம் வரவே அக்கால வழமைப்படி (இக்காலம்மிகவும் கடுமையாகப்) பொருத்தம் பார்த்தவேளை இவர் சாதகத்தில் 8ல் செவ்வாய் பாவக்கிரகமென்று வந்த வரன்களெல்லாம் தட்டிப்போக. இச் சாதகம்பொருத்தம் பார்ப்பதிலும், பொருத்தம் பார்ப்பவர்களிலும் நம்பிக்கையற்றுக் தன்னையும் பின்னர் கடவுளையும் பரிபூரணமாக நம்பி, எழுதி வைத்துப் பாதுகாத்துவந்த சாதகக் குறிப்பை கரவாக எடுத்து எரித்துவிட்டுவாழ்ந்த என்னைப் பற்றி அறிந்து மாமா பூக்கட்டிவைத்துப் பொருத்தம் பார்த்து (இறுதியில் கடவுளை நம்பிக்கொண்டு) என்னுடன் திருமண பந்தத்தில் இணைத்து வைத்தனர். சாதகமும் சாஸ்திரியும் இணைத்து வைத்தாலே இப்படியொரு பொருத்தம் வருமா என்று எண்ணும் அளவிற்கு உயிருடன் இணைந்திருக்கும் உயிர்போல எம் வாழ்க்கை அமைந்தது. சிறப்புற்றிருந்தோம்.

மனமொத்த நல் இல்வாழ்வின் பேறாய் பெறுதற்கரிய நற்பண்புகள் நிறைந்த பிள்ளைகளைப் பெற்றோம். அம்மாவின் குணங்கள் அத்தனையும் நிறையப் பெற்ற சுதமதி, ஜெயமதி, மதுமதி, தயாமதி, ஜனந்தன் என ஐந்து குழந்தைகள் கடவுள் எமக்கருளினார். பொறுமையின் குன்றாய் வாழ்ந்த அன்னையின் குணங்கள் இவர்களிடம் நான் காண்கின்றேன். சீர்தூக்கிப்பார்க்கும் இயல்பிலாகட்டும் இல்லாதவர்களுக்கும் இரங்குவாருக்கும் உதவுவதிலா கட்டும் சிறியோர் பெரியோரைச் சாந்தப்படுத்தி மதித்து நடக்கும் குணத்திலாகட்கும் இவர்கள் அன்னையை ஒத்தவர்களே. எல்லோரும் படித்தவர்கள். பட்டங்களைப் பெற்றவர்கள், பெறத்தவறிய அல்லது விரும்பாத சமூகத்தில் அந்தஸ்த்தெனக் கருதக்கூடிய அரசதொழில் பெற்று அதிலும் குறிப்பாக ஆசிரியர் தொழில் பெற்று வாழ்ந்து வரும் நாட்களில், திருமணபருவடைந்த இவர்களுக்குத் திருமண பொருத்தம் பார்த்தவேளை அம்மாவைப்போலவே செவ்வாய் பாவக்கிரகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட சுதமதி, இதே குணஇயல்புகளும் சாதகக் குறைபாடுகளு முள்ள சிவதாஸ் (London) என்பவருக்குத் திருமணம் செய்து வைத்து மிதூஸ், விசிகா என்றிரு பேரக்குழந்தைகளுடனும், ஜெயமதிக்குப் பொருத்தங்கள் பார்க்காமலே எமது முறை மருமகனை ராஜ்குமார் (Lodon) என்பவருக்குத் திருமணம் செய்து வைத்து திரிஷன், ஜெனிசன் என இருபேரக்குழந்தைகளுடன், மதுமதி பல்கலைக்கழகத்தில் கற்கும் காலத்திலேயே விரும்பிக் கொண்ட தீபன்திலீசன் என்பவரைத் சாதகப் பொருத்தம் பார்க்காமலே திருமணம் செய்து தந்து நிக்ஷானா, நிர்ஷானா என்றிரு பேரக்குழந்தைகளுடனும் தயாமதிக்குச் சாதகம் பொருந்திவர குகறாசா என்பவரை மணம்முடித்து கிரிஷ்காந்த், யதீஷா, காசினி என்ற பேரக்குழந்தைகளுடனும் ஒரே மகன் ஜனந்தன் நாட்டின் சூழ்நிலைக் குழப்பத்தால் படிப்பு குழம்பியது மட்டுமன்றி உயிர்பாதுகாப்புக்குமாக கனடாவில் வசித்துவர அங்கேயே வாழ்ந்து வந்த துஷாரா என்பவரை மணம் செய்து வைத்து மயூரேஸ், தான்யா என்றிரு பேரக்குழந்தைகளின் மகிழ்வும் வளர்ச்சியும் கண்டு ஆனந்தம் மிகக்கொண்டு வாழ்ந்து வரும் நாட்களில் விதித்த நாட்களுக்கும் நேரத்துக்கும்மேலாக ஒருகணமேனும் வாழ விடமாட்டேன் எனக் காலன் கவர்ந்துபோனான். காலா நீ கொடியவனடா. நோயின் வலியும் வேதனையும் மற்றையோருக்குக் காட்டி அவர்களைக் கவலைக்குள்ளாக்க விரும்பாதவாறு, குறுநகை முகத்தில் தவள போய்வாருங்கள் எனக் கையசைத்துக் கண்களால் பேசிச் சென்றாள். விதிக்கப்பட்டவற்றை விலக்க முடியாது, வகுக்கப்பட்டவற்றை மாற்ற முடியாது மரணத்தையாராலும் தடுக்கவும் முடியாது. மரணம் எல்லோர்க்கும் பிறக்கின்ற அன்றே எழுதப்பட்டது. இன்னும் சொல்லில் இறப்பதற்காகவே பிறக்கின்றோம். எத்தனை பிறப்பெடுத்தோம். புல்லாகிப் பூடாகி, பூழுவாகி, மரமாகி.... எல்லாப் பிறப்பும் பிறந்து அரிய பிறவியாம் மனிதப் பிறவி பெற்றோம் அதிலும் கூன்குருடு, செவிடு, முடம் நீங்கிப்பெற்றோம். பெற்றவையெல்லாம் பெற்றோம் இறைவனடைய வழியும் பெற்றோம். இனிப்பிறப்பில்லா வாழ்வு இறைவனடியில் வாழ, சாந்தி அடைய அவரின் விருப்பப்படி அவர் விரும்பிய பணிசெய்து அவர் விருப்பப்படியான வாழ்வை எமது நாட்கள் முடியும் வரை வாழ்ந்து கொள்வோம். கண்ணீரைத் துடைத்துக்கொள்வோம். நற்காரியங்கள் செய்வோம்.

அப்பாவும்
பிள்ளைகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் அண்ணி

வாழ்க்கை ஒரு வட்டம், கீழே இருப்பவன் மேலே போவான் மேலிருப்பவன் கீழே வந்துதான் ஆகவேண்டும். வாழ்க்கை வட்டச் சுழற்சியில் இதுதான் நியதி. சிறுவட்டம் பெருவட்டம் என்று பேதங்களிருக்கலாம் ஆனால் ஒவ்வொருவர் வாழ்வும் இவ்வாறான வட்டத்துக்குள்தான் அமையும். பெற்றோர்தான் கோவில், அண்ணாக்கள்தான் தெய்வங்களென்று வாழ்ந்த என்னை அச்சிறுவட்டத்துள்ளிருந்து வெளிஉலகுக்குக் கொண்டு வந்தவர் என் அன்பான அண்ணிதான். அவர் அண்ணியல்ல இன்னொரு அம்மா, விழப்போகும்போது தடுக்கவும் இழுத்து அணைத்துவைத்து ஆறுதல்கூறவும் அவரால்தான் முடிந்தது. 1975 ம் ஆண்டு இலிருந்து எனக்கொரு நல்ல அண்ணியாக அன்னையாகத் நல்ல தோழியாக, நல்ல குருவாக இருந்து வழிநடாத்தியவர். தையல் தொழிலில் இன்று கைதேர்ந்து உள்ளேன் என்றால், அதன் மூலமாக வருமானம் பெற்றுக்கொள்கின்றேன் என்றால் அண்ணி கற்றுத் தந்த பயிற்சிதான். தவறாக நான் வெட்டியபோது காட்டித்தந்து இப்படியல்ல இவ்வாறு என்று கற்றுத்தந்தவர். முதலில் பேப்பரிலும் பின்னர் துணியிலுமாகக் வெட்டும் முறைகளை கோபம் சினமின்றிக் காட்டித்தந்தார்.

சமையல் கலையையும் சுவையாகச் சமைக்கப் பாவிக்கவேண்டிய வாசனைச் சரக்குகளையும் அளவையும் அவற்றில் நிறைந்துள்ள சத்துக்களையும் ஆசிரியராக நின்று கற்றுத்தந்தவர். அண்ணி வீட்டுக்குச் செல்லும் வேளைகளில் சுவையான பலகாரங்கள் செய்து தருவதுடன், கோப்பிதரவா, தேநீர்தரவா, சீனிபோடலாமா என்று கேட்டுக் கேட்டே உபசரிப்பார். எங்களுடன் மட்டுமல்ல அவரது விருந்தினர் அனைவருடனும் அவ்வாறுதான் நடந்துகொள்ளுவார் என நாளாக நாளாகத் தெரிந்து கொண்டு அதையே நானும் வழமையாக்கிக் கொண்டுள்ளேன்.

அண்ணன் என்பவன் இடிதாங்கி அத்தனைபேரின் சுமைகளைத் தாங்கிக் கொண்டு எம் குடும்ப உயர்வுக்காய் நெறிப்படுத்திக்கொண்டிருக்க ஆலமரமாய் வந்து இணைந்தார். நிழல் தந்தார். விழுதுகள் விட்டுச் செழித்தும் நின்றார். விழுதுகளும் அவரைப் போலவே வளர்கின்றன.

எமது குடும்பத்தைக் குலையவிடாது இணைத்து வைத்திருந்தவரும் இவர்தான். அண்ணன் தம்பிகளுக்கிடையேயும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுடனும் இடைக்கிடை ஏற்படும் மனக் குமுறல்களையும் சாந்தப்படுத்தி ஐக்கியப்படுத்தி வைத்திருந்ததனால் சாந்தி ஆனாரோ. அல்லது சாந்தியாயிருந்தமையால் எம்மை ஐக்கியமாக வைத்திருந்தாரோ. என நான் யோசிப்பதுமுண்டு. அவ்வாறு குடும்பத்து மூத்த அண்ணியாக வந்து முழுக்குடும்பத்தையும் இணைத்து வைத்திருந்தார். சிலவேளைகளில் வேலைக்களைப்பால் நான் சினம்கொண்ட போதும் இயல்பான தன் குமுண்சிரிப்பால் சாந்தப்படுத்திவிடுவார். அம்மா ஐயாவுக்கோ இவர் மேல் அளவில்லா பிரியம். ஓய்வொழிச்சலின்றி எப்போதும் ஏதாவது செய்து கொண்டேயிருப்பார். வாழ்நாளில் ஒருதடவையேனும் நோயென்று பாயிலைபடுத்து நான்கண்டதில்லை.

இறுதியாக நோயென்று வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருந்தவேளையில் கூட "நான் இங்கு இருக்கிறேன்" என அழைத்து என்னைத் தேடி அலையவேண்டாம் என வழமையான மலர்ச்சியுடன் கூறினார். சந்தோஷமாக இருங்கள் விரைவில் நான் வீடுவருவேன் என்றார். சந்தோஷமாகவே வீடு வந்து சேர்ந்தேன். இரவு 8.30 - 9.00 மணியளவில் தொலைபேசி அண்ணி இறந்துவிட்டார் என அலறியது. அதிர்ந்துவிட்டேன் புயலடிக்காத போதும் ஆலமரம் சாய்ந்ததுவோ என அரற்றிக்கொண்டோம். இழப்பு எல்லோருக்கும் உண்டு. இறப்பு எல்லோருக்கும் நிச்சயம் ஆனால் இப்படியா? நோயொன்று மில்லாமல் மரணம் வந்ததே. தலையிடியும், தொடர்ந்து மாலையில் வந்த மயக்கமும் மரணத்தைக் கொண்டுவந்ததே. சத்துணவும், சமஉணவும் எடுத்துக் கொண்டதால் மரணம்வரை நோயில்லாமல் வாழ்ந்தவர் அன்னையும் பிதாவும் முன்னெறி தெய்வம்தான், ஆயினும் அண்ணனும் அண்ணியும் என்னை நல்வழிப்படுத்தியவர்கள். நான் வாழும் வாழ்வும் வளமும் அவர்கள் கற்றுத்தந்ததே.

பிறப்பவர் இறப்பது உண்மை. மாரியில் மழை வருவது வழமை. மின்னாமல் முழங்காமல் மழைவந்ததே யாரிடம் ஆறுதல் பெறலாம். அதற்கும் அவரே கற்றுத்தந்தார். "எதிலும் ஆசை வைக்காதே அதிகம் அன்புகொள்ளாதே துன்பம்" என்றார். எல்லாம் முடிந்தது ஏற்றுக்கொண்டு அவரைபோல் அல்லது அவர் காட்டிய வழியில் பயணிப்போம். சிரமம்தான். முயன்று பார்ப்போம்.

**து. மங்கையக்கரசி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓடுகிற வண்டியிலே ஒருமாடு பிரிந்தால்

1. கன்ற கன்றதாயைத் தேடும் பாங்காய்
காதலுடன் எமைக்காத்து நின்றாய் நீயே
அகன்று நின்றாய் உயர்ந்தும் நின்றாய்
அன்போடு உறவுகள் அணைத்தும் நின்றாய்
மன்றிலே யுன்புகழ் பேசக் கேட்டு
மாலையாய் சொரிகிறதே கண்ணில் வெள்ளம்
இன்றெமைப் பிரிந்து போய் ஈசன்
காலடி சேர்ந்தாய் நன்று நீவாழி

2. அன்றால மரவடியில் அமர்ந் திருந்து
அடியோர்க்கு அருள்புரி வீரபத் திரனை
என்னாளும் தொழுதெழுவாய் அன்ப ரேத்த
ஏடுடைய மாணவர் எழுந்தா ருயர்ந்தார்
நன்றாயிரம் செய்தாயே நலனோம்பி நின்று
நாயகனே தெய்வமென்று நாளிலும் பிரியாய்
இன்றேகி விட்டாய் இறைவன் பாதம்
இனியவளே இன்புற் றென்றும் நீவாழி

3. நன்றாயி ருந்தேன் நாயகியே குணக்
குன்றே என்னுடன் கூடவே நீயிருந்தாய்
என்றாயி னுமிப்பிரிவை எதிர் பார்த்து
என்னவளே யார்முந்தி எனப்போட்டி யிட்டு
சென்றாயினி எம்வாழ்வு சீர்பெறுமோ சிதைந்திடுமோ
சேரிடம் அறிந்தாங்கு சென்றவளேயெம் செல்வமே
கன்றாயி ருந்திங்கு கதறுகிறோம் காரிகையே
கண்டுகொண்ட இறைவனடி சேர்ந்தாய் நீவாழி

4. அள்ளி யள்ளித் தந்தாய் அன்பை
ஆதரித்து அணைத் திணைத்தும் நின்றாய்
தள்ளித் தள்ளித்தனிவழி சென்ற போதும்
தாயாகி இழுத்து அணைத்துக் கொண்டாய்
கிள்ளிக் கிள்ளிக் கீரையாக்கிப் பிரித்தவரின்
கீழ்மைக் குணமகற்றி ஏற்றம் மிகக்கண்டாய்
வெள்ளி வெள்ளி தோறும் விளக்கேற்றி
வேட்கையுடன் இறைசேர்ந்தாய் என்றும் நீவாழி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. ஓடுகின்ற வாழ்க்கை வண்டியிழுத்துச் சென்ற
ஒற்றைமாடு பிரிந்த தனால் என்னாகும்
வாடுகின்ற நிலையகற்றி என்றும் நீயே
வந்து நிற்பாய் வதனம்விரி சிரிப்புடனே
கூடுகின்ற குடும்பங்க ளெங்கள் வீட்டில்
கேடெமக்கு வந்தென்று விதிர்த்து நிற்கக்
காடுகொண் டெரித்தால் எல்லாம் போச்சோ
காரிகையே சேர்ந்தாய் இறைபதம் நீவாழி

6. எனக்கொரு மணிப்புறா தான்விரும்பி யிணைந்து
ஏனின்று எமைவிட்டு நெடுந்தூரம் சென்றது
தனக்கென எதையுமே தேடாமல் எல்லாம்
தமருக்காய் தந்தது நினையாதொரு கேடுவரின்
தினைத்துணையும் தயங்காது முன்னே நின்று
தீங்ககற்றி யதற்கொரு தீர்வும் கண்டாய்
நினைத்தலைக்கும் உன்நினைவு அரித்தெடுக்கு தெம்மை
நீடுபுகழ் இறைவனடி சேர்ந்தாய் நீவாழி

7. அமைதி என்றால் அது சாந்தி
ஆறுதல் மனதில் தருபவள் சாந்தி
இமையாய் எமைக் காத்தவள் சாந்தி
ஈடில்லா பொறுமை கொண்டவள் சாந்தி
உமையவள் உலகுக்கு தருவது சாந்தி
ஊரெல்லாம் கொண்டாட வாழ்ந்தவள் சாந்தி
எமையெலாம் விட்டேகிச் சென்றாள் சாந்தி
ஏரேறும் பெருமானடி சேர்ந்தாய் நீவாழி

8. அருமந்த வாழ்வு நாம் வாழ்ந்திருந்தோம்
ஆதரித்து யாவரையும் பாதுகாத்தோம்
தருமத்தை என்றுமே செய்து வந்தோம்
தரணியி லுள்ளோரை அன்பு கொண்டோம்
பெருமருந் தாயுலகோர் துயர் காத்தோம்
பேதலித்து நாமிங்கு வீணே உள்ளோம்
தருமருந்தே நீசென்ற இடம் அறிவோம்
தாயேயங்கு அமைதி கொள்வாய் நீவாழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. கூறுபோட்டு நீயெம்மைப் பிரிந்து சென்றாய்
கூறுநீ சென்றவழி நாமும் வாறோம்
மாறுபட்டு நம்வாழ்வில் நின்ற தில்லை
மாண்புடனே புகழ்ந்தேற்றி நின்றா ருன்னை
சேறுவிட்டு முகிழ்த்து வரும் செந்தாமரையே
சென்றவிடம் அறிந்தோம் செல்வமே நீ
சோறு போட்டு வாழ்ந்தவர் கனபேர் இங்கே
சொர்க்கத்தில் இருந்தவாறு நன்றே நீவாழி

10. பாடுபட்டு பாடுபட்டுப் பலவும் செய்வாய்
பாலரோடு என்னையுமே வாழ வைத்தாய்
வீடுவிட்டு, வீடுவிட்டு விலகிப் போனாய்
வீணாக நாமிங்கு தவிக்கக் காண்பாய்
கோடுபோட்டு கோடுபோட்டுக் குசினியில் நிற்பாய்
குவலயத்தோர் வாழக்கண்டு அங்கும் மகிழ்வாய்
கூடுவிட்டுக் கூடுவிட்டுப் பறந்த கிளிநீ
கும்பிட்டவன் பாதம் சேர்ந்தாய் நீவாழி

11. மாட்டுடனே வருகின்ற கண்டும் இங்கே
மாதரசி நின்கஞ் சிக்காய் ஏங்குதிங்கே
கூட்டுடனே கிளியொன்று பறந்து போய்ச்சு
கும்பிட்ட வனடியை நாடிப் போய்ச்சு
காட்டுடனே உன்வாழ்வு முடிஞ்சு போய்ச்சா
கனபேருக் கதுஇன்று விளங்கிப் போச்சு
பாட்டுடனே நாமிங்கு புலம்பி நிற்கப்
பரமபதம் அடைந்தவளே நீவாழி

12. மாமி போற்றும் மருமகளானாய் நீயே
மல்லுக் நின்றோரை அணைத்தாய் நீயே
ஆவி பிரிந்தின்று போனாய் நீயே
அன்னமிட்ட அனைவருமே கலங்க நீயே
சாமியிடம் போகவேண்டிப் போனாய் நீயே
சரிதங்கள் எழுதிவைக்க செய்தாய் நீயே
பாவியிங்கு இருந்து புலம்ப வைத்தாய் நீயே
பரமனடியில் பத்திரமாய் இருப்பாய் நீவாழி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. கண்டு கண்டு நீசென்ற போதும்
காணாதவன் போலன்று இருந்து விட்டேன்
மீண்டுமீண்டு வந்தெமக்கு வாழ்வு தந்தாய்
மீளாத்துயில் கொண்டின்று சென்று விட்டாய்
விண்டு விண்டு உரைப்பதற்கு வார்த்தை இங்கு
வீணான எனக்குமோ கிடைக்கு தில்லை
கொண்டு கொண்டிங்கு வாழ்ந்த நாட்கள்
கோடானு கோடிபெறும் நீவாழி

14. துண்டுதுண்டு போட்ட போதும் நாங்கூழ்
தனித்தனியே உயிர்பெற்று ழவர்க்க துதவும்
நண்டுநண்டு முதிர்ந்து விட்டால் வளையை
நீங்கித் திரிந்து வலையிலே சிக்கும்
பண்டு முழைப்ப தரிசியே யானாலும்
விண்டுமி போனால் முழையாவாம் கண்டு
பண்டுதொட்டு இருந்து வரும் முறமையிது
பாரினில் வாழ்வோருக்கும் பொருந்துமிது நீவாழி

15. நான்கேட் டெம்வாழ்வு சிறந்ததா இல்லை
நம்பிக்கை கொண்டவனின் முயற்சியின் பேறம்மா
தான்கேட் டுப்பெறா விவ்வுடம்பு தரணியில்
தன்போக்கில் வளர்ந்தின்று வீழ்ந்ததுவோ
தீன்போட்டு வளர்ந்த உடல் தீயணைந்ததுவோ
திருவருளாலே எல்லாவும் நடக்கின்றன
கான்கொண் டெரித்துநீர்க் கரையிலே கரைத்தால்
போய்விடுமோ எல்லாம் பொய் நீவாழி

16. களித்துலகில் வாழ்ந்த நாட்கள் உறவெலாம்
களிப்படைய வைத்ததன்றி வேறொன் றறியாய்
ஒளித்தொளித்து உறவுகளை உய்வித்த உத்தமியே
ஒருபொழுதும் பிரிவறியா வாழ்ந்தோமே முகம்
சுளித்தறியா வாழ்வுதந்தாய் சுகித்தென்று மிருப்போமே
செருக்குடனே நானிருக்க எமைப்பேணிக் காத்தவளே
அழிந்துவிட் டதனைத்தும் ஆசுடன் அடங்கிப்
போய்ச்சேர் ந்தாயிறை பதம் நீவாழி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. நினைந்து நினைந்துருகி நெஞ்சம் புண்ணாக
நீபிரிந்தாய் நிர்மலியே யெமை விதி
வனைந்து வனைந்து வைத்தவாறு முயல்வோம்
வாடிநிற்கும் பயிராய் வான்மழை நோக்கி
முனைந்து முனைந்து நிற்கிறோம் வாழ்வுக்காய்
மட்டில் துயரம் மரகதமே தந்துசென்றாய்
விளைந்து விளைந்து வந்தபயனே விதியோடிணைந்து
வீணாகிப் போகுதடி விண்ணடைந்தாய் நீவாழி

18. பணிந்து பணிந்து பலபேர்க் கெல்லாப்
பாடெல்லாம் சுமந்து நீபம்ப ரமாய்
சுழன்று சுழன்று முடித்து வைப்பாய்
சூதுவாதென் றறிந்தும் அறியாத வளாகி
தணிந்து தணிந்து வெருமனைத் துமணிவித்து
தாய்க்கும் மேலானஅன்புட னெவரையும் காத்து
கனிந்து கனிந்து தருமரமாய் ஊருக்குள்
நிமிர்ந்தாய் இறைபதம் சென்றாயின்று நீவாழி

19. மயக்கம் தந்தவளே மனதில் நிறைந்தவளே
மாயம் நடந்ததென்ன மானிடம் அழிந்ததென்ன
தயக்கம் ஏதுமின்றி தரணிவாழ் அனைவரையும்
தாயாகி நின்றென்றும் காத்து மகிழ்ந்தவளே
இயக்கம் இல்லாமல் போனதுவோ உடலம்
ஈசனடி சேர்ந்துவிட்டதுன் உயிரும்
வியக்கும் வண்ணம் விந்தைகள் புரிந்தவளே
எம்மூர் மாணவர் உயர்வுன் எண்ணம் நீவாழி

20) வேளை வந்ததெனப் போனாயோ நீயும்
வெருட்சியான மனதை வென்றாயோ நீயும்
காலை முதல்மாலை இருந்தழ வைத்தாயே நீயும்
கபடமின்றி மகிழ்ந்து கொண்டாடி நீயும்
பாளைவெடிப் பதுபோலச் சிரிப்பாய் நீயும்
பக்குவமாய் எமைக் காத்தாயே நீயும்
நாளை யிங்கு வருவாயென நம்பிக்கையுடன்
நாமிருக்க, இறையடி யடைந்தாய் நீ வாழி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நற்பதம்தா கற்பகமே

நாலிரண்டு கற்ற வைத்திய ரெமக்கு
நயம் செய்வா ரென்றி ருந்தோம்
மாலுக்குள் கிடத்தி விட்டார் சாந்தி
மரணம் வந்திட் டதென்று சொன்னார்
கூண்டுக்குள் கிளியாகி குறுகி நின்று
குணம் கெட்டுக் கதறுகின்றோம்
தீண்டுகின்றோம் தீயை யிங்கு
தீராத துயரம் கொண்டு

எண்ணம் பொருள் அனைத்தும்
ஏனென் றாகிவிட்ட திங்கே
தண்ணென் றாய்ச்சுதம்மா மேனி
தளர்ந்து நடுங்கு தம்மா
கண்ணென்றி ருந்துநீ காத்துவந்தாய்
காலன் கெட்டுக் கவர்ந்தானோ
முன்நின்று செயும்மூத்த மருமகள்
மூச்சுவிட மறந்து நின்றளோ

தேனொத்த சொல்கொண்டு சாந்தி
திகட்டிடவே அன்பு செய்வாய்
மான்தந்த கண்களாலே எம்மை
மயங்கவே வைத்திருப்பாய் என்றும்
நோயில் படுத்ததில்லை அம்மா
நோற்றவை வீணாகிப் போச்சுதம்மா
போயிவ் வாழ்வை முடித்துப்
பொருந்தீக் கொண்டாய் சிவடினயே

நெற்றி சுருங்கக் கண்டால்
நேரிழையே நீவந்து ஆற்றிடுவாய்
சற்று முன்கூட எமக்குச்
சகலதும் ஆக்கித்தந்தாய்
புத்தி கெட்டலை கின்றோம்
பெற்றவளே உனை யிழந்திங்கே
சக்தியுடன் கலந்தாயே சற்றுமுன்கூடச்
சாத்திரம் பேசினோமே வீணானதோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவெமக் கிருக்கென் றிருந்தோம்
அன்புகாட்ட அணைத் தெடுக்க
சும்மாவா சொன்னார்கள் எல்லாமே
அம்மாவால்தான் முடியும் என்று
ஆண்டொன்று கடந்ததுவோ இன்னும்
கண்கலங்கி யிங்கு வாழ்கின்றோம்
மீண்டெழுந்து வாராயோ மீள்நிரப்பு
செய்யாயோ நற்பதம்தா எம்கற்பகமே

**அப்பா, பிள்ளைகள்**

## *Ammammah*

It still only feels like yesterday since I sawyou. Time has flied without you. I cannot believe one year has passed without you. you are dearly missed in our house. Not a second passes by without us thinking about you. You are such an inspiration to us all. Although you have left this world you will never leave our heart. There are very few people who are as kind and giving who care so deeply. you always have a welcoming smile. your life was a blessing, your memory a tressure. words cannot fully show how loved you really are. We are blessed to be connected to your presence have only met you twice, but that is enogh for me to see your kindness and genorosiry. I can still remember your idiyappam and sambal too. How I wish for you to make it again for us. Eventhough you are not at here with us now, people still talk about your delicious food. May was the happiest month of the year due to my Birthday. But now after 2019 A Golden heart stopped beating. Hard working hands finally came to rest and God broke my heart. I know you will be worried about us from up there Ammammah. But we all promise that you rest yoursef will try to keep ourselves good. We will all look after thaththa for you.

***Grand sons Daughter***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளமுடன் வாழ்வோம்

உலகில் வாழும் மனிதர்கள் எல்லோரும் தாம் இன்பமாக வாழவேண்டும், நோயின்றி வாழ வேண்டும், நீண்டகாலம் வாழவேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். அப்படி வாழ்வதற்கேற்ற வகையில் தமது உடலை, உயிரை, மனதைப் பேணிப் பாதுகாக்கிறார்களா என்றால் இல்லை என்றே கூற வேண்டும். இயற்கை 120 ஆண்டுகள் ஆரோக்கியமாக வாழ்வதற்கேற்ற வாழ்க்கைக் காலத்தை மனிதனுக்கு வழங்கியுள்ளது. ஆனால் மனிதனோ தான் வந்த நோக்கத்தை மறந்து இயற்கைக்கு முரணாக வாழ்ந்து உடல்நலம், உயிர்வளம். மனவளம் கெடுத்து நோய்வாய்ப்பட்டு துன்பத்திலே உழன்று இடையிலே இறந்தும்விடுகிறான்.

இதனையே கடுவளிச்சித்தர் மிக அழகாக
"நந்தவனத்தில் ஒரு ஆண்டி - அவன்
நாலாறுமாதமாய்க் குயவனை - வேண்டி
கொண்டுவந்தான் ஒரு தோண்டி - மெத்தக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி"

என குறிப்பிடுகிறார். இந்தப் பிரபஞ்சம் எனும் நந்தவனத்திலே ஒரு ஆன்மா பத்துமாதங்கள் இறைவனை வேண்டித்தன் பாவப்பதிவுகளை யெல்லாம் போக்கி இறை நிலை எய்தவேண்டுமென ஒரு உடம்பை எடுத்துத் தன் ஐம்புலன்கள் வழியே அலைந்து கூத்தாடிக் கூத்தாடி வந்த நோக்கத்தையே போட்டுடைத்தான் என்கிறார்.

இயற்கையுடன் ஒத்தும் உதவியும் வையத்தில் வாழ்வாங்குவாழ முயலாது மாயையிலே சிக்குண்டு அல்லற்பட்ட மனிதகுலத்திற்கு நல்வழிகாட்டி உய்ய வைப்பதற்கென்றே சென்னையிலே கூடுவாஞ்சேரிக் கிராமத்திலே 1911ம் ஆண்டு ஆகஸ்ட் 14ம் நாள் ஒரு விடிவெள்ளி தோன்றியது.

அந்த விடிவெள்ளிதான் எம்மை ஆட்கொண்ட குரு அருட்தந்தை யோகிராஜ் வேதாத்திரி மகரிஷி அவர்கள். மனித அவலங்களுக்கான காரணத்தை அவர் புறத்தே தேடினார். பின் அகத்தே தேடினார் இருள்படிந்திருந்த மனித வாழ்வை ஒளிமயமாக்கும் வழியை நீண்டகால அர்ப்பணிப்புடனான ஆய்வினால் கண்டறிந்தார். மனது இதமான மாந்தரை உருவாக்கவல்ல மனவளக்கலை எனும் அற்புதமான பொக்கிஷத்தை எமக்களித்தார். பாமரமக்களும் விளங்கத்தக்கதாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளிய சாதனை மற்றும் போதனை முறைகள் அமைந்ததால் அவர்களை பாமரமக்களின் தத்துவஞானி என்றழைத்தனர்.

உடல் நலத்திற்கு உடற்பயிற்சிகள், உயிர்நலத்திற்கு சித்தர்கள் பாரம்பரியத்தில் வந்த எளியமுறை காயகல்பப்பயிற்சி, மனநலத்திற்கு எளியமுறை தியானப்பயிற்சி அகத்தாய்வுப் பயிற்சிகள், அறிவுநலத்திற்கு இறைதத்துவம் மற்றும் இறைநீதி விளக்கம் ஆகியன உள்ளடங்கிய ஒரு முழுமையான கல்வியே மனவளக்கலை யோகா ஆகும்.

உயிர் உய்யவேண்டும். அறிவுக்கு முழுமைப்பேறு கிட்டவேண்டும், வீடுபேறு வேண்டும். இதை ஒரு பயணமாகக் கருதினால் அப்பயணத்திற்கு உடல்தானே வாகனம். இந்த வாகனத்தைப் பேணிப்பாதுகாத்தால்தான் ஆன்மீகப் பயணத்தை வெற்றியோடு முடிக்கமுடியும் எனவேதான் திருமூலர்.

“உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திறம்பட மெஞ்ஞானம் தேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளரத்தேன் உயிர்வளர்த்தேனே!
எனப் பாடியுள்ளார்.

மனஉணர்வை விரிந்த அளவில் வளர்த்து அறிவில் உயர்வுபெற்று, உயிரின் மதிப்பும் சிறப்பும் உணர்ந்து நிறைவான வாழ்வைப் பெறுவதற்கு உடலை நலமோடும் வளமோடும் வைத்துக்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

பஞ்சபூதங்கள் தக்க விகிதாசாரத்தில் ஒன்றோடொன்று இணைந்து உருவாக்கப்பட்ட கலவையே மனித உடல், இதனையே “நிலம், நீர், தீ, வளி, விசும்பொடு ஐந்தும் கலந்த மயக்கம்” என்று தொல்காப்பியர் கூறுகிறார்.

கோடிக்கணக்கான செல்களால் அடுக்கப்பட்ட பருஉடல் அதற்கு ஊடே ஓடிக்கொண்டிருக்கும் இரத்தஓட்டம், நரம்புகளின் மூலமாக நமது உடலின் மின்சக்தி வெப்பமாகி இயங்கி வரும் வெப்ப ஓட்டம், உடலிலே உருவாகும். கரியமிலவாயுவை வெளியேற்றி பிராணவாயுக் கொண்டு சேர்க்கும் காற்றோட்டம், உயிராக இயங்குகின்ற விண்துகள்களின் சுற்றோட்டம் இந்த ஐந்தும் சரியாக இயங்கும்போது உடல் நலமுடன் சீராக இயங்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலுக்கும் உயிருக்கும் இடையே இணக்கமான உறவு இருக்க வேண்டுமாயின் அவை இரண்டுக்குமிடையே காற்றோட்டம், வெப்பஓட்டம், இரத்தஓட்டம் மூன்றும் சீராக ஒத்து இயங்கவேண்டும். அவற்றில் ஒன்றேனும் குறைந்தாலோ, மிகுதியானாலோ முறையே வாதம், பித்தம், சிலேத்துமம் என்ற நோய்கள் உண்டாகும். இதனையே வள்ளுவர்

"மிகினும் குறையினும் நோய் செய்யும்நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று"

என்கிறார்

அருட்தந்தை யோகிராஜ் வேதாத்திரி மகரிஷி அவர்கள் தற்கால மனிதகுலத்திற்கு தேவையான ஒரு புதிய உடற்பயிற்சித் தொடரை வடிவமைத்துத் தந்துள்ளார். உலகெங்கும் உள்ள உடற்பயிற்சிகளில் சிறப்பானவற்றைத் தேர்ந்தெடுத்து, மருத்துவத்துறையில் தமக்குள்ள அனுபவங்களைக் கொண்டு ஆராய்ந்து, பலகாலம் பயிற்சி செய்து பலன்களைக் கணித்து எளியமுறை உடற்பயிற்சியை அளித்துள்ளார்கள், உடலுறுப்புகள் எதனையும் வருத்தாமலும் அதிகநேரம் எடுத்துக்கொள்ளாமலும் பயிற்சிகளைச் செய்து பலன்பெற ஏதுவாக மகரிஷி அவர்களின் எளியமுறை உடற்பயிற்சி அமைந்துள்ளது.

உடற்பயிற்சியில் இரண்டு கட்டங்கள் உண்டு அவை. இருக்கை, இயக்கம் ஆகும். இருக்கையையும் இயக்கத்தையும் மாற்றி அமைத்து இரத்த ஓட்டம் வெப்ப ஓட்டம், காற்றோட்டம் ஆகியவற்றை முறைப்படுத்தலாம், உடற்பயிற்சியை முறைப்படி தினந்தோறும் செய்துவருவோமானால் ஓட்டங்களின் வேகத்திலும், அளவிலும், இடத்திலும் ஒரு சமச்சீரை ஏற்படுத்தும் இதனால் உடலநலம் ஒரேமாதிரியாக ஒழுங்காக இருக்கும், நோய் எதிர்ப்பாற்றல் அதிகரித்து நோய்களும் கட்டுப்படும்.

அருட்தந்தை எமக்களித்த உடற்பயிற்சியைச் செய்வதால் உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் வரையில் உள்ள அனைத்து உறுப்புக்களும் நலம்பெறுகின்றன. நாளமில்லா சுரப்பிகளின் இயக்கம் சீரடைவதால் உடல்நலத்தோடு மனவளமும் உயர்வடைகிறது. நோய்கள் படிப்படியாக விலகுகின்றன. கடுமையான நோய்களைக்கூட தீவிரம் அடையாமல் தடுத்துக்கொள்ள உதவுகிறது.

இந்த உடற்பயிற்சி எல்லா பருவநிலைக்கும் ஏற்றவை. உடலை வருத்தாமல் குறைந்த நேரத்தில் செய்து முடிக்கக் கூடியவை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டுவயதுக்குமேல் 80 வயதுக்கு உட்பட்ட ஆண்களும் பெண்களும்கூட தொடங்கிச் செய்யலாம். சிறுவர்கள் இந்தப்பயிற்சியைச் செய்வதால் படிப்பில் கவனம் செலுத்தமுடிகிறது. நினைவாற்றல் பெருகுகிறது. உடல் சுறுசுறுப்பாக இருக்கும்.

நாம் முன்பின் செய்த தவறுகள் காரணமாக உடல் அணுஅடுக்கு சீர்குலைந்து அதன் மூலமாக சீர்குலைந்த இடத்தில் மின்குறுக்கு ஏற்பட்டு மனத்திலும் உடலிலும் நோய் தோன்றி அது பரவிப் பின்னர் நிலைத்தும் இருக்கின்றன. அவையே வினைப்பதிவுகளாகும். வினைப்பதிவுகள் தனக்குமட்டுமின்றி விந்தின் வழியாகக் குழந்தைகளையும் பாதிக்கும் இந்த பழிச்செயல் பதிவுகளிலிருந்தும் அதனால் விளையும் துன்பங்களிலிருந்தும் நீங்கி விடுதலைபெற்றுத் தூயவர்களாக உடலாலும் உள்ளத்தாலும் நன்மக்களாக வாழவேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு எளிய முறை உடற்பயிற்சி வகுக்கப்பட்டுள்ளது.

எளியமுறை உடற்பயிற்சியை ஒழுங்காக 30 நிமிடங்கள் தினமும் செய்யும் ஒருவர் எட்டுமணிநேர வேலையை ஆறேமணிநேரத்தில் செய்து முடிக்கும் திறமையைப் பெற்றுவிடுகிறார். முறையாக இந்த உடற்பயிற்சியைச் செய்கிறவர்கள் அவர்கள் வாழும்காலம் வரை நிறைவான பூரண உடல் நலத்தோடு வாழலாம். சிறுவயதிலிருந்தே இந்த உடற்பயிற்சியைச் செய்துவந்தால் நோய் எதிர்ப்பாற்றல் அதிகரிக்கும். எந்த நோயைக் கண்டும் அஞ்சவேண்டியதில்லை. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

இந்த எளியமுறை உடற்பயிற்சி விஞ்ஞானிகளும் மெஞ்ஞானிகளும் பாராட்டும் வகையில் அமைந்துள்ளது. ஆன்மீக உயர்விற்கு உறுதுணையாக அமைந்துள்ளது.

எனவே எட்டுவயதிற்கு மேற்பட்ட எல்லா மனிதர்களும் பாடசாலைகள் தோறும், தொழில் நிறுவனங்கள் தோறும், கிராமங்கள்தோறும் அருட்தந்தை வடிவமைத்து எமக்களித்த எளியமுறை உடற்பயிற்சியை மனவளக்கலை ஆசிரியர்கள் மூலமாக பயின்று பயிற்சிசெய்து உடல்நலம் காத்து மனவளம் பேணி உயர்வுடன் வாழ வாழ்த்துகிறேன்.

**திருமதி. அ. வேதநாயகம்**
ஒய்வுநிலை வலயக்கல்விப்பணிப்பாளர்
மனவளக்கலை யோகா துணைப்பேராசிரியர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கையைப் பேணுவோம்

இயற்கை அன்னை தந்தவை எல்லாம் எல்லோர்க்கும் சொந்தம். எனது உனது எனப் பங்குபோட இயலாது, கூடாது. அவற்றைப் பேணிக்காக்க வேண்டியது ஒவ்வொருவருடைய கடமையுமாகும். இயற்கையைப் பாதுகாக்க முனையாதவர்கள், முடியாதவர்களும்தான் இயற்கையைச் சொந்தம் கொண்டாட முனைகின்றனர். சுற்றுச் சூழல் பாதுகாப்பதற்காக உலக மக்களனைவரும் ஒன்றுபடவேண்டிய சமயம் இது. ஏனெனில் ஒவ்வொரு உயிர்களும் உயிர்வாழ இயற்கை சுத்தமாயிருக்க வேண்டும். சுகாதாரமாக இருக்க வேண்டும். தூய்மையாயிருக்க வேண்டும். இன்றைய சூழலிலே எல்லாவற்றிலும் மாசு, கலப்படம் போலிதான். அழகிய இலங்கை அமைந்திருக்கிற இடம் கேந்திர முக்கியம் வாய்ந்ததாகையால் எல்லா வளர்ந்த நாடுகளுக்கும் இலங்கையைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும் என்ற ஆசை மிகவுண்டு. இலங்கையைப்போல எனது நாட்டையும் ஆக்கிக் காட்டுவேன் என்று கூறியது மட்டுமல்லாமல் 40 வருடகாலங்களுக்குள் சிங்கப்பூரை ஆக்கிக் காட்டிய சிங்கப்பூர் அரசும். இன்னமும் 50 வருடகாலத்தில் இலங்கை அதிலும் குறிப்பாக யாழ்குடா பாலைவனமாக மாறிவிடும் எனக் கூறிய ஐப்பானிய ஆய்வாளர் எந்த அடிப்படையில் கூறினாரோ தெரியவில்லை ஆனால் குடிநீரைப் போத்தல்களிலடைத்து காசு கொடுத்து வாங்கிக் குடிக்க வேண்டிய காலத்தை நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். ஆயினும் இப்பிரதேசத்தில் வாழ்ந்த ரிஷி, முனிவர்கள், ஞானிகள் சமூக நேயமுள்ளவர்களின் நல்எண்ண அலைகளுக்குள் நாம் வாழ்ந்து கொண்டிருப்பதால் இவ்வாறான ஒரு நிலை ஏற்படாது என்பது ஆன்மீகமான நம்பிக்கை. இருப்பினும் ஆய்வாளர்களின் முடிவுகளும் கவனிக்காமல் விடக்கூடியவை அல்ல. பாலைவனமாகப் போகின்றது. என்ற அவருடைய கூற்றுக்குச் சான்றாகக் கடும்வரட்சியும், நீர் மாசடைதலும் நிலத்தடி நீர் வற்றிக்கொண்டு போவதும் ஆழமாழமாக நீருக்காக குளாய்க்கிணறுகள் தோண்டுவதும். குடிநீர் உப்பு நீராக மாறிவருவதும். நாம் அனுபவித்து வருபவையாகும். நிலம் நீர், காற்று, வான் தீ போன்ற பஞ்ச பூதங்களுள் பூமி மட்டும் தாயாகி எல்லாவற்றையும் தாங்கி நிக்கின்றது. எவையெவை எனவும் எவ்வளவுக் கெவ்வளவுமெனக் கணக்கிடமுடியாத அரிய பொக்கிசங்களைத் தன்னகத்தே கொண்டிருகின்றது. எடுக்க எடுக்கக் குறையாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளங்களைக் கொண்டிருக்கிறது. ஆயினும் அவையனைத்திலும் நீரே முக்கியம் பெறுகின்றது எனலாம். அதிலும் அருந்தக்கூடிய நன்னீர் அதி சிறப்புவாய்ந்தாகும். உலகைச்சூழவுள்ள 2/3 பங்கு நீரும் கடல் நீராகஉப்புநீராக இருக்க சூரிய வெப்பம் அதை ஆவியாக்கி எடுத்துச் சென்று குளிரவைத்து மழைநீராக அருந்தக் கூடியதான சுத்தமான நீராக இயற்கை தர, அதன் ஒருபகுதி மட்டும் பூமியுள் காணப்படுகின்ற பொக்கணைகள் இடுக்குகளுக்குள் நிலத்தடி நீரெனச் சேமிக்கப்பட மிகுதி போதிய சேமிப்பு முயற்சிகள் எடுக்கப்படாமையால் மீண்டும் கடலுள் போய்ச் சேரவிட்டுட்டுப் போத்தல் நீரைக் குடித்துவரும் மனித இனம் என்பதை அறியவிட்டது. பூமித்தாயின் சிற்சில பகுதிகளில் சில பல பொக்கிஷங்கள் புதையுண்டிருக்கின்றன. அரேபிய நாட்டின் எண்ணைக்கிணறுகளும் ஆபிரிக்காவின் தங்கச் சுரங்கமும் சில உதாரணங்களாகும் இவற்றுக்காகவே வல்லாதிக்க நாடுகள் இப்படிப்பட்ட நாடுகளில் ஆதிக்கம் செலுத்த முயல்கின்றன அல்லது உள்நாட்டுப்போர்களை உண்டாக்கி விடுகின்றது. 25-30 வருடங்களுக்கு முன் ஒரு பாதிரியும் ஊடகவியலாளருமான ஜெகத்கஸ்பர் என்பவர் "இனி உலகப்போர் வருமானால் அது தண்ணீருக்கான உலகப்போராய்த்தான் இருக்குமெனக்" கூறினார் அவ்வாறில்லா விட்டாலும் எமது விடுதலைப்போரின் இறுதிக்கட்டபோர் மாவிலாற்று நீர் பங்கீட்டிலிருந்துதான் ஆரம்பமாகியதாக நாம் கண்டுகொண்டோம். அவ்வாறுதான் கருத்துருவாக்கிகளின் கணிப்புக்கள் யதார்த்தமாயும் நிதர்சனமாயுமாகியிருக்கின்றன. பெரும் செலவுசெய்து இயந்திரங்கள் மூலம் நன்னீராக்கும் முயற்சிகள் செய்துவருகிறோம். பணம் கொடுத்துப் போத்தல் நீரை வாங்கிக் குடித்து வருகிறோம்.

அவ்வாறான இயற்கை தன்னுள் அல்லது தன்னுடன் வைத்திருக்கும் நீரெனும் பொக்கிசம் அதீதமான சிறப்பும் முக்கியமும் பெறுகின்றது. எல்லோரும் தெரிந்து வைத்திருப்பதுபோல உலகில் காணப்படும் நீரில் 2/3 பங்குக்குமேலானது உப்பு நீராகவே உள்ளது கடல், ஏரி சமுத்திரம் என்ற மையங்களில் நிலைகொண்டுள்ளன. மிகுதி 1/3 பங்கு நீரில் 0.01வீதமான நீரே குடிநீராகின்றது மிகுதி சேற்றுநீர் சவர் நீராகியுள்ளன. குடிநீராக அருந்தமுடியாத நிலையிலுள்ளன. இவற்றிலிருந்து குடிநீரின் முக்கியத்தை நாம் உணர்ந்து கொள்ளமுடியும். அவ்வகையில் அருமையானதும் சிறப்புப் பொருந்திய நீரின் பெரும் பகுதி பூமியில் காணப்படும் பொக்கணைகளுள் சேமித்து வைத்துப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருவகாலத்திலும் வரண்ட காலங்களினதும், மனித விலங்குகள் பறவைகளுக்கான குடி நீர்த்தேவையைப் பூர்த்திசெய்கின்றது. ஆதலால் நன்னீர் கிடைக்கும் காலங்களில் வரட்சிக் காலங்களின் தேவைகளுக்காகச் சேமித்து வைத்தல் அவசியமாகும்.

நல்ல குடிநீர் ஒவ்வொரு உயிர்களினதும் வாழ்வாதாரத்திற்கான அடிப்படைத்தேவையாகும், அதைப் பெற்றுக் கொள்வது ஒவ்வொருவரது அடிப்படை உரிமையுமாகும். இங்கே இயற்கை அன்னை தந்ததெல்லாம் எல்லோர்க்கும் சொந்தமென்ற கருத்து வலியுறுத்தப்பட்டாலும் வலியவன் பெற்றுக்கொள்வதே யதார்த்தமாகி வலியவன் வாழ்வான் என்ற கூர்ப்பு விதி நிருபணமாகின்றது. துலாவும் பட்டையும் கொண்டு அள்ளிக் குடித்த தண்ணீர், பின்னர் மின் வலுவால் இயந்திரங்களின் உதவியுடன் பாய்ச்சப்பட்டு ஆழ்துளையாய் கிணறுகளிலிருந்து பெறும் அளவிற்குப் பூமியின் நிலத்தடிநீரின் மட்டம் குறைந்து கொண்டு போய்விட்டது. அதனாலும் பல்வேறு சௌகரியங்களாலும் எல்லாவற்றையும் பணத்துக்கு வாங்கிவிட முடியும் என்ற சிந்தனை வளர்ந்து வருவதாலும் குடிநீர் போத்தல்களில் அடைக்கப்பட்டு விற்பனைக்கு வந்துள்ளது. கவர்ச்சிகரமான விளம்பரப் போட்டிகளுள் போட்டி நீர் வியாபாரமும் நடைபெறுகின்றது. காசுகொடுத்து வாங்கி அருந்தும் நீர் எவ்வளவு தூய்மையானது என்று எந்தப்பாவனையாளனும் சீர்தூக்கிப் பார்ப்பதுமில்லை. நாகரிகமானதுமாக மாறிவிட்டது.

குளம், ஏரி ஆறுகளிலிருந்து பெறப்படுகின்ற நீரானது இரசாயனச் சுத்திகரிப்புக்கு உட்படுத்தப்பட்டு பெரியபெரிய அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சாலைகளிலிருந்து சந்தைக்குவிடப்பட்டாலும், அவைகளின் தூ ய்மைத்தன்மை கேள்விக்குரியதே. சுத்திகரிப்புக்காகப் பாவிக்கப்படட இரசாயன மீதி, அடைக்கப்பட்ட போத்தல்களின் பிளாஸ்ரிக்கின் தன்மை, பிளாஸ்ரிக்குக்களுடன் இரசாயனம் ஏற்படுத்தும் தாக்கம், திறந்தவுடனே பாவித்திட வேண்டும் என்னும் அறிவித்தல்கள். வெப்பமான இடத்தில் சேமித்து வைக்கவேண்டாம் என்பதான அறிவித்தல்கள், இவற்றின் தூய்மை இன்மை தன்மையை விளங்கிக்கொண்டே விடப்படுகின்றன. ஆயினும் விற்பனை நிலையங்களில் இவை பின்பற்றப்படுகின்றனவா என்பது பெரும் நடைமுறைச் சிக்கலான விடயம். பாவனையாளன் இது ஒன்றும் அறிந்திராமல், அல்லது அறியும் அறிவில்லாமல் அல்லது அடைத்து வரும் பொருட்கள் தூய்மையாயிருக்கும் என்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கையில் வாங்கிப்பாவிக்கும் போது நோய் பரப்பும் கிருமிகளுடன், வேதியல் பொருட்களையும் குடலுக்குள் அனுப்புகின்றான் இந்த வேதியல் பொருட்கள் உடலில் உண்டாக்கும் தாக்கங்களினால் தான் புதிபுதிய, கண்டுபிடிக்கமுடியாத மாற்றமுடியாத வியாதிகள் அதிகரித்துவருகின்றன. இரத்தப் பரிசோதனை சலப்பரிசோதனை Scan, X கதிர்களென உள்உடல்க்கூறுகளின் பரிசோதனை ஆக்கபூர்வமான பெறுபேறுகளைக் காட்டினாலும் ஒவ்வொரு மனிதனும் ஆரோக்கிய மற்ற வாழ்வே வாழ்ந்து கொண்டிருக்கிறான்.

"ஒருதுளி மழை நீரையும் கடலுள் செல்லவிடேன்" என்று மகா பராக்கிரமபாகு என்ற மன்னன் அணைகள் அமைத்துப் பெரிய நீர்த்தேக்கங்களை ஆக்கி அதிலிருந்து விவசாயமும் மின்சாரமும் பெற்று நாட்டை வளப்படுத்தினான். அவனுடைய காலத்தில் நம்நாடு பொருளாதார வலுக்கொண்டிருந்தது சுயஉற்பத்தி இல்லாத நாடு, வளமான நாடாகாது. என்றொரு சொற்தொடருண்டு. தனக்குத் தேவையான உணவைத் தானே உற்பத்தி செய்து உண்ணாமல் எதையும் காசு கொடுத்து வாங்கிடலாம் என்ற எண்ணம் மேலோங்க, மனிதன் காசுதேடிப் பறக்கத் தொடங்கிவிட்டான். வீட்டுத்தோட்டத்துப் பாவற்காய் கசப்பதில்லை என்றொரு வாய்க்கியத் தொடர் நீ வளர்த்து உண்டால் சுவைக்கும் என்பதேயொழிய பாவற்காய் பண்பை இழக்கவில்லை என்பதை அறியவேண்டும்.

உயிரினங்கள் அனைத்தினது தேவைகளைப் பூர்த்தி செய்து தருவது மழையேயாகும். இந்த மழைநீர்தான் மிகவும் தூய்மையானதாக இருக்கும், ஆயினும் தொழில்வளர் நாடுகள் தமது தொழிற்சாலைக் கழிவுகளை இறந்த மிருகங்களின் அழுகிய உடல்களையும், மனிதக் கழிவுகளையும், பொலித்தீன் வெற்று ரின் போன்றவற்றையும், அண்மைக்காலங்களில் அதிவேகமாக உற்பத்தி செய்யப்படுகின்ற அணு உலைகளின் அணுக்கழிவுகளைக்கூட நீரில் கலந்து விடுவதால் நீர்மாசடையத் தொடங்கிவிட்டது. இவ்வகை மாசடைந்த நீரே இரசாயனச் சுத்திகரிப்புக்கு உட்படுத்தப்பட்டு போத்தல்களில் அடைக்கப்பட்டு குடிநீராக விற்பனை செய்யப்படுகின்றது. இவ்வாறு கொட்டப்படும் அல்லது புதைக்கப்படும் அணுஉலைக்கழிவுகளால் இயற்கைச் சமநிலை சீரழிக்கப்பட அவ்வப்போது பல இயற்கை அனர்த்தங்கள் உலகளாவியரீதியிலும் நம்நாட்டிலும் ஏற்படுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான பெரும் தொழிற்சாலைகளிலிருந்து வெளிவிடப்படும் புகையானது கரித்துகள்களுடன் காற்றில் கலந்து காற்றை மாசடையச் செய்கிறது சுவாசத்துக்கான உயர்வாயுவைப் பெற்றுக்கொள்வதில் மிகவும் சிரமமாயிருக்கிறது. உயிர்வாயு இல்லாமல்போய் உயிர்கள் இறந்தழிந்து, ஓசோன்படலத்தில் துவாரமிட, சூரிய வெளிஊதா உள்வயலற் என கதிர்களாக நேரடியாகவே பூமியைத்தாக்க அதனாலும் இயற்கை அனர்த்தங்கள் நிகழ்கின்றன.

மலையில் பெய்யும் மழை, அருவியாகி ஆறாகிக்கண்மாய், குளம் குட்டைகளை நிரப்பிய போதிலும் பெரு அளவிலான மழைநீர் கடலினுள் கலந்து வீணாகிப்போகின்றது. பெரிய அணைகள்கட்டி இவற்றைத் தேக்கி விவசாய நடவடிக்கைகளை விரைவுபடுத்த வேண்டும். நிலத்தடி நீரின் அளவைக் கூடிய அளவு சேகரித்து குடிநீர் உப்பு நீராக மாறுவதைத்தடுத்தல் வேண்டும். அதிகமதிகமாக மழைபெறுவதற்கு அதிகளவான காடுகளை வளர்க்கவேண்டும். அவை மழை நீரைத்தருவதோடல்லாமல் வளிமண்டலத்துள்ள $CO_2$ வாயுவையும் வடிகட்டி வளிக்கு $O_2$வை அதிக அளவில் கலந்து வளி தூய்மைப்படுத்துவதில் இரட்டைக் குழல் துப்பாக்கிபோலச் செயல்படுகின்றன. விறகு நிழல், பழங்கள், பறவைகளின் தங்கிடமெனப் பலவகைகளில் உதவினாலும், மழைவீழ்ச்சிக்கும், காற்றைத் தூய்மைப்படுத்துவதிலும் பெரும் பங்காற்றுவதால் அதிகமதிகமாக் காடுகள் வளர்ப்போம். குடியிருப்பு, விவசாய விரிவாக்கம் வீதி அமைத்தல் போன்ற அத்தியாவசிய தேவைகளுக்குக் காடுகள் வெட்டப்பட்டாலும், மின்சார விநியோகத்துக்காக வெட்டப்படும் காடுகளே அதிகம். ஆதலால் மின் வழங்கலுக்கு மாற்று வழிகளைக் கண்டறிந்து நடை முறைப்படுத்தவேண்டும். அவை நிலத்தடி வழியாகவோ கடற்கரைவழியாகவோ அமைப்பதால் வளர்ந்துவருகின்ற மரங்களை வெட்டித்தறிப்பதிலிருந்து பாதுகாத்துக்கொள்ள முடியும்.

மேற்கூறியவகையில் இயற்கை தரும் செல்வமாகிய நீரைச் சிக்கனமாகப் பாவிக்கப் பழகவேண்டும். “தண்ணிபட்டபாடு” என்று சொல்வதுண்டு. இலவசமாக இயற்கை தருவதால் அதன் அருமைபெருமையறியாது, முன்பெல்லாம் தூலாபட்டையால் அளவாக நீரிறைத்து விவசாயம் செய்தவர்கள் மின்வலுவைப் பயன்படுத்துவதால் அதிகமாக நீரைப் பயன்படுத்துகின்றனர். ஆதனால் மின்வலுவைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்தி நீரிரைக்க வேண்டாம் என்பதல்ல, எந்நேரமும் பயிர்நிலங்களை நீர்த்தன்மையுடன் வைத்திருக்கக்கூடியவாறான (Sprinkler) பூத்தெழிப்புமுறையைக் கையாள்வதுடன் தரையில் ஈரலிப்பைப் பேணக்கூடியவாறு பசுந்தாள், பசளைகளையும் தேங்காய் மட்டைகளையும் புதைத்து வைப்பதுடன் வைக்கோல், சருகு போன்றவற்றை மேற்பரப்பில் பேணி புற்கள் முளைத்தலையும், நீர் நீராவியாகிச் செல்வதையும் தடுக்கும் முறைகளைப் பேணவேண்டும். இயற்கைப் பசளைகளை இடுவதால் அறுவடைகளுடன் சேர்ந்துவரும் இரசாயனப் பசளைக்களிவுகளிலிருந்தும் தவிர்க்கப்படலாம்.

தீ எதனையும் எரித்துத் தன்னைத் தூய்மைப் படுத்திக்கொள்ள அண்டம், ஆகாயம் தன்னைத்தானே மறுசீரமைத்துக்கொள்ள ஏனைய பூமி, நீர், காற்று என்பன பூமியிலுள்ள சீவராசிகளால்தான் பாதுகாக்கப்பட்டவேண்டும். ஓசோன் படலத்தில் வீழந்து வளர்ந்து வந்த துவாரம் அடைபட்டுவருகிறதென்பதே பிந்திய மகிழ்வுதரும் செய்தியாயின் மனிதமுயற்சியால் காடுகள் வளர்த்ததால் ஏற்பட்ட மாற்றமல்ல இக்காலப்பகுதியில்தான் இத்தாலியின் அமேசன் காடும் அவுஸ்திரேலியக் காடுகளும் சுயலாபம் கருதிய கம்பனிகளால் தீமூட்டி எரிக்கப்பட்டிருக்கலாம் என ஆய்வுகள் நடக்கின்றன. ஆதலால் ஓசோன் படலத்தில் விழுந்த துவாரத்தை இயற்கை தானாகவே மாற்றிக் கொண்டதென்பது நிருபணமாகிறது. தொடர்ந்து மனிதன் இயற்கை வளங்களை அசுத்தப்படுத்திக்கொண்டோ, அளவிற்கதிகமாக விரயப்படுத்திக் கொண்டோயிருப்பானாகில் இயற்கை அனர்த்தங்கள் ஏற்பட்டு பெரும் அழிவுகளைச் சந்திக்க வேண்டிவரும். ஆதலால் இயற்கை வளங்கள் எமக்கு இறைவன் தந்தவை அவற்றைப் பேணிப்பாதுகாப்போம்.

**திருமதி மதுமதி தீபன்திலீசன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆராய்ந்தெழு

எழுந்து வாருங்கள் எமதினிய மாணவர்களே
விழுந்து கிடந்தழ நீமுடமல்ல நீயோவீரக்
கொழுந்து, பற்றிப்பிடி, பசப்பிலிகளை முட்டிக்
கொழுத்து கண்மூடி வழக்கங்களை, தெழிவுபெறு

பழுத்துக் கிடக்கும் பழமரம் வௌவாலை
இழுத்தணைத் துத்தருகுது எடுத்துக்கொள். மனிதரிடை
புழுத்து நாறடிக்கும் வழமைகளை கண்மூடி
அழுத்திப் பற்றியங்கு உழல்வதை விட்டுவா

கொழுத்தும் வெயிலுக்கும் மயிர்க்கால் சில்லிட
அழுத்தம் தருகின்ற குளிர் பனிக்கும்
இழுத்துப் போர்த்தபடி படுத்தல் ஆகாதெழு
முழுத்துமறி - உண்மையுணர், சாதித்துவெல்

ஏனடா மாணவா நேரத்தை அழிக்கிறாய்
தேனடா இளநிலை, உண்மை உயர்த்திடப்
பாரடா இப்புவி வையத்துள் ஓங்குமாம்
ஆரடா வந்திதைச் செய்திடக் கூடும்? நீயடா.

நாராய் நின்று பூக்களை இணை
கூராய் எழுந்து கொலைவெறி தவிர்
சீராய் இருந்த சமூகமும் இனமும்
ஆராய்ந் தெழுந்து ஆக்கிடப் புறப்படு

கற்பதால் உன்நிலை உயரும் வீணே
நிற்பதால் யாருக் கென்னபயன் இங்கே
கற்பதால் உணர்ந்து தெளிவுபெற் றுயரும்
காலத்தை வென்றிடத் தொடர்ந்தும் கல்

படி, படியேறி மேலுயர் ந்தாலுமுன் கீழ்ப்
படி(வு)தானுனை மேலேற உதவியது ஆயின்
கீழ்ப்படி, படி முயன்று முன்னேறு வெல்ல
உலகம் உன்முன்னால் சென்று கொண்டிருக்கு

காலத்தை மதித்தால் ஞாலத்தில் கீர்த்தி
ஆலத்தை உண்ட அரனைச் சக்தி
காலமறிந்து காத்திரா விட்டால்
ஞாலமேது, நல்வாழ்வேது, தெளிந்து நட

**மயூரதன்**
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருங்காட்சியகம் ஒரு பார்வை

இது சங்கிலி மன்னனின் உருவச்சிலை, யாழ்ப்பாண நகரை கடைசிவரையும், கடைசியாகவும் ஆண்டமன்னன். போர்த்துக்கேசர் யாழ்ப்பாணத்தையும் ஆக்கிரமிக்கவிடாது போராடியவன். இது பண்டாரவன்னியன் சிலை. ஆங்கிலேயருடன் போர் போர்புரிந்து அன்னை நாட்டைக் காக்க வன்னியிலிருந்து போராடியவன் என நாவற்குழி அரும் காட்சியகத்துக்கு சுற்றுலா அழைத்து வந்த மாணவர்களுக்கு விளக்கமளித்துக் கெண்டிருந்தார் ஆசிரியர் தர்சன் கடைசிவரை போராடியபோதும் நம் இனத்திலுள்ள துரோகிகளால் காட்டிக் கொடுக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டவர்கள். ஆட்சியில் இருக்கும் காலத்தில் மொழியையும் , மக்களையும் அவரவர் மதத்தையும் காத்தவர்கள். காட்டிக் கொடுப்பவர்களும், காசுக்கு விலைபோபவர்களும், தியாகம் இல்லாது தலைமைக்கு ஆசைப்படுபவர்களாலும் அழிந்து போன வரலாறு எம்முடையது. இவர்கள் வரலாறுகளையும் மக்களையும் மொழியையும் பாதுகாக்கச் செய்த தியாகங்களையும் மாணவர்களே நீங்கள் அறிந்து கொள்ள வாய்ப்பாகவே இந்த அருங்காட்சியகம் இங்கு நிர்மாணிக்கபட்டுள்ளது என விளக்கிக் கொண்டு நின்றார். நமது இலக்கியங்கள் புராணங்கள் தொன்மைமிகு வாழ்க்கைமுறைகள் இளந்தலைமுறை யினருக்குக் கடத்தப்படாமையும் மக்கள் பொருண்மிய நோக்குக் கொண்டு பொருள்தேட அலைவதாலும், பாட்டியம்மாகூட இலத்திரனியல் சாதனங்களுடன் தங்கள் நேரத்தின் பெரும்பகுதியைச் செலவிடுவதாலும் எமது பாரம்பரியக் கலை வரலாறு சொல்லிக் கொடுபடவில்லை. இளையதலைமுறை இரண்டும் கெட்டான் தலைமுறையாக மாறிவருகின்றது. அவனோடு ஒத்தவர்கள் சொல்வதையே கேட்டு அவைதான் சரியெனக்கொண்டு வாழ்க்கைப் பாதையை வகுப்பதாலேயே இவ்வளவு அழிவும் சீர்குலையும், அராஜகமும் இந்த நாட்களில் பெருகி வருகின்றன.

இவ்வாறாக நூல்களும் தொன்மைமிகு சான்றுகளும் திட்டமிட்டு அழிக்கப்பட்டதால் அழுதுகொண்டும் அவநம்பிக்கையுடனும் வாழாமல் இப்போதுள்ளவற்றையாவது வைத்துக் கொண்டு எம்மைக் கட்டியெழுப்பவேண்டிய நேரமிது. இவ்வாறு நூல்களும் இருப்பின் சான்றுகளும் முற்றாக அழிக்க முடியாது. தனிநபர்களும் தன்னார்வத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டு நிறுவனங்களும் குட்டிக் குட்டிச் சிறிய அமைப்புகளும் பாதுகாத்து வைத்திருக்கின்றனர். இவையாவும் ஒன்றிணைக்கப்பட்டுக் காட்சிப்படுத்தப்படவேண்டும். தனித்தனியே வைத்திருப்பவர்களும் பெருமை உணர்ந்தே பாதுகாக்கின்றனர். ஆயினும் பெறுமதிகளும் முக்கியமும் அறியாதவர்கள் பழைய பொருட்கள் வாங்குபவரிடம் விற்கப் பெறுமதி அறிந்த அவர் சிலவற்றைப் பாதுகாத்தாலும் அநேகமானவற்றைச் சிறு லாபங்களுடன் விற்றுவிடுகிறார்கள். வாங்கிச் செல்பவர்கள் மெருகேற்றித் தங்கள் வரவேற்பறையில் காட்சிக்கு வைக்கிறார்கள். இவை தங்கள் பாரம்பரியங்கள் என்று கூறி சரித்திரத்தையே மாற்றி எழுதுகிறார்கள். மாற்றி எழுதிப் பேணப்படும் வரலாறு இனத்தின் இருப்பையே அழித்துவிடுகின்றது.

ஒரு இனத்தின் மொழியின் தொன்மைகளையம் வரலாற்றையும் அறியவேண்டுமாயின் அங்குள்ள அருங்காட்சியகத்துக்கே போகவேண்டும் என அறிஞர்களும் கருத்துருவாக்கிகளும் கூறுவது உண்மையேயாயினும் அவ்வாறான ஒரு நிலையம் இதுவரைநம்மத்தியில் இருக்கவில்லை யென்பதே கசப்பான உண்மை. காலத்தின் தேவையறிந்து இப்போது நாவற்குழியில் ஆறுதிருமுருகன் ஐயா அவர்களின் பெருமுயற்சியால் அமைந்துள்ளது. ஏனைய பிரதேசங்களில் இவ்வாறான சான்றுகள் அவ்வப் பிரதேச காலச்சார அமைப்புக்கள் பேணிப் பாதுகாத்துவர எப்போதும் எல்லாவற்றிற்கும் முரண்படும் எமது இனம்மட்டும் இதிலும் முரண்பேசுகிறது. தனிமனித விமர்சனங்கள் செய்கிறது. கவனிப்பின்றி விடப்பட்டிருந்த விசயம் ஒன்று கைகூடிவரும்போது ஒத்துப்போகவேண்டும் இல்லையேல் ஒதுங்கி வழிவிடவேண்டும். இன்னொரு பகுதியினரே தாம் சேமித்துப் பாதுகாப்பையே உயர்ந்தவை என எதிர்வாதிட்டுக் கொண்டு நிற்க உண்மை வரலாறு சென்றடைய வேண்டிய இளையதலைமுறை ஒன்றும் தெரியாமல் தடுமாறுகிறது. பொய்யான ஆதாரங்களுடன் கூறப்படும் வரலாறுகளையே உண்மையானவை என்று ஏற்கின்றது. எமது இனம் மட்டும் தானும் அறியாமல் அடுத்தபரம்பரைக்கும் கடத்தாமல் இவற்றை விற்று விடுகின்றனர். அல்லது தொன்மையையும் வரலாற்றையும் புரியாமல் பாதுகாக்காது விடுகின்றனர் அல்லது இதுபோன்று ஒன்றுபடுத்த முயல்வோருக்குத் தந்துதவ முன்வராமல் கறையானுக்கு உணவாகவும் துருப்பிடித்து அழிந்து போகவும் விடுகின்றனர். ஓர் இனத்தை அழிக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமாயின் கற்பதால் தொழில்வாய்ப்புப் பெறலாம். என்ற எண்ணத்தையும், கற்பதற்கான நூல்களையும் அழித்தும், வளங்களை அபகரித்தும் அடிமைப்படுத்தியும் அல்லது தூரதேசங்களை நாடி இடம்பெயர்வதற்கான வசதிகளையும் செய்து கொடுத்தாலே போதும் அமைதியான முறையில் இனத்தை அழித்துவிடமுடியும். போராடும் திறமையும் அதற்கான ஆற்றலும் முயற்சியும் உள்ளதாயிருந்தாலும் அந்த இனம் பணஆசையும் சௌகரிய வாழ்வுக்குமாய் போய் அங்கேயும் அடிமைப்பட்டு தாய்நிலத்தினும் அடிமையாக வாழ்வது கண்டாயினும், எங்களுக்கும் எப்போதாவது நல்வாழ்வுவரும், அப்போது இச்சான்றும் அரும்பொருள்களும் ஆதாரமாயிருக்கும் என்று எண்ணச் சௌகரியமாக மறந்துவிடுகின்றனர்.

எம்மவரிடையே அவ்வப்போது இவ்வாறான சிந்தனைகள் எழுந்தாலும் கூடிக்கதைத்தாலும் எல்லாம் கூட்டத்தில் கூடிநின்று கூவிப்பிதற்றல்களாகிவிட்டது. திருமணவிழா, அந்தியேட்டி விழாக்கதைகளாகிவிட்டது. சாப்பாடு கொடுக்க ஆரம்பித்து விட்டார்கள் என்பதறிந்ததும் எல்லாம் கூடி ஊளையிட்ட கதையாகிவிடுகின்றது. இன்னொரு வகையினரோ திட்டமிட்ட நிர்வாக அமைப்பும் தொடரான பாதுகாப்பும் இயக்கமும் இல்லாது தலைமைத்துவத்துக்காக ஒன்றிணைப்பதாகப் போக்குக்காட்டிப் பின் அழியவிடுவதால் தொன்மைப் பொருட்களுள்ளவர்கள் தங்களுடனேயே வைத்துப் பாதுகாக்கின்றனர். இவைக்கெல்லாம் முடிவுகாணும் வகையில் தூரநோக்கும், தொடர்அர்ப்பணிப்பும் கொண்டு செயல்ப்படும் எமது நாகரீகங்களைப் பாதுகாத்துவருகின்ற சிவபூமி அறக்கட்டளை நிதியத்தினர் 01-02-2020 அன்று நாவற்குழியில், யாழ்ப்பாண இராசதானியின் நுழைவாயிலில் திருவாசக அரண்மனைக்கு அருகில் ஒரு அருங்காட்சியகத்தை ஆரம்பித்துள்ளனர். இனியாவது தத்தம் வீடுகளிலுள்ள எம் இருப்பையும் நாகரீகத்தையும் வாழ்முறையையும் கூறும் அரும் பொருட்களை அவர்களிடம் ஒப்படைப்போமோ? பாதுகாக்க முயல்வோமா?

எமக்குத்தெரிந்த ஆகக்குறைந்த அறிவுடன் எம்மிடமுள்ள பொருட்களான பாக்குவெட்டி, கால்தட்டம், மூக்குப்பேணிவகை, குத்துவிளக்குவகை, லாம்பு, சிக்கனவிளக்கு, கைவிளக்கு, நாம் பாவித்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைப் பாடு மிகுந்த பெட்டகம், பத்தாயம் பனை ஓலைப்பட்டை, குட்டான், கௌசனக்கூடு, ஏர், கலப்பை, ஒற்றைத்திருக்கல், மாட்டுவண்டி, பழையகார்வகை, தட்டிவான் இன்னும்பல அம்மி, ஆட்டுக்கல், திரிகை மரமிதியடி, தகரவாழி, சுரைக்கூடு, கோழிக்கரப்பு என்பன போன்ற இன்னமுள்ள தொல்பொருட்களைப் பாதுகாக்க முயல்வோமா!

மறைவாக நின்ற பழங்கதைகள் பேசுவதில் பெருமையில்லை. சாஜகானின் தாஷ்மகால்களும் எகித்தின் பிரமிட்டுக்களும், மலேசியாவின் இரட்டைக்கோபுரங்களும் ஆங்கில நாட்டு அருங்காட்சியகமும் அமெரிக்காவின் விற்பனைச்சந்தைக் கட்டடித் தொகுதியும் பேசப்படுவ போல நாவற்குழி அருங்காட்சியகம் பேணப்படவேண்டியதுமட்டுமல்ல பெருந்திரளான மக்களுக்கு எமது நாகரீகம் பண்பாடு, வாழ்வு முறை நாகரீகம் இருப்பு என்பதைத் தெரியப்படுத்தித் தனித்துவத்தையும் எமதினம் எவ்வாறான ஆற்றல்களுடனும் அதிவிவேகத்தனத்துடன் வாழ்ந்ததென்பதை நிலைநிறுத்தவும் எமது இளம் சந்ததியினருக்குத் தெரியப்படுத்தவும், சகோதர இனமும் வெளிநாட்டவர்களும், வெளிநாடுகளில் வசிக்கும் எம்மவர்களுக்கும் தெரியப்படுத்துமாறு இவற்றைப் பேணுவோம். ஆரம்பித்த நாட்களில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் உலகத்தின் மூலைமுடுக்கெல்லாம் சென்றாலும் கூட, இவற்றை எவ்வெவ்வகையில் பிரயோகித்து வாழ்ந்து வந்துள்ளோம் என்பதையும் கூறிவைப்போம், இங்கே இயங்கும் அரசதினைக்களங்கள் அமைச்சுக்கள் அதிகாரிகள், சமயப் பெரியார்கள் கூட மத்திய அரசுக்குக் கட்டுப்பட்டுச் செயல்பட வேண்டியிருப்பதால் அவை முழுமையான தகவல் திரட்டுகளை ஒருபோதும் தரமாட்டாது. ஆயின் இங்குள்ள சமூகப்பொறுப்புள்ளவர்கள், அறச்சிந்தனையாளர்கள், வீரமிகு இளைஞர்கள், கருத்துருவாக்கிகள் ஆக்கபூர்வ சிந்தனையாளர்கள் அறிவுமிகுந்தோர் அனைவரையும் இணைத்து இவ் அருங்காட்சியகத்தை இப்போதுள்ள அளவில் திருப்திகாணாது விசாலிக்கவேண்டும். இறைவன் ஆறுதிருமுருகன் ஐயாவை நீண்டகாலம் ஆரோக்கியமாக வைத்திருக்க வேண்டும். நாமும் நாம்மாலானவற்றையெல்லாம் வழங்கி ஒன்றிணையவேண்டும்.

வழமையாகவே, எம்மிடம் ஒரு இயல்பு உண்டு. வளர்ந்தும் வருகிறது. எம்முடைய கடமைகளை யாராவது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்துவிடவேண்டுமென்பதே அதுவாகும். தூரதேசங்களிலிருந்து கூட்டம் கூட்டமாக மக்கள் சுயமாக வந்து இவற்றைப் பார்வையிட்டு அறிந்து செல்கையில், இங்குள்ள மக்கள், மாணவர்களும் அவ்வளவாக ஆர்வம் கொள்ளவில்லை. அப்பாவின் அப்பா, அவரின் அப்பா பெயரைக் கேட்டால் கூட கூற முடியாத வகையில்தான் எமது பிள்ளைகள் வளருகின்றனர். ஆர்வமில்லை, அக்கறை இன்மை. இதனை இவர்களிடம் பெற்றோர்தான் வளர்த்து விடவேண்டும். கூத்தும் கொண்டாட்டமும் என்றால் கூட்டத்தில் நின்று கூச்சல் போடுவதென்றால், கூடும் கூட்டம், எமது தொன்மை வரலாறுகளை அறிய முயல்கிறது இல்லை. போதிக்கப்படுவதும் இல்லை. பாடநூல்களிலிருந்தும் மெல்ல மெல்ல எடுத்துவிட்டார்கள். ஒரு இனம் வளரவேண்டுமாயின் அந்த இனம் ஆளவேண்டும் என்ற அறிஞரின் கூற்றுச் சரியாகி வருகிறது. நாமென்ன செய்கிறோம். குட்டிக்குட்டித் தலைவர்கள், அவர்களுக்கான குட்டிக் குட்டிக் கூட்டம், கொடி என்று திரிகிறோம். தான்கொண்ட கருத்துத்தான் சரியானதென வாதிடுவதற்கும் நிலை நிறுத்துவதற்குமாகப் பிரிந்து நிற்கிறோம். சமூக, இன வரலாற்றுச் சிந்தனையுள்ள தலைவர்கள் நம்மிடையே நிறைய இருந்தபோதிலும், நானுண்டு, என்குடும்பமுண்டு என்றளவில்தான் சீவிக்கிறார்கள். இந்த இழிநிலைமாற வேண்டும் கற்றோரெல்லாம் ஒன்றாகி எமது பாரம்பரியங்களையும் தொன்மைகளையும் அடுத்ததலை முறையினரிடம் சேரக்கவேண்டும். இணைவோமா?

விடுதலையடையவிரும்பும் இனம் தன் வரலாற்றை நன்கறிந்து இருக்க வேண்டும் அதற்கான பாடநூல்கள், நாவல்கள், சிறுகதை இலக்கியங்கள் துணிவுடன் வெளியிடவேண்டும். தெற்கே கடலும் வடக்கில் தமிழரும் வாழ்வதால் என்னால் கால்நீட்டிப் படுக்கமுடியவில்லையேயென்ற வரலாறு, இமயம் முதல் குமரிவரை கட்டியாண்ட எமது மூதாதையர் வரலாற்றை மழுங்கடித்துவிட்டது. நாமும் வழமைபோல எமக்கென்ன என்று விட்டுட்டு இருந்துவிட்டோம். பாட்டியம்மாக்கள், பேரப்பிள்ளைகளுடன் பேசுவதை விட்டு, கற்பனை - வாழ்வில் நடக்கவே முடியாத கவர்ச்சி நாடகங்களிலும் சாகசக் காட்சிகளிலும் மூழ்கிக்கிடக்கின்றனர். கற்றறிந்தோர் வழமைபோலவே அவர் செய்யட்டும், இவர் செய்யட்டும் நான் என்பாட்டை மட்டும் பார்த்தால் போதும் என்றெண்ணிவிட்டனர். கருத்துருவாக்கிகள்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பத்திரும்ப இது பற்றிப்பேசி களைத்துவிட்டனர். சாதாரணர் பணம் மட்டுமே வாழ்வெனக் கருதித் தேடி அலைகின்றனர். இந்த நிலை மாறி நவீன இலத்திரனியல் வாய்ப்புகளைப் பயன்படுத்தி எமது இதிகாச புராண கதைகளையும் வரலாறுகளையும் மாணவப்பருவத்திலிருந்தே வளர்த்துவிடவேண்டும். எமது உணவுமுறை, வைத்திய முறைமைகள் இப்போது முக்கியமாகப் பேசப்படுகின்றது. கொரோனா நோய்க்கிருமி வந்தபின் பழமை வைத்தியங்களுக்கும், வாழ்வுமுறைக்கும் உணவுப் பழக்கவழக்கங்களுக்கும் மாறி வர நாம் ஏன் எமது வழக்கங்களைப் பின்பற்ற வரலாறுகளை அறியத்தயங்குகிறோம் எங்கும் எதிலும் வியாபாரம். பணம் சேர்த்தல் பற்களிலுள்ள கறைகள் போக்க உப்பும்கரியும் இட்டுத் தேய்த்த நிலைமாறி, வீட்டுக்கு வீடு, பற்பசையும் தூரிகையும் அதிலும் பார்த்தால், உங்கள் பற்பசையில் உப்புஇருக்கா என விளம்பரம்வேறு எட எம்மிடமிருந்தைப் பிடுங்கி எங்களுக்கே வியாபாரம் செய்கிறார்கள் ஆலும் வேலும் கொண்டு பல்துலக்கியவர்கள் எல்லாம் சரியாகத்தானே இருந்தது. கொரோனா வந்தபின் வேம்புக்கும் மஞ்சளுக்கும் ஏற்பட்ட கிராக்கியிருக்கே நாம் நம்நாட்டுப் பெண்கள் தினம்தினம் மஞ்சள் பூசித்தானே குளிக்கிறர்கள். இப்படியேதான் எல்லாரும் எல்லாவற்றிலும் வியாபாரம் ஆயினும் இவற்றின் அடிமூலம் எங்கிருந்தது? எம்மிடமிருந்தது. எமது வரலாறு எமது வாழ்க்கைமுறை எல்லாம் எழுதி வைத்திருக்கிறார்கள். ஏன்படிக்கிறீர்கள் இல்லை. கடைப்பிடிக்கிறார்கள் இல்லை எல்லாம் திரும்புகிறது. "எப்பப்ப எனது தேவைகள் உணரப்படுகின்றனவோ அப்பப்ப நான் தோன்றிக்கொண்டே இருப்பேன்". என்றார் கீதையிலே கண்ணன் வரவேற்றுப் பயனடைய நாம் எம்மைத் தயார்ப்படுத்துவோம்.

*01-04-2020*

**க. மயில்வாகனம்**
**யாழ்ப்பாணம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றுக்கொள்வோம்

ஒரு இனம், மொழி, நாடு நாகரீகமடைய வேண்டுமாயின் அந்த இனமும் நாடும் நன்கு கற்றிருக்கவேண்டும். கல்வியில்லாமல் ஒழுக்கம் பண்பாடு பழக்க வழக்கங்கள், பாதுகாப்பு அனைத்தையும் தேடிக் கொள்ளமுடியாது. பாதுகாப்புக்கும் படையணிக்கும், படைக்கலங்களுக்கும் எனச் செலவிடும் பெரும்தொகை பணத்திலும் நேரத்திலும் பாதியளவுக்கும் குறைந்த பணத்தையும் நேரத்தையும் கல்வி வளர்ச்சிக்குச் செலுத்தினால்போதும். பாதுகாப்பு தானாகவே அமைந்துவிடும். அன்பும் அயலவனை நேசிக்கும் பண்பும், ஒழுக்கமும் பணிவும், கல்வியால் அடைவதால் ஏற்படுகின்ற பரிபூரண பக்குவநிலை தன்னை மட்டுமல்ல அயலவனையும் நாட்டையும் பாதுகாக்கும் பக்குவத்திறனை வளர்த்துவிடும். கருவிகளால் வயப்படும் நிரந்தரமற்ற அமைதியும் சமாதானத்தையும் விட கல்வியால் ஏற்படுகின்ற அமைதியும் சமாதானமுமே என்றும் நிலைத்திருக்கும். நீடிக்கும். கூர்மையான கல்வியையும் தெளிந்த புத்தியையும் பெற வேண்டுமாயின் தொடர்ந்து படித்துக் கொண்டேயிருக்கவேண்டும். வாசிப்பு ஒருவரின் அறிவை மட்டுமல்லாது நடத்தையிலும் ஏற்றத்தையும் மாற்றத்தையும் கொண்டு வரும். மனம் பண்பட்டிருக்கும் அறிவும் தெளிவும் ஓங்கியிருக்கும். சிந்தித்துச் சீர்தூக்கிப் பார்க்கும் திறன் அதிகரிக்கும். வாசிப்பதாலேயே தெளிவு பெறமுடியும் எனக்கருதியே முன்னைய காலங்களில் கிராமத்துக்கொரு வாசிகசாலையென உருவாக்கினார்கள். ஊரவர் ஒன்று கூடவும், பேசித்தீர்வுகாணும் இடமாகவும், செய்திகள் அறிந்து கொள்ளும் இடங்களாகவும் இவை பரிணமித்தன. இப்போதெல்லாம் திரைகளில் பார்க்கிற கலாசாரமும் பார்த்துவிட்டு மறந்து போகின்ற நிலமையாகத்தான் காணப்படுகின்றது. தனித்துத் தனித்திருந்து பார்த்துவிட்டுத் தனக்கு விளங்கியவாறு ஏற்றுக்கொண்டு அவ்வழி செல்வதே நெறியாகக் கொள்ளப்படுகிறது. பேசித் திறனாய்ந்து தீர்வு காணும் இயல்பு இல்லாமலே போய்விடுமளவிற்கு உலகம் உள்ளங்கை அளவுக்குச் சுருங்கிச் சுண்டுவிரலின் அசைவுக்கேற்ப இயங்குகிறது.

கல்வி இன்று பணத்தேடலுக்காய், பரீட்சை உயர்பெறு பேற்றுக்காய் ஆகிவிட்ட நிலையில் பரந்த தெளிவுள்ள அறிவுமயமாயில்லாமல் பரீட்சைக்கான, கேள்விகளுக்கும் அவற்றுக்கான பதில்களையும் கற்றுத்தருகிற, கற்கத்தூண்டுகிற கல்வி ஆகிவிட்டது. அனுபவபூர்வமான கல்வியை அறிவூட்டத்துடன் கற்றுத்தருகின்ற ஆசிரியர்கள் மிகக் குறைவு. கற்றுத்தருவதற்காகத் தான் கற்றுத்தெளிந்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்துக்குப் பொருத்தமான அறிவு, அவதானம், பயிற்சி செயலூட்டமாகக் கற்பிப்பவர்கள் இல்லையென்றே கூறலாம். அவதானத்துடனும் பயிற்சி செயன்முறைமூலமும் தெளிவடையும் மாணவர்களிடையே நல்ல நடத்தை மாற்றம் காணப்படும். கற்றல் ஒரு நடத்தை மாற்றமே. வகுப்பறைகளில் கற்றவற்றை வாழ்வியலில் நடைமுறைப்படுத்தி வெற்றிகாண்பதும் ஒழுக்க நெறிகளுக்குட்படுத்தாத கல்வியாலும் எவ்வித பிரயோசனமுமில்லை. இவ்வகை நடத்தை மாற்றங்களை ஏற்படுத்துவதில் ஆசிரியர்கள் வழிகாட்டிகளாக இருக்க வேண்டும். அவர்களது நடை, உடை பாவனை தற்துணிவாக முடிவெடுக்கும் ஆற்றல் பகட்டுகளுக்கு அடிமைப்படாத பண்புகள் மாணவர்களிடையே தொற்றிக்கொள்ள முன்மாதிரியாக ஆசிரியர்கள் மாறவேண்டும்.

பாடசாலை ஆசிரியர்களில் அநேகர் தனியார் கல்வி நிறுவனங்களில் கற்றுத்தருகின்றனர். பணத்தேடலுக்காகவே தனியார் கல்வி நிலையங்கள் இயங்குகின்றன. இங்கே சீரான பழக்கவழக்கங்களோ, சீர்மிகு ஒழுக்கங்களோ கற்றுத்தருவதில்லை. பணம் சேர்ப்பதில் சிறந்த நிர்வாகக் கட்டமைப்பும் ஒழுங்கும் நிலவுகின்றது. மாணவர் கற்றுக்கொள்கிறார்களா, ஒழுக்கமுள்ளவர்களாக வளர்கிறார்களா என துளியளவு அக்கறையுமின்றி, தான் படிப்பிக்க வேண்டிய பாடங்களைச் சொல்லித்தந்து விட்டு, அடுத்த தனியார் கல்வி நிலையங்களுக்கு விரைந்து செல்லும் ஆசிரியர்கள் கல்வியைப் பணம் பண்ணுவதற்காகப் பறக்க, மாணவனும் கல்வியைப் பணம்பண்ணப் படிக்கிறான் அல்லது படிப்பின்றி எப்படியாவது பணம் சேர்க்கும் வழிமுறைகளை நாடுகிறான். இளம் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு ஒரு முன்னுதாரணமாக ஒரு பின்பற்றப்படக்கூடிய தலைவராக இருக்கவேண்டும். அவர்களிடையே முரண்பாடுகள், காமம் வெகுளி நீங்க வேண்டும். குரோத மனப்பாங்கு அகல வேண்டும். ஆடைகளிலும், அணிகலன்களிலும் தூய்மையும் விழுமியங்களும் பேணப்படவேண்டும். பாடசாலை நிகழ்வுகளிலும் ஏன் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அவர்கள் கவர்ச்சிகரமான ஆடைகளைத்தவிர்த்துக் கலாசார ஆடைகளையே அணிய வேண்டும். பழக்க வழக்கங்களும் ஒழுக்கமும் சொல்லித்தருவதைவிடச் செய்துகாட்டிப் பின்பற்றப்பட வைக்கவேண்டும்.

தனியார் கல்வி நிலையங்களை மாணவர்கள் விரும்பினால், அங்கு திறம்படக் கற்றுத்தரப்படுகின்றன என்று நம்பியும், மற்றப்பிள்ளைகள் அங்கு கற்கவெனப் போகின்றனர் நாமும் போகவேண்டும் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயக்கத்திலும்தான் செல்கின்றனார். அங்கு கற்றுத்தருபவர்கள் பாடசாலை ஆசிரியர்களே. ஆனால் எங்கு சென்றாலும் எப்படி முயன்றும் தனது கல்வியை, ஒழுக்கத்தை, வாழ்வை வடிவமைத்துக்கொள்ள வேண்டியவன் மாணவனே. ஒருவகையில் பார்த்தால் அதிக விளம்பரங்கள் காட்டி மாணவர்களைக் கவர்ந்திழுக்கும் தனியார்கல்வி நிலையங்கள் ஒருவகை வியாபார நிலையங்களே. குறைந்த முதலீட்டுடன் பெரும் லாபமீட்டும் தொழிற்சாலைகளே. அங்கு சென்ற மாணவர் அதிசிறந்த பெறுபேறு பெறுகிறான் என வைத்துக் கொண்டாடினாலும் கூட, அங்குகற்பிப்பவர் ஒரு பாடசாலையின் ஆசிரியரே. ஆயின் அவர் தனது பாடசாலையில் பயிலும் மாணவர்களைச் சிறந்த பெறுபேறுகள் பெற வழி செய்யலாம்தானே. மீண்டும் வலியுறுத்துகின்றோம். எங்கு கற்றாலும் மாணவன் விரும்பி ஊக்கத்துடன் தொடர்ந்து கற்றலே நல்ல பெறுபேறுகளும் ஒழுங்கும் வளர்த்துக்கொள்ளமுடியும்.

இன்னொருவகையில் பார்த்தால், பாடசாலைகளை விடத் தனியார் கல்வி நிறுவனங்கள்தான் கற்றுத்தருகின்றன எனக்கொண்டால், பாடசாலை ஆசிரியர் தகைமையில்லாதவர் என்று அவன் கருதுகிறான், அல்லது பாடசாலை ஆசிரியர் பாடநேரத்தில் கற்றுத்தருவதைவிட வேறு பணிகளில் ஈடுபடுகிறார் என்றும் கருதுவதால் ஆசிரியர்களிடம் அவனுக்கு ஏற்படவேண்டிய மரியாதையும் பயமும் அன்பும் பக்தியும் குறைந்து இவர்களைப் போலவே தனக்கான பொறுப்புக்களிலிருந்து விலகவும் மற்றவர்களைக் குற்றம் சுமத்தவும் துணிந்துவிடுகிறான்

இவ்வாறான குறைபாடுகளுக்கும் மேலாக அவனை சுயமாகச் சிந்திக்க விடுவதில்லை. ஆற்றலை வளர்த்துக் கொள்ளத் தூ ண்டுவதில்லை. கற்றுத்தரும் கேள்விக்கான விடைகளைப் பரீட்சைகளில் எழுதி அதிக புள்ளிகள் வேண்டவே பயிற்றப்படுகிறான். அதனால் கல்வி நிறுவனங்களுக்கும் பெயரும் புகழும் தேடிக்கொள்ள முனைகிறார்களே தவிர சுயஆற்றல்களை சுயதேடல்களின் மூலம் கிடைக்கின்ற விரிந்த அறிவு விருத்தியைப் பெற்றுக்கொள்ளத் தூண்டவில்லை. காலை எழுந்தவுடன் படிப்பு, பின்பு கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு, மாலை முழுவதும் விளையாட்டு என்ற வழக்கத்தை மாற்றி எந்த நேரமும் படி படி என அவனை நெருக்குவதால் படிப்பின் மீதும் புத்தகங்கள் மீதும் அவனுக்கு வெறுப்புண்டாகிவருகிறது. நெருக்குதலாலும், வெறுப்புடனும் புத்தகங்களைத் திறக்கும் மாணவன் எதையும் பெறப்போவதில்லை. சுயவிருப்புடன் புத்தகங்களை விரிக்கப்பழக்கவேண்டும் முன்னுதாரண


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புருஷர்கள் போல் வளரவேண்டும் என அவனைத்தூண்டவேண்டும். வீர புருஷர்கள் ஒழுக்கம் நிறைபெரியார்கள் வறுமையில் பிறந்தும் சாதனை புரிந்தவர்களின் வரலாறுகளைச் சொல்லி ஊக்கப்படுத்த வேண்டும்.

எல்லாச் சங்கதிகளுக்கும் மேலை நாட்டவர்களை உதாரணம் காட்டி அவர்கள் போலப் பாவனைகாட்டிப் பின்பற்றும் நாம் கல்விமுறைமையில் மட்டும் அவர்களைப் பின்பற்றவே இல்லை. அதனால்தான் நாங்கள் யாருடையதோ ஏவல்களுக்காக இன்றும் காத்திருக்கின்றோம். அவர்கள்தான் மீட்பர்களென நம்பி ஏமாறுகின்றோம். வளர்ந்து விட்ட நாடுகளில் சிறுவர்களை 7 வயதுவரை பள்ளிக்குச் சேர்ப்பதில்லை. பெற்றார் இருவரும் தொழிலுக்காகச் செல்லும் நேரங்களில் மட்டும் பராமரிப்புக்காக பாலர் விடுதிகளுக்கு அனுப்பினாலும் தாய்தந்தையாரிடமிருந்து தனிமைப்படுத்தப்பட்டாலும் வீடுகளில் விளையாடவும், பார்த்துப் பழகவும், சேர்ந்து பழகவும், தன்னைத்தானே பராமரிக்கவும் வடிவமைக்கவுமே செய்கிறார்கள். சுயசிந்தனைகளும் முடிவுகளும் எடுக்கிறார்கள். பிழையாக இருந்தால் திருந்திக்கொள்கிறார்கள். பெரியவர்களை மதிக்கிறார்கள். விஷேச தேவைவேண்டியவர்களுக்கு இரங்குகிறார்கள். உதவுகிறார்கள். மனிதனை நேசிக்கக் கற்றுக்கொள்கிறார்கள். மனிதப் பண்புகளை மேம்படுத்திக் கொள்கிறார்கள். இவையாவும் கற்றுத்தரப்படாது, தாமே பெற்றுக்கொள்வதால் இளவயதிலேயே பாடசாலைக் கல்விக்கும் முன்னரே தங்களைத் தாங்களே வடிவமைப்பதால் ஆயுள் வரை பின்பற்றுகிறார்கள். மற்றயவர்களுக்கு முன் மாதிரியாகத் திகழ்கிறார்கள். முன்னேறுகிறார்கள். முன்னேற்றம் அடைகிறார்கள் பெற்றார் கிடைக்கும் ஓய்வு நேரங்களில் பிள்ளைகளுடன் கலந்து கதைக்கிறார்கள். விளையாடுகிறார்கள் வெளியிடங்களுக்கு அழைத்துச் செல்கிறார்கள். சிறுவர்கள் வெளியிடங்களில் காண்கின்ற புதுப்புதுக்காட்சிகளைக் கண்டு களிப்புறுவதுடன், இயற்கையைக் கற்றுக் கொள்கிறார்கள். பெற்றோர் அருகாமையில் இருப்பதால் குதூ கலிக்கிறார்கள். தான் இயற்கையிடம் கற்றவற்றைப் பெற்றோருடன் பகிர்ந்து கொள்கிறார்கள். ஆனால் இங்கு நிலைமை தலைகீழ் தான் பாடசாலை நேரத்துக்குமுன் தனியார் வகுப்புகள் பாடசாலைக்குப்பின் தனியார் கல்வி நிலையங்கள், விஷேச வகுப்புகள் என்று விரட்டப்படுவதால் கற்பதில் வெறுப்புண்டாவதற்கும்மேலாய் போதிய போசாக்குணவு வீட்டிலிருந்தும், ஆரஅமர இருந்து செரிக்கச் சாப்பிட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரமில்லாமல் விரைவுணவுக் கடைகளில் கண்டவற்றை வாங்கிக் கொறித்து வருத்தங்களையும் அள்ளிக்கொள்கின்றனர்.

உலகம் பூராவுமுள்ள கற்கும் மாணவர்கள் நிலை உயர்வடைவதன் மூலமே ஒழுங்கமைந்த உலகைக் கட்டியெழுப்பமுடியுமென, ஐக்கிய நாடுகளின் மாணவர்கல்வி விஞ்ஞானக் கழகம் (U.N.S.CO) எல்லோருக்கும் கல்வியென்றும் அறிவதற்கான கல்வி, ஆற்றுவதற்கான கல்வி, இணைந்து வாழ்வதற்காக நிலைத்திருப்பதற்கான கல்வி, என பாரிய அளவில் திட்டங்களை நடைமுறைப்படுத்தினாலும் உதவினாலும், ஏழைகளுக்கும் கல்வி எல்லோருக்கும் கல்வி என இலங்கை அரசு இலவசக்கல்வி வழங்கினாலும் இவற்றின் மகத்துவம், இவற்றின் உள்ள அடையப்படவேண்டிய இலக்குகள் பற்றி அக்கறையின்றி, நாம் பணம் பண்ணுவதற்கான கல்வி ஆக்கிவிட்டமையால் மந்த புத்தியுள்ளவர்களாக மாறிவருகிறோம். கல்வி அறிவுடன் கூடிய பொருளாதாரம் வழங்கும் பயன், பொருளாதாரத்துக்காக கல்வி கற்பதால் அடைந்துவிட முடியாதென்பதுதான் நிதர்சனம் தொழில் வாய்ப்புக்களுடன் கூடிய கல்வி நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் பாதுகாப்பை உறுதி செய்யும் தொழில் வாய்ப்புக்களற்று பட்டதாரிகளை உருவாக்கி, கூடாரமிட்டு வீதி வழியே வேலைக்காகப் போராடும் உண்ணாவிரதம் இருக்கும் கல்வியால் நாட்டுக்குமட்டுமல்ல வீட்டுக்கும் எவ்விதப்பயனும் ஏற்படாது.

இயற்கையாகவே வளங்கள் நிறைந்த எமது நாட்டு இளைஞர்களின் ஆற்றலை மழுங்கடிக்கக் கூடியவாறு, பணத்தேடலுக்கான கல்வி என்றில்லாமல், அறிவு விருத்தி, தொழில்விருத்தி, மனிதவள விருத்திக்காகக் கல்வி அமையுமேயானால் பொருளாதார விருத்தி தானே ஏற்பட்டுவிடும் தன்நிறைவு ஏற்பட்டுவிட்டாலோ சந்தேகமும், சஞ்சலத்தின் மூலமாக வரும் திருட்டு எமாற்று ஊழல் என்பன தானே மறைந்துவிடும் நாட்டின் பாதுகாப்பும் ஏற்பட்டுவிடும்.

*01-03-2020* *திருமதி. தயாமதி குகறாசா*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளவியல் ஓர் அறிமுகம்

இன்று நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இக் காலப்பகுதியில் உளவியல் என்பது இன்றியமையாத ஒன்றாக மாறிவிட்டது. இது இன்றைய அனைத்து துறைகளுடனும் இணைந்தாகக் காணப்படுகின்றது. அந்தவகையில் உளவியல் என்பது மனித நடத்தையை ஆய்வு செய்யும் ஓர் கலையாகும். இவ் உளவியல் மனித வாழ்வுடன் தொடர்புபட்ட எல்லாத் துறைகளுடனும் தனது காலடியைப் பதித்து இன்று ஓர் உன்னதமான நிலையை அடைந்துள்ளது எனலாம். இது மனதின் செயற்பாடுகளினை அறியும் விஞ்ஞானமாகவும் காணப்படுகின்றது.

மனிதனுடைய புறச்செயல்களினை உற்று நோக்கி முறையாக அதன் மூலம் அவை எவ்வாறு அகத்தே நிகழும் சிந்தனையோட்டங்களுடன் தொடர்புகொண்டுள்ளன என்றும் சுற்றுச்சூழலில் ஏற்படும் நிகழ்வுகளினால் எவ்வாறு மனிதனுடைய நடத்தையானது பாதிக்கப்படுகின்றது என்றும் கற்பதே உளவியல் கல்வி ஆகும். தொகுத்து நோக்கின் உளவியல் என்பதன் பொதுவான இலக்குகளாக மனிதநடத்தையை விபரித்தல், விளக்குதல் கட்டுப்படுத்தல் போன்றனவாகும். உளவியல் ஆராய்ச்சிகளாளான மனிதனுடைய நடத்தையை ஆராய்ந்து அறிவதுடன் அவன் ஏன் சில சமயங்களில் அவ்வாறு நடந்து கொள்கின்றான் என்பது தொடர்பாலும் ஆராய்கின்றதாக அமைகின்றது.

றுடோல் யொசிலியஸ் என்பவர்தான் முதன் முதலில் உளவியல் என்ற சொல்லினை 1590ம் ஆண்டு பயன்படுத்தினார். உளவியல் எனும் சொல் கிரேக்க மொழிச் சொற்களான Psyche, Logos என்ற இரு சொற்களின் இணைவினால் உருவானதாகும். ஆரம்ப காலகட்டங்களில் உளவியல் என்பது ஆன்மாவினைப் பற்றி ஆராயும் ஓர் ஆன்மாவியலாகக் காணப்பட்டது. ஆரம்பத்தில் ஆன்மா பற்றி ஆராயும் இயல் என உளவியல் கருதப்பட்ட போதிலும் ஆன்மாவின் இருப்பிடம் எது என்பதனைக் கூறமுடியாது என்பதனால் இது நிராகரிக்கப்பட்டது. பின் மனதைப்பற்றிய கற்கை என வரைவிலக்கணப் படுத்தப்பட்டு பின் அதுவும் நிராகரிக்கப்பட்டது. இறுதியாக மனித நடத்தை பற்றி ஆராய்வது என வரைவிலக்கணப் படுத்தப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளவியலின் வரலாற்றை நோக்குமிடத்து உளவியல் எப்பொழுது தோன்றியது எனக் கூறமுடியாது ஏனெனில் மனிதன் தோன்றிய காலத்திலே உளவியலும் தோன்றிவிட்டது எனலாம். எனவே உளவியல் என்பது ஓர் நீண்டகால வரலாற்றினைக் கொண்டதாகக் காணப்படுகின்றது ஆரம்பகால கட்டங்களில் இது மெய்யியலின் உட்பிரிவாகவே காணப்பட்டது. விஞ்ஞானத்திற்கு முற்பட்ட ஆரம்பகாலகட்டங்களில் உளவியலில் கோள்களை வைத்துதான் மனிதநடத்தையானது தீர்மானிக்கப்படுகின்றது என்ற அடிப்படையான ஓர் கருத்து நிலவி வந்தது. அதனால்தான் ஆரம்பகாலங்களில் ஜோதிடம் மூலம் மனித நடத்தையை அனுமானித்தனர். மனிதனது ஒவ்வொரு நடத்தைக்கும் செயல்களிற்கும் பேய்களும் ஆவிகளும் தான் காரணம் என நம்பினர். கிரேக்க தத்துவஞானி சோக்கிரடீஸ் அது நடத்தையாக இருக்கலாம் என கூறினார். இவரின் பின் பிளாட்டோ மனம் உடல் இரண்டுக்கும் இடையிலான வேறுபாட்டைக் கூறினார். இதன் பின் மெய்யியல் ஞானியான அரிஸ்டோட்டில் உடலின் மையம் மனம் என கூறினார்.

இவர்களின் பின் ரெனியு பேக்காட் உளவியலின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றினார் இவர் மனம் தொடர்பாக கூறியகருத்துக்கள் உளவியலில் முக்கியம் பெறுகின்றது. இவரின் பின்னர் கிட்டத்தட்ட இருநூறு ஆண்டுகளிற்கு மேலாக உளவியலின் வளர்ச்சி மெய்யியல் உடலியல் இயக்கவியல் ஆகிய துறைகளிலே காணப்பட்டுவந்தது. பின்னர் இவற்றில் இருந்து விலகி தனிவிஞ்ஞானமாக இயங்க ஆரம்பித்தது 1879ம் ஆண்டில் ஜேர்மனியைச் சேர்ந்த வில்கும் வூண்ட் லிப்ஸிக் பல்கலைக்கழகத்தில் முதலாவது உளவியல் சிகிச்சை கூடத்தினை ஆராய்ந்தர். இதுவே உளவியலின் பிறந்தநாள் என கூறலாம். இவ்வாறே உளவியல் தொடர்ச்சியான வளர்ச்சி கண்டது எனலாம்.

உளவியலானது மனிதன் தன்னுடைய இயல்புகள் நடத்தைகளினையும் அதற்கான காரணங்களையும் புரிந்துகொள்ள உதவுவதுடன் பிற மனிதர்களினதும் போக்கினை அறிந்து கொள்ளவும் உதவுகின்றது. இத்தகைய உளவியல் பல துறைகளைக் கொண்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. சமூக உளவியல் (Social psychology)
2. உடற்கூற்று உளவியல் (Physiological Psychology)
3. கல்வி உளவியல் (Educational Psychology)
4. தொழிற்சாலை உளவியல் (Industrial Psychology)
5. நுகர்வோர் உளவியல் (Consumer Psychology)
6. விலங்கு உளவியல் (Animal Psychology)
7. இராணுவ உளவியல் (Military Psychology)
8. குற்ற உளவியல் (Criminal Psychology)
9. குழந்தை உளவியல் (Child Psychology)

போன்ற பல துறைகளை தன்னகத்தே கொண்டு காணப்படுகின்றது.

இவ்வாறாக உளவியலில் ஏற்பட்ட வளர்ச்சிக்குப் பின்னர்தான் ஆங்கிலநாட்டு மெய்யியலாளர்களும் உயிரியல் வல்லுநர்களும் விஞ்ஞான முறைப்படி வளர்ந்துவந்த இந்த உளவியலின் பக்கம் ஆராய்ச்சி பரிசோதனைக் கூடங்கள் திறக்கப்பட்டு சிறந்த முறையில் செயல்படத் தொடங்கின.

இதுவும் விஞ்ஞானங்களை போன்று தோன்றி வளர்ந்து மனித சமுதாயத்திற்கு இன்றியமையாத ஓர் துறையாகக் காணப்படுகின்றது. முரண்பாடு, குழப்பங்களினை தீர்க்கவும் மன ஆறுதலுக்காக மக்களை ஆற்றுப்படுத்தவும் இன்றியமையாததாகக் காணப்படுகின்றது. இரகசியமான நடத்தைகள் மனிதன் உள்ளே நடக்கும் விடயங்களான கற்றல் தூண்டுதல் நம்பிக்கை உணர்வுகள் விஞ்ஞான பூர்வமாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. இன்று இது தனக்கு எட்டிய துறைகளை எல்லாம் தனது ஆய்வுக்கு உட்படுத்திவெற்றி கண்டுள்ளது எனலாம்.

**அபிராமி சுரேஸ்கரன்**
**உளவியல் துறை**
**யாழ்ப்பாண பல்கலைக்கழகம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்பு மனிதனைப் பூரணமாக்குகிறது

இன்று மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கம் மிக அருகி வருகின்றது. தொலைக்காட்சி பார்ப்பதில் அதிக நேரத்தைச் செலவிடுகின்றனர். சில மாணவர்கள், தொலைக்காட்சியில் ஒளிபரப் பாகும் கிரிக்கெட் போட்டிகளை, திரைப்படங்களை பார்ப்பதற்காக பாடசாலைக்கே செல்லாது நின்று விடுகின்றனர். இதனால் அவர்களது கல்வி பெரிதும் பாதிக்கப்படுகிறது. கற்க வேண்டிய நேரம் வீண் விரயமாகிறது. இதன் பேறாக அவர்களது கல்வித் தரமே குன்றுகிறது. மாணவர்கள் தமது பொழுதைப் போக்கத் தொலைக்காட்சியையே நம்பியுள்ளனர். அதேவேளை நல்ல நண்பர்கள் எனக்கருதத்தகும் நூல்களை வாசிக்கத் தவறிவிடுகின்றனர். மிக அரிதாகவே ஒரு சில நூல்களை வாசிக்கின்றனர். வாசிப்புக்குச் செலவிடும் நேரம் மிகக் குறைவாகவே உள்ளது. இதை நன்கறிந்த எமது பிரதேசத்திலுள்ள சமூக அமைப்பொன்று வாசிக்கத் தூண்ட பல முயற்சிகள் எடுத்து வருகின்றது.

“நூல் பல கல்” என்றார் ஔவையார். எவ்வளவு நூல்களை நாம் வாசிக்கின்றோமோ அவ்வளவுக்கு நமது அறிவு பெருகும். கண்டது கற்கப் பண்டிதன் ஆவான் என்பது நம் ஆன்றோர் வாக்கு. ரஸ்கின் என்ற ஆங்கில அறிஞர் புத்தகங்களைப் போன்ற சிறந்த கருவூலம் எதுவும் மனிதனுக்கு இருக்க முடியாது எனக் கூறுகிறார். வேறு செல்வங்களைக் கள்வர் களவாடிச் சென்று விடலாம். ஆனால் புத்தகங்கள் பொதுவாக களவாடப்படுவதில்லை. புத்தகங்களை வாசிப்பதால் ஒருவன் பெற்ற இன்பங்களை மற்றவர்கள் தட்டிப்பறித்து விடமுடியாது. வாசிப்புப் பழக்கம் இல்லாதவனின் வாழ்க்கை இருண்டதாகவே இருக்கும். பொதுநூலகங்களிலும், பாடசாலை நூலகங்களிலும் ஏராளமான புத்தகங்கள் உள்ளன. அவற்றை நாம் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஒவ்வொருவரும் புத்தகங்கள் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். முக்கியமான ஒரு கடமையாக இதனைக் கொள்ளுதல் வேண்டும். வாசிப்பு மனிதனை பூரணமாக்குகிறது என்கிறார். பேக்கன், அவரது கூற்றுக்கமைய நாம் ஓய்வு நேரத்தை, புத்தகங்கள் வாசிப்பதில் செலவிட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையத்து வாழ்வாங்கு வாழும் நெறியினை நாம் அறிந்திட முடியும். நூல்களில் பல வகை உண்டு. வாழ்க்கை வரலாறு, தத்துவம், அரசியல், சமயம், அறிவியல் சார்ந்த நூல்கள் பலவுள்ளன. நமது விருப்பத்துக்கு ஏற்றபடி நூல்களைத் தேர்ந்தெடுத்துப் படித்திட நாம் பழகிக் கொள்ள வேண்டும். அன்னப்பறவையானது நீரை விலக்கிவிட்டுப் பாலைப்பருகுதல் போன்று நாம் நமக்குத் தேவையான பொருத்தமான பயன்தரும் நூல்களை மட்டும் வாசிக்க வேண்டும்.

தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தருக்குக்
கற்றனைத் தூறும் அறிவு

- என்கிறார் வள்ளுவர்

நூல்களை வாசிக்க வாசிக்கப் பற்பல அனுபவங்களைப் பெற்றிட முடியும். வாழ்க்கை முழுதும் மகிழ்ச்சியாக இருக்கக்கூடிய வழியை நூல்கள் காட்டுகின்றன. அவற்றை படித்து அதன் வழி ஒழுக நாம் பழகிக் கொள்ளல் வேண்டும். நூல்களை வாசிப்பதன் மூலமே நாம் பூரண மனிதராக மனிதத் தன்மை உடையோராக மாண்புடன் வாழ முடியும் என்பதை உளத்திற் பதிந்து கொள்ளல் வேண்டும்.

"நூல் பல கற்போம் நுண்ணறிவு பெறுவோம்"

**பி. பிரேமினி**
10ம் வகுப்பு
யா/ கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலை

கடவுள் ஒருவரே என எல்லா மதங்களும் ஏற்றுக்கொண்டுள்ளன. போதிப்பவர்களும் அன்புதான் கடவுள் எனப் போதிக்கின்றார்கள். ஆனால் வெவ்வேறு கடவுள்களுக்கான சிலைகள் நிறுவுவதிலும் கோவில்கள் அமைப்பதிலும் தீவிரமாயுள்ளனர். ஆக்கிரமிக்கின்றனர். இதனாலேயே உலகில் சண்டைகளும் கலவரங்களும் நிகழ்கின்றன. ஒரே கடவுளுக்காக ஏன் இத்தனை பித்தலாட்டங்களும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிசில் நாள் 25-05-2019 நிகழ்வுகள்...



















PUBLIC LIBRARY
JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காடழிப்பதால் ஏற்படும் தீமை

மனிதனின் நாளாந்த வாழ்க்கையில் பயன்படுபவைகளில் மரங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. மரங்கள் நமக்கு உண்பதற்கு உணவு,சுவாசிக்க நல்லகாற்று, நோயின்றிவாழ மூலிகைககள் எரிபொருளாக விறகு மற்றும் இருப்பிடம் எனப் பல நன்மைகளை தருகின்றது. ஆனால் நாம் அதன் அருமையை உணராமல் வெட்டி வீழ்த்துகிறோம். இத்தகைய செயல்களின் மூலம் அடைகின்ற தீமைகளை அறியாமல் காடுகளை அழித்துக் கொண்டு வருகிறோம்.

காடு அழிப்பதற்கான காரணங்களாக அதிக நிலப்பரப்பு உள்ள விவசாய நிலங்களை அமைத்தல், சமையல் எரிபொருளுக்காக, வீடு கட்டுவதற்காக, வணிகம் செய்வதற்காக, காகித உற்பத்திற்காக கலை மற்றும் கைவினைப் பொருட்களுக்காக, நிலசுரங்கம் அமைப்பதற்காக மற்றும் பெரிய கட்டடங்களைக் கட்டுவதற்காக. நாம் அதன் பயனை அறியாமல் அதை கண்டபடி வெட்டி வீழ்த்துகிறோம்.

காடுகளை அழிப்பதால் கரியமில வாயு வளிமண்டலத்தில் அதிக அளவு சேரும் கரியமில வாயுவால் ஏற்படும் விளைவுகள் கரியமில வாயு வளியில் காணப்படுவதால் வாயு மண்டலத்தில் ஓசோன் படை சிதைவதால் தோல் புற்றுநோய் ஏற்படும் மற்றும் அதிக மழை அல்லது வறட்சியால் பயிர்விளைச்சல் மிகவும் பாதிக்கப்படும். அதனால் பூச்சி மற்றும் நோய்களின் தாக்குதல் அதிகரிக்க வாய்ப்புள்ளது மற்றும் பக்ரீரியா பூஞ்சைகள் வளர்வதற்கு உகந்த நிலை ஏற்படுதல் மற்றும் உணவு பொருட்கள் சேதமடையும்.

மரங்களை வெட்டுவதால் மரங்கள் அளித்துவரும் மூடுபடை அகற்றப்பட்டு மண்ணரிப்பு ஏற்படும் இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை மிகவும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது. இதனால் மரங்களை அதிக அளவில் வளர்ப்போம்.

"விசும்பின் துளிவீழின் அல்லாமற் றங்கே
பசும்புல் தலைகாண்பது அரிது" - திருவள்ளுவர்

பொருள் : விண்ணிலிருந்து மழைத்துளி விழுதலன்றி மண்ணில் பசும்புல் தலைகாண்பது அரிதான ஒன்றாகும்.

இப்போது சில காலத்திற்கு முன்பு உலகத்தில் மிகப்பெரிய காடான அமேசன் காடு மற்றும் அவுஸ்ரேலியா காடு எரிந்ததில் அருகில் உள்ள நாடுகள் புகை மண்டலமாக காணப்பட்டது எனவே.

"மரம் வளர்ப்போம்
மழை பெறுவோம்
மனித உயிரைக்காப்போம்"

**செல்வன் பா. ஐங்கரன்**
10ம் வகுப்பு
கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆழ்கடலின் அதிசயங்கள்

புவியில் 75 வீதம் கடல் நீராய் உள்ளது. கடலில் எத்தனையோ வகையான உயிரினங்கள் உள்ளன. புவியில் உள்ள மக்களின் எண்ணிக்கையைவிட கடலில் எத்தனையோ உயிரினங்கள் உள்ளன. கடலில் எம்மால் கற்பனை செய்து கொள்ள முடியாத உயிரினங்கள் உள்ளன. அவ் உயிரினங்களை எம்மால் பாதுகாக்க முடியாவிட்டாலும் பரவாயில்லை அதனை அழிக்காதிருப்போம். நாம் கடலில் குப்பைகளைக் கொட்டாதிருப்போம். குப்பைகளைக் கொட்டுவதால் அதனை கடல் வாழ் உயிரினங்கள் உண்பதால் கடல் உயிரினங்கள் இறக்கின்றன. நாம் கடலில் குப்பை கொட்டுவது கடல் உயிரினங்களுக்கு மட்டுமன்றி நமக்கும் தீமைகள் நடக்கின்றன. நாம் கொட்டும் குப்பைகள் நமக்கே வருகின்றன. குப்பைகளை கடல் உயிரினங்கள் உண்பதால் அவ் உயிரினங்களை நாம் உண்பதால் பல்வேறுபட்ட நோய்கள் வருகின்றன. அதனால் குப்பைகளை கடலில் கொட்டாதீர்கள் கடல் நீரின் மகத்துவம் பற்றி எல்லோரும் அறிந்துகொள்ள வேண்டும். அண்டம் நீலநிறமாக காணப்படுவதற்கு காரணம் இப்புவி நீரினால் சூழப்பட்டுள்ளது. கடலில் அதிசய உயிரினங்கள் அதிசய பாறைகள், முருகக்கற்பாறைகள், பவளப்பாறைகள், நட்சத்திரமீன் போன்றபல உயிரினங்கள் பல உயிரற்ற பொருட்கள் உண்டு, மழை நன்னீர் நீராக பொழிந்தாலும். அம்மழை கடல் நீரில் இருந்தது தான் வருகிறது. பல பேர்கள் கடலை நம்பித்தான் வாழ்கிறார்கள் நீரின் முக்கியதுவம்பற்றி அந்தகாலப் புலவர்கள் கூறிஇருக்கிறார்கள் ஆனால் நாம் கடல் நீரின் முக்கியத்துவத்தை அறிந்து கொள்ளாமல் இருக்கிறோம். கடலில் பல்வேறுபட்ட நுண்ணங்கிகளும் வாழ்கின்றன. கடலில் ஆழமான பகுதிக்குள் செல்லச் செல்ல அங்கு உயிரினங்கள் ஏதும் இருக்காது என்றே முதலில் கருதப்பட்டது. அதுவும் 3 கிலோமீற்றர் ஆழத்துக்கு அப்பால் எந்த கடல் வாழ் உயிரினமும் இருக்காது என்று உறுதியாக நம்பியிருந்தார்கள். ஆனால் இதில் உண்மையில்லை என்பது தெரிய வந்தது. எப்படி? கடலின் ஆழம் வரை இதுவரை இரண்டே பேர்கள் தான் இந்த நூற்றாண்டுக்கு முன்பு சென்று ஆராய்ச்சி நடத்தியிருக்கிறார்கள், அதுவும் 1960 ஆண்டுகளுக்கு டாக்டர் ஜாக்விஸ் பிக்காட் என்பவரும் டான் வால்ஷ் என்பவரும். நீர் முழ்கிக் கப்பலில் கடலின் அடிவரை சென்று ஆராய்ச்சி நடத்தி திரும்பி வந்தார்கள். இவர்கள் வடபசுபிக் கடலிலுள்ள மரியானாஸ் ட்ரென்ச் என்றுமிடத்தில் கடலில் தரை வரைசென்று வந்தார்கள். கடலின் அடியில் செல்ல செல்ல நீரின் அமுக்கம் அதிகரிக்கும் இதனால் மூச்சு விடுவது கூடமிகவும் சிரமமாக இருக்கும். கொஞ்ச நேரத்துக்குமேல் அங்கு இருக்க முடியாது ஆளில்லா நீர் மூழ்கிக் கப்பல்களில் ஆராய்ச்சி நடத்தினார்கள் கடலுக்கடியிலிருந்த எரிமலைப் பகுதி ஒன்றின் அருகில் "டம்போ ஆக்டோபர்ஸ்" இது விநோதமான தோற்றத்துடன் உள்ளது. காது போன்று அமைப்பிலான துடுப்புகளை வைத்து கொண்டு இவை நீந்துகின்றன. மற்றொன்று "ஆங்கவர்" என்ற மீன் இது பார்க்கவே மிகவும் பயங்கரமாய் இருக்கிறது. இதன் வாயில் நீண்ட கோரைப் பற்கள் காணப்படுகின்றன. இவற்றால் நீரின் முக்கியத்துவம் அதிலும் கடல் நீரின் முக்கியத்துவம் உணரப்படுகின்றது.

**செல்வன் ஞா. குகதாஸ்**
10ம் வகுப்பு
யா/கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறுமுகநாவலர்

ஆறுமுகநாவலர் யாழ்ப்பாணத்தில் நல்லூரில் 1822ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 18ம் திகதி கந்தப்பிள்ளை சிவகாமி அம்மையார் தம்பதிகளுக்கு இறுதி மகனாக பிறந்தார். இவரின் இயற்பெயர் ஆறுமுகம் என்பதாகும். இவர் பன்னிரெண்டு வயதிலேயே தமிழ், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளைக் கற்று புலமை பெற்றார். பின்னர் யாழ்ப்பாண மத்தியகல்லூரியிலே சிலகாலம் ஆசிரியராக பணியாற்றினார் நாவலர் பெருமான் சைவநெறி தழைத்தோங்கவும் தமிழ்மொழி செழித்து வளரவும் பணியாற்றினார். சைவநெறி நலிவுற்றிருந்த வேளையில் நாவலர் தனது சொல்லாலும். எழுத்தாலும் மக்களின் அகக்கண்களைத் திறந்து அவலநிலையை அவர்களுக்கு உணர்த்தியதோடு சைவமும் தமிழும் மீண்டும் புத்துயிர் பெறுவதற்காக தம்மாலியன்ற பணிகளைச் செய்தார்.

அவரின் கல்விப் புலமையையும் நாவன்மையையும் சைவத்தமிழ்ப் பணிகளையும் பாராட்டி திருவாவடுதுறை ஆதினம் அவருக்கு நாவலர் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது. சைவமக்கள் இவரை ஐந்தாங்குரவர் எனப் போற்றுகின்றனர். சைவசமயத்தை அழியவிடாது பாதுகாக்க நாவலர் பல முயற்சிகளை மேற்கொண்டார். சைவப்பாடசாலைகளை யாழ்ப்பாணத்திலும் தமிழ்நாட்டிலும் நிறுவி அங்கு போதிப்பதற்கு சைவநூல்களைப் பிரசுரித்தார். இதற்காக அச்சுக்கூடங்களை நிறுவினார். அதில் சைவப்பிள்ளைகளுக்காக பாலபாடம், கொன்றைவேந்தன், நன்நூல், சைவவினாவிடை போன்ற நூல்களை அச்சிட்டு வெளியிட்டார். பல பிரசங்கங்கள் செய்தார். இதன் பயனாக சமய விழிப்புணர்வு ஏற்பட்டது. கல்வியழகும் தெய்வநெறியும் பொலிந்து விளங்கும் ஒரு சமூகத்தைக் காணத்துடித்தார்.

அதற்காகக் கடுமையாக உழைத்தார். அவரின் வாழ்வின் இலட்சியமே இதுவாக இருந்தது. தன்வாழ் நாள் பூராகவும் தமிழிற்கும் சைவத்திற்கும் சேவையாற்றி வந்த நாவலர் பெருமான் 1879ம் ஆண்டு கார்த்திகை மாதம் மக நட்சத்திரத்தில் இறைபதம் அடைந்தார். அவரது பெருமையைப் பேசுவோமாக. அவர்காட்டிய வழி செல்வோமாக

**செல்வி. சு. கிசோனா**
தரம் – 7
கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செழிப்புறு தாய் மண்

வானுயர்ந்து நின்றாலும் வட்டுநிறை குலைதள்ளும்
வகையாக எழுந்து நிற்கும் தென்னைகளங்கே
தானுயர்ந்து நிற்பதற்காய் தானே வளர்ந்த
தாலுமங்கு தரணிக்கு உணவ ளிப்பதற்கே
போலுயர்ந்து வாழ்வாரும் பொதுநல சேவைக்காய்
பொழுதெல்லாம் உழைப்பர் பொருதிடவும் மாட்டார்
சாலுயர்ந்து இருப்பதாலே தானுயரும் நீர்மிகவே
சீர்கொண்டு வரும் சிறப்புக்களும் விளையும்

தன்மையினை ஒத்ததுவாய்ச் சரித்திரங்கள் படைக்கும்
தரணியிலவர் சேவை தனியிடமும் பிடிக்கும்
நன்மையினைச் செய்வதற்கு மனமிசைய வேண்டும்
நானிலமும் வியக்கும் நலம்பலவும் செய்வார்
தொன்மையினைத் தோதறிந்து மக்களிடை சொல்லும்
தோழமையை மக்கள் மனமிகவும் கொள்வர்
வெண்மையிலே கரும்புள்ளி தேடிநிற்கும் கயவர்
வேண்டாமினி யிதுவென்று விலகித்தூர நிற்பர்

வெண்ணிலவின் குளிரொளியில் கூட்டமங்கே சேரும்
வேலன்பராய் வயல்வெளியில் வாதம்பல நிகழும்
கண்மணியாம் மொழியறிவு கனன்றங்கே தெறிக்கும்
காய்ந்துபோன மனமுடையோர் கடுகடுத்து நிற்பர்
நுண்ணறி வுடனங்கு நாட்டியங்கள் நிகழும்
நூற்றுக்கு நூறென்று குதூகலிக்கும் மக்கள்
பண்ணிசையோ பலகதைகள் பழுதின்றிப் பேசும்
பார்த்து மிகுமக்கள் மிகுபரவசமு மடைவர்

மதிநிறை நாளிலங்கு மாணவர்கள் சேர்வர்
மாண்புமிகப் பெற்றுயர உதவிபெற்றுச் செல்வர்
நிதிநிறைந்த மக்களென்றும் பூட்டிவைத்துப் பேண
நீசமற்ற வாழ்வுபெற நிதி வளங்கி நிற்பர்
சதிநிறைந்த வாழ்விலின்று சாத்திரங்கள் பொய்யாம்
சாவதற்கே பிறக்கின்றார் சரித்திரமும் படையார்
விதியிதென்று வீண்கதைகள் சொல்வர் எப்போதும்
விதியைவென்ற மாந்தர் சரித்திரங்கள் அறியார்

எழடாதம்பி இதுவுன் நேரம்
ஏதடா இதை விடவந்து சேரும்
தொழுது பின்செல இனியிங் கெவரும்
தோதான ஆட்களில்லை இனிவரும்
காலமொரு புதுப்பாடம் தரும்
கற்றதனால் வரும் முன்னேற்றம்தானே
ஞாலத்தினுன் புகழுயர்ந்து போகும்
நாடுமகிழ்ந் துனக்குநற் பரிசுதரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களின் தோழர்கள்

மாணவர்களாகிய நாம் ஒவ்வொரு வரும் வெற்றியை இலக்காகக்கொண்டே பயணிக்கின்றோம். ஆனால் நம்மில் பலருக்கு அதை எப்படி அடைவது என்பது கேள்விக்குறியாகவே இருக்கிறது. நாம் அனைவரும் சில பண்புகளைத் தொடர்ச்சியாகப் பின்பற்றுவதன் மூலம் வெற்றி இலக்கை அடையமுடியும். அந்த வகையில் நமக்கு வெற்றியைத் தருவதில் முன்நிற்பவை பின்வருவனவாகும்.

**நேரம் :**

நேரம் பொன்னானது நம்மிடம் இருக்கும் பணம் செல்வத்தைவிட மேலான சொத்து, நேரமாகும். நேரத்தைப் பயனுள்ளதாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்தும்போது வெற்றி நிச்சயம் கிட்டும். மாணவர்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பது நேரமுகாமைத்துவம் ஆகும். ஆகவே நாம் நேரத்தைச் சரியாக பயன்படுத்தவேண்டும் என்பதில் தெளிவாக இருக்க வேண்டும்..

**சேவை :**

பிறருக்குச் சேவை செய்வதில் நாம் மனம் மகிழ வேண்டும். ஏழைகளுக்கு, வயோதிபர்களுக்கு, உதவிதேவைப்படுவோருக்கு மனமுவந்து சேவை செய்யுங்கள். இதன் மூலம் நீங்கள் இறைவனை நிச்சயம் உணரலாம்.

**மதிப்பு :**

உங்கள் பெற்றோர், ஆசிரியர், சகோதர சகோதரிகளினை என்றும் மதித்து நடவுங்கள். இதன் மூலம் மதிப்பு உங்களை நாடிவரும் மற்றவனை மதிப்பவன் தன்னை மற்றவர்களால் மதிக்க வைக்கிறான் என்பது அறிஞர்கூற்று. ஆகவே மற்றவர்களை மதிக்கத் தவறாதீர்கள்.

**நம்பிக்கை :**

உங்கள் மீதும் இறைவன் மீது உங்கள் தாய், தந்தையர் மீதும் முதலில் நம்பிக்கை வையுங்கள். அத்துடன் உங்களை அறிவாளிகளாக மாற்றும் ஆசான்கள் மீது நம்பிக்கை கொள்ளுங்கள். இதுவே வெற்றியின் இரகசியம்.

**சுத்தம் :**

உடலை மட்டும் சுத்தத்தோடு வைத்திருக்காமல் உள்ளத்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுத்தமாக வைத்திருங்கள் சுத்தமான உள்ளம் இறைவனின் இலாபம் என்பதை மறந்துவிடாதீர்கள்.

**மகிழ்ச்சி :**

மகிழ்ச்சி உள்ள மனிதன் வாழ்வில் என்றும் வெற்றியடைகின்றான். மகிழ்ச்சியை என்றும் உங்களிடம் வைத்திருங்கள். சோகங்களும், துக்கங்களும் வந்தாலும் மகிழ்ச்சியோடு இருங்கள். இதுவே சிறந்த மனிதனின் இயல்பு உங்களுக்குத் தெரிந்ததை மற்றவர்களுக்கும் சொல்லிக் கொடுங்கள். இதன் மூலம் நீங்கள் ஒரு தனித்துவமான மனிதனாக மாறலாம்.

**உற்சாகம் :**

உற்சாகம் என்றும் உங்களைப் பிரகாசிக்கச்செய்யும் உற்சாகம் உயர்வுக்கு வழிகோலும் சோர்வடையாதீர்கள். சோர்ந்தாலும் அதிலிருந்து மீளக் கற்றுக்கொள்ளுங்கள். சோர்வடைபவன் என்றும் தோல்வியையே தழுவகிறான் உற்சாகம் யாரிடம் நன்றாக இருக்கிறதோ அவரின் உச்சத்தை யாராலும் தடுக்கமுடியாது.

**கற்றல் :**

என்றும் எப்போதும் கற்றுக்கொண்டேயிருங்கள். உங்கள் அறிவாலும் அனுபவத்தாலும் நிறைய விடயங்களை அறிந்து கொள்ளுங்கள். சிறந்த புத்தகங்களைத் தேடி வாசியுங்கள். வாசித்தது மட்டுமல்லாது. அதை நடைமுறைக்குக் கொண்டு வாருங்கள். இதனால் வானிலிருக்கும் நட்சத்திரத்தின் பிரகாசத்தை நீங்களும் அடையலாம்.

**பேச்சு :**

பேசும் போது இனிமையாகவும் உண்மையாகவும் பேசுங்கள். பேச்சு இனிமையாக இருந்தால் உள்ளமும் இனிமையாக அமையும். உங்கள் பேச்சு மற்றவர்களைப் புண்படுத்தாதவாறு பார்த்துக் கொள்ளுங்கள். பேசுவதற்கு முன்னால் பல தடவைகள் சிந்தியுங்கள்.

**தேடல் :**

தேடல் எமது வெற்றிக்கு அவசியமாக இருக்கிறது. தேடல் எமது அறிவுப்பசியைப் போக்கவல்லது. தேடல் உள்ளவரை வாழ்வில் என்றும் உயர்வே கிடைக்கும். நன்றாகத்தேடுங்கள். நல்ல புத்தகங்களைத் தேடிப்படியுங்கள். நல்ல நண்பர்களை, நூல் ஆசான்களைத் தேடிக் கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நட்பு :**

எமது வெற்றிதோல்விகளைத் தீர்மானிப்பது நட்பு. நல்ல நட்பு எம்மை எப்போதும் உயர்வில் வைத்திருக்கும் அதனால் நாம் நல்ல நண்பர்களைத்தேடிப் பழகவேண்டும். தீய நண்பர்களோடு ஒருபோதும் பழகாதீர்கள். அவர்கள் உங்களையும் உங்கள் நோக்கினையும் திசைதிருப்பி விடுவார்கள். ஆகவே நண்பர்களைத் தெரிவு செய்யும் போதும் பழகும்போதும் கவனமாக இருங்கள்.

இவற்றைக் கடைப்பிடியுங்கள். இது உங்கள் வாழ்க்கையை வெற்றிப் பயணமாக்கும்.

**செல்வி. ஐ. ஐதுர்ஷனா**
**விஞ்ஞானபீடம்**
**யாழ்பல்கலைக்கழகம்**

# மனித உரிமையைப்பேணுவோம்

இன்று அனைத்து ஊடகங்களும் அனைவரும் கவனம் செலுத்தி வருகின்ற ஒரு விடயம் மனித உரிமை ஆகும். உரிமைகள் பற்றி நிகழ்த்தப்படும் எந்த ஒரு நோக்கும் மனித உரிமை பற்றியதாகவே கவனம் பெறுகின்றது. மனித உரிமைகளை மதித்தல், மனித உரிமைகளைப் பேணுதல் முதலான செயற்பாடுகள் உலகில் வாழும் ஒவ்வொரு மனிதனினும் கடமை ஆகின்றது.

ஒவ்வொரு மனிதனுக்கும் இருக்கவேண்டும் என நம்பப்படும் உரிமைகள் மனித உரிமைகள் எனப்படும். உலகில் பிறந்த அனைவருக்கும் சமமாக வழங்கப்படவேண்டிய உரிமைகள் உள்ளன. இவ்உரிமைகள், வகுப்பு, ஆண், பெண், இனம், நிறம், சாதி, கோத்திரம், பொளாதார மட்டம், சமூகநிலை ஆகிய வரையறைகளுக்கு அப்பாற்பட்டவை.

மனித உரிமைகளைப் பொதுவாக மூன்றாக வகைப்படுத்தலாம். அடிப்படை உரிமைகள், அரசியல் உரிமைகள், பொருளாதார, சமூக கலாசார உரிமைகள் என்ற வகையில் வகைப்படுத்தலாம். இந்த உலகின் வாழும் ஒவ்வொருவரும் தமது வாழ்க்கைப் போக்கினைத்தாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்ணயித்துக் கொள்ள உரித்துடையவர்" என்பதை மகுடவாசகமாகக் கொள்ளவேண்டும். பெயர் வைக்கும் உரிமை, கல்வி கற்கும் உரிமை, உடல் ஆரோக்கியத்தைப் பேணுகின்ற உரிமை, திருமணபந்தத்தில் இணைகின்ற உரிமை என்பன அடிப்படை உரிமைகளுள் சிலவாகும்.

பிறப்பினடிப்படையிலும் சரி, வாழ்வியலடிப்படையிலும் சரி எந்தவொரு மனிதனும் உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற பாகுபாட்டுக்கு உள்ளாகக்கூடாது. தனக்கென மனிதன் வரித்துக் கொண்டுள்ள நியாயபூர்வமான உரிமைகளை அரசோ சகமனிதர்களோ பறித்துக்கொள்வதை மனித உரிமை மீறல் என்று அழைக்கப்படும். ஆதிகாலத்தில் மனித உரிமைகள் பற்றி அக்கறை காட்டப்பட்டிருக்கவில்லை முதலாம், இரண்டாம் போர்களில் ஏற்பட்ட அழிவுகளே மனித உரிமைகள் தொடர்பான சிந்தனை வலுப்பெறுவதற்கு வழிவகுத்தன. இப்போர்களின் போது இலட்சக்கணக்கான மக்கள் கொன்று குவிக்கப்பட்டதை மனிதநேய ஆர்வலர்கள் சகித்துக்கொள்ளவில்லை. உலக சமாதானத்தைப்பேணுதல், மனித உரிமைகளைப் பாதுகாத்தல் தொடர்பான நாடுகள் ஒன்றிணைந்து செயற்படும் பொருட்டு 1945ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் அமைப்புத் தோற்றம் பெற்றது.

"மானிட வர்க்கத்தினருக்குக் கருத்துக்களை வெளியிடும் சுதந்திரம் நம்பிக்கை, வெளியிடும் சுதந்திரம், அச்சம் மற்றும் வறுமையை அகற்றும் சுதந்திரம் ஆகியவற்றுடன் சமூக வாழ்க்கையைச் சிறப்பாக அனுபவிப்பதும் பொதுமக்களின் மேன்மையான ஒரு எதிர்பார்ப்பாகும்" என்று அமைகின்றது அப்பிரகடனம்.

தன்னுயிரைப்போல பிறஉயிரையும் நேசிக்கின்ற உயரிய மனப்பக்குவத்தை மனிதன் வரித்துக்கொண்டால் மாத்திரமே மனித உரிமைகள் நிலைநிறுத்தப்படுவது சாத்தியமாகும். அதுவரை மனிதஉரிமை தொடர்பான போராட்டங்கள் நிகழ்ந்த வண்ணமே இருக்கும். ஆயுதத்தால் எதையும் சாதிக்க முடியாது என்பதையும் ஆன்ம நேசத்தினாலேயே அகிலத்தை வெற்றி கொள்ளலாம் என்பதையும் மனிதகுலம் மனங்கொள்ளும் வரை மனித உரிமைப் போராட்டங்கள் வீறு கொண்டே விளங்கிக்கொண்டிருக்கும். எனவே மனித உரிமையை பேணிக்காக்க வேண்டும்.

**செல்வன் த. பிரியதர்சன்**
கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாப்போம்

எம்மைச் சுற்றியுள்ள அனைத்துமே சுற்றுப் புற சூழல் எனப்படும். சுற்றுப்புறச் சூழலில் நீர், நிலம், காற்று என்பன முக்கியமானதாகும். சுற்றுப்புறச்சூழல் பல செயற்பாடுகள் காரணமாக மாசடைகின்றது. சுற்றுப்புறச் சூழல் மாசடைவதில் மனித செயற்பாடுகள் அதிக செல்வாக்கு செலுத்துகின்றன. இயற்கையின் சில செயற்பாடுகள் காரணமாக சுற்றுப்புறச் சூழல் மாசடைகின்றது.

சுற்றுப்புறச்சூழலில் நீர், நிலம், காற்று ஆகியவை மனித செயற்பாட்டால் மிகவும் பாதிப்படைகின்றது. இம் மூன்றும் மாசடைவதால் மனிதனிற்கு பல உயிரிழப்புக்கள் ஏற்படுகின்றன. நீர், நிலம், காற்று ஆகியவை மனித வாழ்க்கையில் மிக முக்கியமானவை ஆகும்.

சுற்றுப்புறச்சூழல் மாசடைவதில் நீர் பெரும் பாதிப்படைகின்றது. நீர் எவ்வாறு மாசடைகின்றது என்பதை அவதானிப்போம். நீர் மாசடைவதில் மனித செயற்பாடுகளும் இயற்கைச் செயற்பாடுகளும் செல்வாக்குச் செலுத்துகின்றன. நீர் மனித செயற்பாடு காரணமாக எவ்வாறு மாசடைகின்றது? மனிதன் நீரில் குப்பைகளை கொட்டுதல், குளங்களில் செல்லப் பிராணிகளைக் குளிப்பாட்டுதல், இறந்த விலங்குகளை அல்லது விலங்குப் பாகங்களை குளங்கள் ஆறுகள், நன்னீர் கிணறுகள் ஆகியவற்றில் இடல், கடலில் செல்லும் கப்பலின் எண்ணெய் கழிவுகள் நீரில் கலப்பதாலும் நீர் மாசடைகின்றது.

நாம் நீரை பாதுகாப்பதற்குப் சில நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அவற்றில் சில நீரில் குப்பைகளைக் கொட்டுவதை தவிர்த்தல், ஆறுகளில் குளங்களில் குப்பைகளை கொட்டுவதை தவிர்த்தல், இறந்த விலங்குகளை நன்னீரில் வீசுவதைத் தவிர்த்தல் ஆகியவை நீரை அசுத்தமடையாது பாதுகாப்பதற்கான வழிகளில் சிலவாகும்.

மனித செயற்பாடுகள் காரணமாக எமது சூழலிலுள்ள நிலங்களும் மாசடைகின்றன. நிலம் மனிதனின் பல்வேறு தேவைகளுக்குப் பயன்படுகின்றது. மனிதனின் மேலதிக இரசாயனப் பொருட்களின் பயன்பாடு காரணமாக மாசடைகின்றது. நிலம் மாசடைவதில் மனித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணிகளும் சில உள்ளன. இவற்றுள் சில நிலத்தினுள் பொலித்தீனை தாழ்த்தல், இரசாயனப் பொருட்களின் பாவனை காரணமாக நிலம் மாசடைகின்றது.

நாம் நிலத்தைப் பாதுகாப்பதற்கு சில நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் அவற்றில் சில நிலத்தினுள் பொலித்தீனைத் தாப்பதைத் தவிர்த்தல், பொலித்தீன் பாவனையைக் குறைத்தல், விவசாயத்திற்கு இரசாயனப் பாவனையைத் தவிர்த்து ஆட்டெரு, மாட்டெரு, கூட்டெரு என்பவற்றை பயன்படுத்தி நமது நிலத்தைப் பாதுகாக்க வேண்டும்.

நாம் உயிர் வாழ்வதற்கு காற்று மிக முக்கியமானதாகும். நாம் மட்டுமல்ல உலகிலுள்ள உயிரினங்கள் உயிர் வாழ்வதற்கும் காற்று மிக முக்கியமானதாகும். நாம் காற்றைப் பல தேவைக்குப் பயன்படுத்துகின்றோம். அவற்றில் சில, நாம் உயிர் வாழ்வதற்கு, சிறுவர்கள் பட்டம் ஏற்றி விளையாடுவதற்கும், மீன் பிடிக்கச் செல்வதற்கு என்று பல தேவைக்காக பயன்படுத்துகின்றோம்.

நாம் பல வேளையில் வளியை மாசடையச் செய்கின்றோம். அவையாவன பொலித்தீனை எரித்தல், ரயர்களை எரித்தல் என்பவற்றின் மூலம் வளி மாசடைகின்றது. ஆகவே நாம் எமது சுற்றுப்புறச் சூழலலை பாதுகாத்து வருங்கால சந்ததியினருக்கு வழிவிடுவோம்.

**செல்வன் தி. லதுர்சன்**
10ம் ஆண்டு
யா/ நாவற்குழி மகா வித்தியாலயம்

மிகச் சிறந்தவர்கள் ஆற்று நீரைப்போன்றவர்கள், தூய்மை யானவர்கள். ஓடிக்கொண்டே இருப்பவர்கள். தேக்கநிலை இல்லாதவர்கள். ஆற்றுநீரைப்போல் பிறர்க்குப் பயன்படுபவர்கள். தங்களுக்குத் தேவையானவற்றைப் பெற்றுக்கொண்டே இருப்பார்கள். மேடு, பள்ளம், குளம், குட்டை என்ற பேதம் ஆற்றுக்கு இல்லாதது போன்று உயர் குணம் கொண்டவர்களும் பேதமின்றி அனைவர் நலத்துக்காகவும் உழைப்பர். முன்னேறுவர். வெல்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் சென்ற கல்வி சுற்றுலா

எனது பாடசாலை மாணவர்கள் கல்வி சுற்றுலா செல்லத் தீர்மானித்தோம். தீர்மானித்த படி 2019 ஆம் ஆண்டு 4 ஆம் மாதம் 8ஆம் திகதி எமது பாடசாலையில் இருந்து எமது கல்விச் சுற்றுலாவை ஆரம்பித்தோம். இரவு 8.00 மணிக்கு ஆரம்பமாகி இரவு 11.30 மணிக்கு முருகண்டி பிள்ளையார் கோயிலுக்குச் சென்றிறங்கி அங்கு வீற்றிருந்த விநாயகரை வணங்கி மீண்டும் எம் பயணத்தை ஆரம்பித்தோம். பல கிலோமீற்றர்களுக்கு அப்பால் மாத்தளை முத்து மாரியம்மன் கோயில் மண்டபத்திற்கு சுமார் 2.00 மணியளவில் சென்றடைந்து அங்கு சிறிது நேரம் ஓய்வில் ஈடுபட்டோம்.

09.04.2019 அன்று குளித்து தோய்த்துலர்ந்த ஆடை அணிந்து பக்தியோடு முத்துமாரியம்மனைத் தரிசித்து அங்கு பல காட்சிகளையும் கண்டோம். அவையாவன மாத்தளை முத்துமாரியம்மன் கோயிலானது மிகப் பெரியது அது நவதள கோபுர அமைப்பையும் அதன் நாலாபுறம் மலை சூழ்ந்து இயற்கை அழகு மெருகூட்டியவாறு அமைந்து இருந்தது.

அங்கிருந்து இலங்கையின் புகழ் மிக்க பெரதேனியா தாவரவியற் பூங்காவிற்கு சென்றோம். அங்கு ஆசிரியர்களின் வழி நடத்தலின் கீழ் அங்கிருந்த தாவரங்களையும் அவற்றின் விஞ்ஞானப் பெயர்களையுமே அறிந்தோம். காலை நேர உணவை அங்கே உண்டு விட்டு அடுத்த இடத்திற்கு செல்ல ஆரம்பித்தோம்.

அடுத்ததாக பெரிய புத்தர் சிலைகளைக் கொண்ட விகாரைக்கு சென்று பல வகையான புத்தரின் வரலாற்றையும் அவரின் ஒழுக்க நெறிகளையும் எழுத்து பூர்வமாக கண்டு களித்தோம். அங்கிருந்து மாத்தளை இந்து கல்லூரிக்குச் சென்று இரவு நேர உணவை உண்டு சந்தோசத்தோடு ஓய்வில் ஈடுபட்டோம்.

10.04.2019 அன்று மாத்தளை இந்து கல்லூரியில் இருந்து கண்டி நகரத்திற்கு சென்றோம் அங்கு புகழ்மிக்க தலதாமாளிகையை சென்றடைந்து அங்கிருந்து புதுமைகள் பழமைகள் அறிந்து கொண்டு இன்னும் பல இடங்களையும் பார்த்து விட்டு நுவரெலியா நோக்கி புறப்பட்டோம். அது ஒரு மலைநாடு உயரத்தில் ஏற ஏற குளிர்ந்தது மிகவும் குளிர்ச்சி பொருந்திய இயற்கை காட்சியை தந்தது. அங்கிருந்த அனுமன் கோயிலை தரிசித்து அங்குள்ள மடத்தில் மதிய போசனம் உண்டு அங்கிருந்து புறப்பட ஆரம்பித்தோம். அங்கிருந்து திருகோணமலையை நோக்கி புறபட்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11.04.2019 இறுதி நாள் திருகோணமலை சீமெந்துத் தொழிற்சாலையைப் பார்க்கச் பார்க்கச் சென்றோம். அங்கே சீமெந்து எப்படி செய்யப்படுகின்றது என அறிந்து கொண்டோம். அங்கிருந்து திருக்கோணேச்சரத்துக்கு சென்று அங்குள்ள இறைவன் இறைவியை வழிபட்டு பின் 4.00 மணியளவில் அங்கிருந்து புறப்பட்டு எமது பாடசாலைக்கு வந்தோம். இத்துடன் எமது கல்வி சுற்றுலா இனிதே நிறைவு பெற்றது.

**செல்வன் லக்ஷன்**
10ம் வகுப்பு
கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை

**கன்னியிவள் கனிதாராளோ**

பருவமழை பொழிந்திங்கு பயிரெலாம் செழித்திருக்கு
பருவமகள் மொந்தனாய் மதர்த்துக் காத்திருக்கிறாள்
அழகுடையாள், அறிவுடையாள், ஆசிரியராயு மிருக்கிறாள்.
மணமாகவில்லை மனத்துயரில் அவளும், நாமும்.

வேலையின்றித் தெருவம்ப ளப்பவரும், பேரழகும்
பெருநிதியும் கல்வீடும் காரும் வேண்டுகிறார்
எம்வீடோ சிறுகுடிசை ஏழைகள் நாமெங்குபோக
ஏற்றுமதிப் பெண்களோ அங்கபோய் சீரழியுறார்.

வாத்தியார் பெடியன் வந்தின்று பார்த்தான்
வரதட்சணை அதிகம் வேண்டாவாம், தன்
பெற்றோர் மூத்தோராம் பேணி அவரைப்
பார்த்திடல் வேண்டுமாம் கைப்பற்றுவேன் என்றான்.

வேலைக்கும் போகவேண்டும், வேளைக்கு எழுந்து
காலைச்சமையல், மதியவுணவு மருந்துநீர் எடுத்து
வைத்திட வேண்டுமாம். மாதச்சம்பளமும் தந்திடட்டாம்
பேசாமலிவரொரு வேலைக்காரப் பெண்ணைக் கட்டட்டும்.

பருவமேறிக் கழிந்து நரையும் சிரிக்கிறது
திருநிறைச் செல்வியாய் வாழ்ந்தாள் வீட்டில்
திருமணத்தில் இத்துணை சிக்கல், வாழ்நாளில்
கலியாணம் நடவாதோ, கன்னியிவள் கனிதாராளோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பதால் உயர்வோம் காலத்தை வெல்வோம்
## கந்தையா கனகம்மா நிதியம்
## பரிசில் நாள் 2020

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் தேர்வு இன்று எல்லோராலும் பேசப்படுகின்றதாகிவிட்டது. பிஞ்சுக் குழந்தைகளை விரட்டி, விரட்டி தனியார் கல்வி நிலையங்களுக்கு மாற்றி மாற்றி இறக்கி ஏற்றி விடுகின்றனார். அவர்களை விளையாடவிடுவதேயில்லை. சுயமாகக் கற்க விடுவதுமில்லை. இயற்கையாக எழும் உணர்வுகளால் அவன் படிப்பதில்லை. தனியார் வகுப்புகளில் வழங்கப்படும் கேள்வி பதில்களைப் பாடமாக்கி வைத்துவிட்டுப் பொருத்தமான (பொருத்தமற்ற) இடங்களில் எழுதுவதால், தவறும் விடுகின்றனர். சுயமாகப் படித்துத் தேர்ந்து அறிந்து வைத்திருக்கும் ஒருவராலேயே கேள்விகளைப் புரிந்து பதில் எழுதமுடியும். அரசாங்கமும் இவ்வளவு மாணவர்களுக்குத்தான் புலமைப்பரிசில் வழங்கமுடியும் என்று நிர்ணயிப்பதால், ஆண்டுக்காண்டு வெட்டுப்புள்ளிகள் வேறுபடுகின்றன. ஆயினும் 100 புள்ளிகளுக்குமேல் பெற்றவர்களை நாம்கௌரவித்து ஊக்குவித்து வருகின்றோம். அவ்வகையில் 2019 ஆண்டு புலமைப்பரிசில் தேர்வில் சித்தியடைந்த மாணவர்கள்.

1. செல்வி மதுநிதா ஐங்கரன் — 174
   யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை
2. செல்வன் தனுசாந்த் பிரபா — 164
   யா/நாவற்குழி மகாவித்தியாலயம்
3. செல்வன் சுபஸ்திகன் நந்தகுமார் — 157
   யா/கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலை
4. செல்வன் டசிதரன் பாஸ்கரன் — 153
   யா/கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலை
5. செல்வன் மதுசன் ரவிச்சந்திரன் — 150
   யா/நாவற்குழி மகாவித்தியாலயம்
6. செல்வி அதிஷ்டதாரணி ஜெனார்த்தன் — 139
   யா/நாவற்குழி மகாவித்தியாலயம்
7. செல்வி ஜெசியா அன்ரனீஸ் — 134
   யா/நாவற்குழி மகாவித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. செல்வி அனுஸ்கா ஜோர்ச்கெனடி 127
யா/நாவற்குழி மகாவித்தியாலயம்

9. செல்வன் சாம்சன் ஜெபநேசன் 125
யா/நாவற்குழி மகாவித்தியாலயம்

10. செல்வி லக்ஷிகா ரவிசங்கர் 118
யா/நாவற்குழி மகாவித்தியாலயம்

11. செல்வன் சபீசன் சின்னத்துரை 116
யா/நாவற்குழி மகாவித்தியாலயம்

12. செல்வன் குணாளன் தனுசியாஸ் 103
யா/நாவற்குழி மகாவித்தியாலயம்

13. செல்வன் பகீசன் இராசகுமார் 101
யா/நாவற்குழி மகாவித்தியாலயம்

14. செல்வன் விஜயகுமார் கின்சன் 110
யா/நாவற்குழி மகாவித்தியாலயம்

15. செல்வி றெஸ்மி றெஜினோல்ட் 101
யா/நாவற்குழி மகாவித்தியாலயம்

16. செல்வன் சிவநாதன் எல்சாய் 100
யா/நாவற்குழி மகாவித்தியாலயம்

17. செல்வி தர்மினி பிரேமநாதன் 147
யா/கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலை

18. செல்வி ஜஸ்மினி வசந்தன் 145
யா/கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலை

19. செல்வன் தயாளன் சாய்ராஜ் 144
யா/கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலை

20. செல்வி பிரியங்கா பிரபாகரன் 133
யா/கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலை

21. செல்வி டிஷானா அன்புத்துரை 128
யா/கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலை

22. செல்வன் யசோதரன் கௌதமன் 126
யா/கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. செல்வி கேஷனா ரஞ்சன் 119
யா/கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலை

24. செல்வி கயல்விழி கேதீஸ்வரன் 109
யா/கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலை

25. செல்வன் தர்மேஸ்வரன் சங்கீதன் 109
யா/கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலை

26. செல்வி அவிசிகா ரமேஸ்வரன் 115
யா/மறவன்புலவு சகலகலா வல்லி வித்தியாலயம்

27. செல்வன் விஜயகுமார் சாகித்தியன் 112
யா/கோவிலக்கண்டி மகாலஷ்மி வித்தியாலயம்

28. செல்வன் உ. சானுஜன் 129
யா/கோவிலக்கண்டி மகாலஷ்மி வித்தியாலயம்

29. செல்வி. ஜெ. டர்ஜினா 128
யா/கோவிலக்கண்டி மகாலஷ்மி வித்தியாலயம்

30. செல்வன் ஜெ. நவிவாணன் 105
யா/கோவிலக்கண்டி மகாலஷ்மி வித்தியாலயம்

31. செல்வி அ. அகலியா 102
யா/கோவிலக்கண்டி மகாலஷ்மி வித்தியாலயம்

32. செல்வன் பு. நர்த்தனன் 101
யா/கோவிலக்கண்டி மகாலஷ்மி வித்தியாலயம்

33. செல்வி ஆ. மதுசாயினி 121
யா/தனங்கிளப்பு அ.த.க.பாடசாலை

34. செல்வன் ச. சாகித்தியன் 116
யா/தனங்கிளப்பு அ.த.க.பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க.பொ.த சாதாரண தர பரீட்சை மார்கழி 2019

ஆண்டுதோறும் அரசபொதுதேர்வுகளில் சித்தியடையும் இப்பிரதேச மாணவர்களை ஊக்குவித்தும், கௌரவித்தும் வரும் நாம் கல்விப்பொதுத் தாரதரப் பரீட்சை மார்கழி 2019இல் தோற்றிச் சித்தியடைந்த மாணவர்களை இவ்வருடமும் [2020] கௌரவிக்கின்றோம்.

**நாவற்குழி மகாவித்தியாலய மாணவர்கள்**

| | | |
|---|---|---|
| 1. | செல்வி நிலவரசி சதானந்தன் | 6A 2B C |
| 2. | செல்வி ஒல்வியா டிலக்சானி ஜெயச்சந்திரன் | 5A 4B |
| 3. | செல்வி சுவேதா விஜயகுமார் | 5A 3B C |
| 4. | செல்வி விதுர்சிகா குலசீலன் | 3A 4B C S |
| 5. | செல்வி இமின்சிகா அருளானந்தம் | 3A 3B 3C |
| 6. | செல்வன் கிருபாகரன் வெண்ணிலவன் | 2A 4B 2C |
| 7. | செல்வன் சண்முகராசா வாகீசன் | 3B 4C S |
| 8. | செல்வி சங்கீதா சசிகுமார் | 2B 4C 3S |
| 9. | செல்வி தமிழ்வாணி அருமைத்துரை | B 4C S |
| 10. | செல்வன் சுரேஸ்கரன் மதுஸ்கரன் | 7C |
| 11. | செல்வன் இராசலிங்கம் சங்கரன் | 5C 2S |
| 12. | செல்வன் லூர்த்தன் யேசுதாசன் | 5C 2S |
| 13. | செல்வன் இராசசேகரம் திருசாந்த் | 4C 3S |
| 14. | செல்வன் தருமராசா கீர்த்திகன் | 3C 4S |
| 15. | செல்வன் உருத்திரன் ஜீவசங்கர் | 3C 4S |
| 16. | செல்வி யதுர்சனா வசந்தராசா | 2C 5S |

**கைதடி நாவற்குழி தெற்கு அ.த.க.பாடசாலை மாணவர்கள்**

| | |
|---|---|
| செல்வன் ஞானச்சந்திரன் ஐதுர்ஜன் | 2A B 3C 3S |
| செல்வன் கிரிசான் நிரஞ்சன் கேசுமன் | 3C 5S |
| செல்வி பிருந்தா அழகேந்திரம் | 4A 2B 3C |
| செல்வி லேதுஜா இராசேந்திரம் | 2C 5S |
| செல்வி சாருண்ஜா சற்குணம் | 6A B 2C |
| செல்வி தாட்சாயினி ஜெயராஜ் | 3C 3S |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| செல்வி கஜனி குகேந்திரன் | 2A 4B C 2S |
| செல்வி வினோதா பவானந்தன் | 4C 3S |
| செல்வி துவாரகா தர்மதாஸ் | A 2B 4C S |
| செல்வி சுகன்ஜா ஸ்ரீதரன் | A 2B 4C S |
| செல்வி கிருசாளினி நவினகுமார் | A 2B 5C S |

**வெளியூர்ப் பாடசாலை மாணவர்கள்**

| | |
|---|---|
| செல்வி அக்ஷயா பிரபாகரன் | 2A B 5C S |
| செல்வி விதுஷா சத்தியலிங்கம் | 3A 3B 3C |
| செல்வி கஜானா புஸ்பராசா | 8A B |
| செல்வி கோமகள் தவராசா | 6A B 2C |
| செல்வி கதிர்விழி ஸ்ரீதரன் | 7A 2B |
| செல்வி சாய்பிரியா ஜெயசிங்கம் | 4A 3B 2C |
| செல்வன் ரவீந்திரன் டினூசன் | 2B 4C 3S |
| செல்வி லோஜிகா அண்ணாமலை | 5A 2B 2C |

**க.பொ.த (உயர்தரம்) ஆவணி 2019**

**ஆண்டு தோறும் பொதுத்தேர்வுகளில் சித்தியெய்தும் மாணவர்களைக் கௌரவித்தும் ஊக்குவித்தும் வருகின்ற தொடரில் இவ்வருடம் கா.பொத 2019 உயர்தரத்தில் சித்தியெய்திய மாணவர்கள்**

| | |
|---|---|
| 1. செல்வி தங்கவேலு விஜிந்தா | 3A |
| 2. செல்வி அனோஜா அழகராசா | 2A B |
| 3. செல்வன் ஞானசேகர் ரஜீவன் | A 2B |
| 4. செல்வன் ஜெயச்சந்திரன் ஜெயக்குமார் | A 2B |
| 5. செல்வி தருமராசா கீர்த்தனா | 2B C |
| 6. செல்வி யுனிஸ்ரா திலகரத்தினம் | 3B |
| 7. செல்வி ஜெயசீலன் கீதாஞ்சலி | 2B C |
| 8. செல்வி சுஜீவா டேவிட்ராஜா | 2B C |
| 9. செல்வி ஜெயசீலன் டிலக்சனா | 3C S |
| 10. செல்வி அனேஜா அருளானந்தம் | 3C |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. செல்வி ஜானச்சந்திரன் டௌசிகா 2C 2S
12. செல்வி சிவனேஸ்வரன் கஜந்தா 2C S
13. செல்வி மதன் கிரிஷ்ணா C 2S
14. செல்வன் பிரியதாஸ் பாலரத்தினம் 2C S
15. செல்வன் இ. சயந்தன்
16. செல்வன் ப. இந்துஜன்
17. செல்வன் க. பிருந்தன்
18. செல்வன் கி. பகீரதன்
19. செல்வி ந. மதுஷா

கற்பதால் உயர்வோம் காலத்தை வெல்வோம்

வழமைபோல இவ்வாண்டும் (2020) ஆண்டு 1 இல் இணைந்து கொண்ட இப்பிரதேசத்து மாணவர்களுக்கு புத்தகப்பை, நல்வழிநூல், தொப்பி, கற்றல் உபகரணங்களும் வழங்கப்பெற்றன.

**நாவற்குழி மகா வித்தியாலய மாணவர்கள்**

**1A**

1. மோகனகுமார் சஷான்கன்
2. சசீந்திரன் கீர்த்திகன்
3. விதுரன் றொக்கன்
4. விஜேந்திரன் எஸ்ரோம்
5. விஜிதரன் அபிநாத்
6. கிரிதரன் அஜய்
7. ஜொசாயா கெர்சோன்
8. றொபின்சன் ஷானுஜன்
9. சிவநாதன் எல்றோய்
10. டொல்லி திலேங்சன்
11. அன்ரனஸ் அஸ்வின்
12. குமரன் நிருஷன்
13. இராசகுமார் மிதுர்சன்
14. துஷாந்தன் துஷயந்தன்
15. மயூரன் ஜெப்தா
16. நித்தியகுமார் ரத்திஹன்
17. அமிர்தலிங்கம் தஸ்றிகா
18. ஜொர்ச்கெனடி அமிசாலினி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. மதிஷ்கரன் வானிஷா
20. சுதாகர் கர்ணிகா
21. இருதயராசா இஷாரா
22. விநின்காந்தன் தனப்பிரியா
23. கஜீபன் றியோசிகா
24. றொயிஸ் அஸ்மிதா
25. சதீஸ்வரன் தஷானா
26. மரியராஜ் நிலாயினி
27. மகேந்திரன் சாளினி

**1B**

28. சிவயோகன் கவின்
29. சுரேஷ்குமார் திஷான்
30. சிவானந்தன் சீனு
31. விமலன் சிவயோன்
32. சுரேஸ் பிருதிகன்
33. கலீன் டனுசன்
34. மதேஸ்வரன் ஜெப்புரோன்
35. இராசேந்திரன் மிதுசன்
36. வினோதரூபன் ஹரிஷ்
37. விஜயரூபன் ராகுல்
38. நந்தகுமார் இலக்கியா
39. யூட்ரோமியன் யுவின்
40. பவளத்துரை வர்ணிகன்
41. லால்விக்கிராமா சந்தோஷ்
42. நிசாந்தன் கஜலக்ஷனா
43. மதிவதனன் யக்சனா
44. நாகதீபன் தீபிகா
45. வசந்தராசா விதுஷிகா
46. கமிற்றன் பிரியங்கா
47. கமலதாஸ் றொக்ஸ்மிகா
48. சிவசக்தி சுதாகினி
49. செல்வம் ஷபினா
50. பிரதீபன் செபஸ்ரினா
51. முரளி செலோமி
52. சிவஈஸ்வரன் டன்சிகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யா / கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை மாணவர்கள்**

53. தயாசீலன் டிகாந்தராஜ்
54. சுரேஸ்குமார் தரணிகரன்
55. தயாபரன் நிதுஷிகன்
56. ஜெயசோதி விதுஷன்
57. லோகேஸ்வரன் ஷாஜகான்
58. பிறேமநாதன் லக்ஷாஜினி
59. தருமசீலன் லோஜினி
60. தவராசா கன்சிகா
61. பார்த்தீபன் கவிநயா
62. பாஸ்கரன் வைஸ்ணவி
63. விஜயகுமார் சந்தியா
64. குலரூபன் அக்ஷியா
65. வரதராசா சுவஸ்திகா

**யா / மறவன்புலவு சகல கலாவல்லி வித்தியாலயம்**

66. வதனபாலன் வகீசன்
67. பகீரதக்குமார் தனுசாந்த்
68. சுஜேந்திரன் நித்தியா
69. நிஷாந்தன் மபிஷா
70. அரவிந்தன் அஸ்வினி

**யா/ கோவிலாக்கண்டி மகாலக்ஷ்மி வித்தியாலாயம்**

71. சசீலன் சமின்
72. மனோகரன் கிசாணன்
73. ஜெயசிந்தன் சுபிச்சன்
74. அமுதராசா ஆகாஷ்
75. தியாகராசா ஜெயாண்ன்
76. கிருஷ்ணகுமார் திஷானி
77. ஜெயதீஸ் நிலக்ஷி
78. கிரிதரன் கோபிகா
79. சங்கரப்பிரியன் அச்சுதசர்மா

**யா/தனங்கிளப்பு அ.த.க. பாடசாலை**

80. சண்முகம் அஸ்வித்
81. சண்முகம் அஸ்விந்
82. சிறீதரன் அஸ்மிகா
83. சபேசன் டிலக்ஷியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களுக்கு உயிரெழுத்து அகராதியுடன் சீருடைத்துணிகளும் கற்றல் உபகரணங்களும் வழங்கப்பெற்றன. சீருடைத்துணிகளை வழங்கலில் எம்முடன் இணைந்து கொண்ட பொன்னம்மா வீதி வண்ணார் பண்ணையைச் சேர்ந்த திரு. பா. கணநாதன் அவர்கள் இணைந்து கொண்டார் அவர்களுக்கும் எமது நன்றிகள்

## ஆண்டு 6இல் இணைந்து கொண்ட மாணவர்கள் 2020

**யா/ நாவற்குழி மகாவித்தியாலயம்**

6A வகுப்பு

1. சின்னத்துரை சபிசன்
2. துஷாந்தன் துரிஷாந்த்
3. றொபின்சன் கொன்சலின்
4. இராசகுமார் பகீசன்
5. சசிதரன் செரோன்
6. ஆனந்தராசா மெல்கிசன்
7. சுயதீபன் தனுசன்
8. லிந்தூபன் டினுசாந்த்
9. ஜெனிரவி சுபாஸ்
10. விதுரன் மிலேங்ரன்
11. சௌந்தரராசா மமிசா
12. முகந்தராசா கிறிஸ்ரின்தெயே
13. ஜோர்ஜ்கெனடி அனுஷ்கா
14. அன்ரனைஸ் ஜெசியா
15. ஜோஜ்கில்மன் ஜெசி
16. ஸ்ரீசங்கர் கௌசா
17. சிவனேசன் பிரியங்கா
18. ரவிச்சந்திரன் ருக்ஷிகா
19. மேவின் றிஜானா
20. குமரன் சாருகா

6B வகுப்பு

21.ஜெனிபறோ கௌதம்
22. விஜயகுமார் கின்சன்
23. குணாளன் தனுசியஸ்
24. ஜெயநேசன் விம்சன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. சிவநாதன் எல்சாய்
26. விஜயராகவன் துவாரகன்
27. நாகேந்திரன் அபிஷாக்
28. வசந்தகுமார் துளக்சன்
29. மதியழகன் அச்சுதன்
30. கமலதாஸ் றொக்ஷிகன்
31. சண்முகம் சதீஸ்
32. கேதீஸ்வரன் அடிசாந்த்
33. வசந்தன் ஜனுசியா
34. தீபன் திலக்சன்
35. றெஜினோல்ட றெர்மி
36. ஜெனார்தன் அதிஷ்டதாரணி
37. ஸ்ரீ ஜெகன் நிருசா
38. விஜயகுமார் பாவனா
39. விஜயகுமார் பவித்திரா
40. சீவரத்தினம் சானுகா

**யாழ் / கைதடி நாவற்குழி அ.த.கபாடசாலை மாணவர்கள்**

41. தர்மேஸ்வரன் - சங்கீதன்
42. பாஸ்கரன் டசிதரன்
43. தயாளன் சாய்ராஜ்
44. நந்தகுமார் சுவஸ்திகன்
45. யசோதரன் கௌதமன்
46. பிரகாஸ் சாரங்கா
47. அன்புத்துரை டிசானா
48. கேதீஸ்வரன் கயல்வழி
49. பிரபாகரன் பிரியங்கா
50. வசந்தன் ஜஸ்மி
51. ரமேஸ்வரன் அவிசியா
52. பிரேமநாதன் தர்மினி

**யா / மறவன்புலவு சகல கலாவல்லி வித்தியாலயம்**

53. சுரேஸ்குமார் கஜீபன்
54. அகிலன் சியாம்
55. விஜயகுமார் சாகித்தியன்
56. பிரதாப் பிரவீன்
57. ரமேஸ்வரன் அவிசியா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA

16 SEP 2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA

16 SEP 2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியம் காத்தல் செய்வோம்

சாந்தனையும் சேவை புரிவோம்

சினமதை அகற்றி வைப்போம்

சீரியர் உறவு கொள்வோம்

சுற்றத்தோடு இணங்கி வாழ்வோம்

சூக்கும அறிவு வளர்ப்போம்

செல்வமிகச் சேர்த்துப் பகிர்வோம்

சேரிடம் அறிந்து சேர்வோம்

சையமாய் உயர்ந்து நிமிர்வோம்

சொற்சோர்வு அறுத்து எழுவோம்

சௌக்கியம் என்றும் காப்போம்

விச்சையில் இச்சைகொண்டு உயர்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org